விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

உங்கள் இருபது அவர்களுக்கு வாழ்வைத்தரும்

இன்றைய சுப்பர் பரிசு ரூ.3,236,613.50/-

சுடர் 30 கதிர் 269 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 5, சனிக்கிழமை 22.08.2015

# ஐ.நா. விசாரணை அறிக்கை இன்று ஜனாதிபதியிடம்

## மைத்திரியுடன் ஐ.நா. செயலர் தொலைபேசியில் உரையாடல்

கொழும்பு, ஓகஸ்ட் 22

இலங்கையில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் இரகசியப் பிரதி இன்று சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆணைக்குழு விசாரணை நடத்தியிருந்தது. எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் விசாரணை நடத்தினால், ஐ.நா மனித உரிமைகள் சபை அமர்வுகள் ஆரம்பமாகும் முன்னதாகவே அந்த அறிக்கையை குறித்த நாட்டுக்கு இரகசியமாக வழங்குவது வழமையானதாகும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த இரகசிய அறிக்கை இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ.நா. பொதுச் செயலருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தத் தொலைபேசி உரையாடலை ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்போது, அமைதியான முறையில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியதற்காக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மேலும், அடுத்த மாதம் நியூயோர்க்கில் ஆரம்ப

பக்கம் 24

## பிரதமராக ரணில் பதவிப் பிரமாணம்



கொழும்பு, ஓக. 22

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை புதிய பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் 10.03 மணியளவில், ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாகப் பதவியேற்றார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குத் தேசிய அரசை அமைப்பது தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், ஜனாதிபதி செயலகத்தில் இந்த உடன்பாடு

பக்கம் 24

## மஹிந்தவுக்குக் கைலாகு கொடுக்க மறுத்த ரணில்



கொழும்பு, ஓக .22

புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்கும் வைபவம், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் கலந்து கொண்டிருந்தார். மஹிந்தவுக்கு முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரும்போது எல்லோரும் எழுந்து நின்றனர்.

இதன்போது முன்வரிசையில் அமர்ந்திருந்த மஹிந்தவும் எழுந்து நின்று, ரணிலுக்குக்கைகொடுக்க முயன்றார். இதன்போது ரணில் விக்கிரமசிங்க பேசாமல் சென்று விட்டார். இருக்கையில் அமர்ந்த பின்னரே, மஹிந்தவுக்கு அவர் கைகொடுத்தார்.

பதவியேற்பு வைபவம் நிறைவடைந்த பின்னர், மஹிந்தவை நோக்கி வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவுக்குக்

பக்கம் 24

## தோல்வியுற்ற அங்கஜனுக்கும் தேசியப் பட்டியலில் வாய்ப்பு

### வழங்கியது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

கொழும்பு, ஓக. 22

பெரும் இழுபறிக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டது. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த அங்கஜன் இராமநாதனுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

12 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் ஊடாக ஐ.ம.சு.முன்னணியில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பலரின் பெயர்கள் இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

சரத் அமுனுகம, டிலான் பெரேரா, விஜித் விஜிதமுனி சொய்சா, எஸ்.பி.திஸாநாயக்க, மஹிந்த சமரசிங்க, லக்ஷ்மன் யாப்பா அப

பக்கம் 24

## மக்களின் ஆணையை மைத்திரியும் ரணிலும் நிறைவேற்றவேண்டும்

### வலியுறுத்துகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும், அவர்கள் தலைமையில் உருவாகும் தேசிய அரசும் நாட்டின் நல்லாட்சிக்காக மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றவேண்டும். அத்துடன், நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தாமதமின்றி உடன் தீர்வைக் காணவேண்டும். இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிபூரண ஆதரவை - ஒத்துழைப்பை வழங்கும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பக்கம் 24

## புதிய எம்.பிக்கள் பெயர் விவரம் வர்த்தமானியில்

கொழும்பு, ஓக. 22

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 196 உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் திணைக்களத்தினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் வழங்கப்பட்ட ஆணைக்கு அமைய, இந்த சிறப்பு வர்த்தமானி அரச அச்சகத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதில் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு கட்சிகளில் இருந்தும் தெரிவாகியுள்ள - 196 உறுப்பினர்களின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அதேவேளை, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்கள்

பக்கம் 24

## தேசிய அரசை எதிர்ப்போரை கலையுங்கள்

கொழும்பு, ஓக. 22

தேசிய அரச கொள்கைகளுக்கு இணங்காத சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிடும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்

பக்கம் 24

## சபாநாயகராக கரு ஜெயசூரிய

கொழும்பு, ஓக. 22

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ள புதிய நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இவரது பெயர் முன்மொழியப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.கவின் தேசியப் பட்டியலில் கரு ஜெயசூரியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் புதிய நாடாளுமன்றத்தின் முதல் உறுப்பினராக கரு ஜெயசூரிய பதவியேற்கவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.(த்)

## 47 மாகாண சபை உறுப்பினர்கள் இம்முறை எம்.பிக்களாக தெரிவு

கொழும்பு, ஓக. 22

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 47 மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபையிலிருந்து இரண்டு உறுப்பினர்களும், (த.சித்தார்த்தன் சி.சிவமோகன்), கிழக்கு மாகாணத்திலிருந்து 4 உறுப்பினர்களும், மேல் மாகாண சபையிலிருந்து 12 உறுப்பினர்களும், தென் மாகாணத்திலிருந்து 5 உறுப்பினர்களும், மத்திய மாகாண சபையிலிருந்து 6 உறுப்பினர்களும், சப்பிரகமுவ மாகாண சபையிலிருந்து 7 உறுப்பினர்களும், வடமேல் மாகாண சபையிலிருந்து 5 உறுப்பினர்களும், ஊவா மாகாண சபையிலிருந்து 4 உறுப்பினர்களும், வடமத்திய மாகாண சபையிலிருந்து 2 உறுப்பினர்களுமாக 47 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (த-5)

### மாற்றத்தை தொடர்வதற்கான வாக்கு



பக்கம் 17

## ஐ.தே.க. தேசியப் பட்டியலில் சுவாமிநாதன் மட்டுமே தமிழர்

கொழும்பு, ஓக. 22

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெற்ற 13 தேசியப் பட்டியல் ஆசனங்களுக்குரிய பெயர்ப் பட்டியல் அந்தக் கட்சியினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் தமிழர் ஒருவருக்கு மாத்திரமே சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்தை மீளாய்வு செய்யுமாறு கடிதம்

## விவசாய சேவைகள் ஆணையாளருக்கு வடக்கு ஆளுநர் அனுப்பி வைத்தார்

யாழ்ப்பாணம், ஓக. 22
விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிக்கு வடக்கில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டமையை மீளாய்வு செய்யுமாறு வடக்கு ஆளுநர், விவசாய சேவைகள் ஆணையாளருக்கு அனுப்பி யுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தால், வடக்கில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களாக 361 பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 332 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நியமனம் தேர்தல் காலத்தில் மேற்கொள்ள முன்னெடுப்புச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் உடனடியாகவே வடக்கு மாகாண அவைத் தலைவரால் தேர்தல்கள் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டு, நியமனம் வழங்கல் பிற்போடப்பட்டிருந் தது.
அத்துடன் இந்த விடயம் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆளுநர் உடனடியாகவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். விவசாய சேவைகள் ஆணையாளருக்கு ஆளுநர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நியமனம் தொடர்பில் தமது ஆளுநர் அலுவலகம் அறிந்திருக்கவில்லை. தமிழ் மொழியில் உரையாடத் தெரியாதவர்களை வடக்கில் நியமிப்பது அரச நிதியை விரயம் செய்வதாக அமையும். இரு சமூகங்களுக்கும் இடையில் இது முரண்பாட்டைத் தோற்றுவிக்கலாம். தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு இது குந்தகமாக அமையும் என்றும், எனவே இந்த நியமனத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்– என்று கோரியுள்ளார். (ற-5)

# சுகாதாரச் சீர்கேடு; உற்பத்தி நிலையத்துக்கு ரூ.14 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.22
சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய பனை வெல்ல உற்பத்தி நிலையம் ஒன்றுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று 14 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
ஊர்காவற்றுறையிலுள்ள குறித்த உற்பத்தி நிலையத்தில் பொதுசுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் சோதனை மேற்கொண்டிருந்தார். தற்போது குறித்த நிலையத்தில் பணிபுரிந்தவர்கள் மருத்துவ சான்றிதழ் இன்றி பணியில் ஈடுபட்டமை, தனிநபர் சுகாதாரம் காணப்படாமை, சுகாதாரச் சீர்கேடான வகையில் உற்பத்திகளை வைத்திருந்தமை மற்றும் காலாவதியான பொருள்களை வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.
அதையடுத்து குறித்த நிலையத்துக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
நீதிமன்றில் தன்மீதான குற்றச்சாட்டை குறித்த நிலையத்தின் நடத்துநர் ஒப்புக்கொண்டார். 4 குற்றச்சாட்டுக்களுக்காகவும் அவருக்கு 14 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று. கடந்த வருடமும் குறித்த உற்பத்தி நிலையத்தில் சுகாதாரச் சீர்கேடு நிலவியமை தொடர்பான வழக்கில் நீதிமன்றால் தண்டிக்கப்பட்டிருந்தார். (ற-4)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், ஓக.22
சளியுடன் கூடிய காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த 6 வயதுச் சிறுவன் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தான்.
பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியைச் சேர்ந்த சிவனேஸ்வரன் விலிம்சன் என்ற சிறுவனே அவ்வாறு உயிரிழந்தான்.
தரம் ஒன்றில் கல்வி கற்கும் குறித்த சிறுவனுக்குக் கடந்த 17 ஆம் திகதி இரவு 11 மணியளவில் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. சளியும் இருந்துள்ளது. மறுநாள் 18 ஆம் திகதி சங்கானை வைத்தியசாலைக்குக் குழந்தையைக் கொண்டு சென்று சேர்த்துள்ளனர். அங்கு தொடர்ந்து 3 நாள்கள் விடுதியில் வைத்திருந்த நிலையில் காய்ச்சல் சுகமடையவில்லை. இந்நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் குறித்த சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை 6 மணியளவில் சிறுவன் உயிரிழந்தான்.
விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4,86)

# அறநெறிப் பாடசாலை நடத்துவதில் ஆலயங்கள் முன்நிற்க வேண்டும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் வேண்டுகோள்

அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதில் ஆலயங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டுள்ளார்.
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு நடத்திய யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்வு அருள் நெறி விழா கடந்த புதன்கிழமை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.
அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். யாழ்.மாவட்டத்தில் சில அறநெறிப் பாடசாலைகள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன என்று குறிப்பிட்ட அவர் பல ஆலயங்கள் நிர்வாகம் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்ப்பதற்காக மாவட்டச் செயலகத்துக்கும், நீதிமன்றங்களுக்கும் செல்வதோடு வழக்குக்காக அதிக பணத்தையும் செலவிடுகின்றன. வழக்குக்காகச் செலவிடும் பணத்தை அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு பயன்படுத்தி யாழ். மாவட்டத்தில் அறநெறிக் கல்வியை வளர்ப்பதோடு சிறந்த ஒழுக்க விழுமியங்களைச் சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.
தற்போது யாழ்.மாவட்டத்தில் சில ஆலயங்கள் மிருக பலியிடலைத் தொடர்ந்து நடத்துகின்றன. இந்து மதத்துக்கு முரணான இந்த மிருக பலியிடலை எதிர்காலத்தில் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
அருள் நெறி விழா எனும் தலைப்பில் இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தினரால் நடத்தும் இந்தவிழா அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தும் எனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களகத்தின்செயற்பாடுபாராட்டத்தக்கதுஎனவும் அவர் அங்கு தெரிவித்தார். (ற-ரி3)

# கொடுத்த கடனை கேட்க சென்றவர் மீது தாக்குதல்

கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கச் சென்ற வர்த்தகர் ஒருவரை வாக னத்தால் மோதிக் காயப்படுத்த முயன்றதுடன், இரும்புக் குழாயாலும் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் கடன் வாங்கியவர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியில் நடந்துள்ளது.
குறித்த வர்த்தகர் அந்தப் பகுதியில் கடை வைத்திருக்கிறார் எனவும், கடையில் பொருள்களைக் கடனுக்கு வாங்கி விட்டு பணத்தை நீண்ட நாள்களாக திருப்பிக் கொடுக்காததால் அதனைக் கேட்கச் சென்ற போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
மோத வந்த வாகனத்தை வர்த்தகர் கற்களால் தாக்கியதால் ஆத்திரமடைந்த வாகன உரிமையாளர் வாகனத்தினுள் கிடந்த இரும்பிக் கம்பியால் வர்த்தகரின் தலையில் தாக்கியுள்ளார். இதனைத் தடுக்கச் சென்ற காயமடைந்தவரின் தந்தையையும் தாக்கியுள்ளார் கடனாளி.
காயங்களுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் இன்பசீலன் (வயது–35) என்ற வர்த்தகரும், அவரது தந்தையான வ.சிவலிங்கம் (வயது–65) என்பவருமே காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-9)

# அர்ப்பணிப்பான சேவை வழங்க திடசங்கற்பம் பூண வேண்டும்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22
நிர்வாகக் கட்டமைப்பிலே முன்னுதாரணமான ஒரு மாவட்டமாக யாழ்.மாவட்டம் விளங்குகிறது. இலங்கையிலே 25 நிர்வாக மாவட்டங்கள் இருக்கின்ற போதும் எமது மாவட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு ஓர் முன்மாதிரியான, எடுத்துக்காட்டான மாவட்டமாக இருக்கிறது. குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த மாவட்டமாக யாழ். மாவட்டம் விளங்குகிறது. அந்த வகையில் அம் மக்களுக்கான அர்ப்பணிப்பான சேவையை வழங்க வேண்டும் என்ற திடசங்கற்பத்தை நாங்கள் மனதில் இருத்த வேண்டும். – இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன்.
யாழ்.மாவட்டச் செயலக 50ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொன்விழா நிகழ்வுகள் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன. அதில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–
அங்கு பல்வேறு விதமான மக்கள் வாழ்கிறார்கள். படித்த மக்களும், பாமர மக்களும் வாழ்கின்றனர். இருந்தபோதும் அவர்களுக்கு அரச சேவையை ஆற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. மிகச் சொற்பமானவர்களுக்கே இந்த வாய்ப்புக் கிடைக்கிறது. அந்த வகையிலே எமக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு நல்ல சேவையை வழங்க வேண்டும்.
ஆரம்ப காலங்களில் மிகக் குறைந்த ஆளணி வளங்களும், வசதி வாய்ப்புக்களும் இருந்தன. குறிப்பாக 1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச அதிபருக்கு மாத்திரமே தொலைபேசி அழைப்புக்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. இருந்தபோதும் அரச அதிகாரிகள் அர்ப்பணிப்பான சேவையை வழங்கினர். தற்போது அந்த நிலைமாறி தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப்படி நிலைகள் பல நிறைந்த புதிய சூழலில் நாங்கள் வாழ்கிறோம். அதிக வளங்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றைச் சரியாகப் பயன்படுத்தி மக்களுக்கு நல்ல சேவையை வழங்க வேண்டும்.
இந்த மாவட்டத்திலே பல கஷ்டங்களை, துன்பங்களை அனுபவித்த மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு எங்களுடைய அபரிமிதமான சேவையை வழங்க அர்ப்பணிப்போடு திடசங்கற்பம் பூண வேண்டும். – என்றார்
இந்த நிகழ்வில் மாவட்டச் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள்என பலர் கலந்துகொண்டனர். (ற-ரி2)

# நள்ளிரவில் வீடு புகுந்து வவுனியாவில் கொள்ளை

வவுனியா, ஓக.22
வவுனியா கோயில் புதுக்குளம் 10ஆம் ஒழுங்கையில் உள்ள வீடொன்று நேற்று நள்ளிரவு முகமூடி அணிந்தவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது.
நள்ளிரவு 1.30 மணியளவில் முகமூடி அணிந்த மூன்று நபர்களை கொண்ட குழு வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்ததுடன் வீட்டு உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. அதன்பின்னர் வீட்டிலிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.
கொள்ளைச்சம்பவம் இடம்பெற்ற வேளை அந்தப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# நடுவானில் மோதி இரு விமானங்கள் விபத்து: 7 பேர் சாவு

## ஸ்லோவாக்கியா நாட்டில் பயங்கரம்

ஸ்லோவாக்கியா நாட்டில் நடுவானில் இரு விமானங்கள் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளன. அதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.
ஸ்லோவாக்கிய நாட்டு விமானம் மேற்கு மாகாணத்தில் 40 பாரசூட் வீரர்களுடன் நேற்றுமுன்தினம் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஸி–410 டிவின் இன்ஜின் விமானத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.
இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த சில வீரர்கள் பாரசூட் உதவியுடன் கீழே குதித்துத் தப்பினர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. எனினும் உறுதிப்படுத்த முடியவில்லை.(ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாசிப் பயிர்ச்செய்கை யாழ்.மாவட்டத்தில் வெற்றி

## நடுகையை விஸ்தரிக்க விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

அச்சுவேலி, ஓக.22
யாழ்.மாவட்டத்தில் அன்னாசிப் பயிர்ச் செய்கை இம்முறை வெற்றி அளித்துள்ளது. அதையடுத்து இந்த வருடம் 32 ஆயிரம் அன்னாசி நாற்றுக்கள் தென்மராட்சி பிரதேசத்தில் நடுகை செய்வதற்கு விவசாயத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக அன்னாசிப் பயிர்ச் செய்கை உரும்பிராய், சங்கானை பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வந்த அன்னாசிச் செய்கை நல்ல பயனைக் கொடுத்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் விளைந்த அன்னாசிப்பழங்கள் நல்ல சுவையும் தரமும் உள்ளதாக இருப்பதோடு ஒரு கிலோவுக்கு மேற்பட்ட நிறை கொண்டனவாகவும் இருப்பதால் அன்னாசிச் செய்கை நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. அன்னாசிப் பயிர் தென்னம் தோட்டங்களில் ஊடுபயிராகவும் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.

அன்னாசிச் செய்கையில் பயனாளிகள் நம்பிக்கை கொண்டிருப்பதால் இந்த வருடம் 32 ஆயிரம் அன்னாசி உறிஞ்சிகள்(அன்னாசிநாற்று) தென்னிலங்கையில் இருந்து எடுத்து வரப்பட்டு அன்னாசிச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் அன்னாசிச் செய்கையை வலிகாமம் பகுதியில் உரும்பிராய், சங்கானை பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

அன்னாசிச் செய்கை தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்ததாவது:-

அன்னாசிச் செய்கை யாழ்.மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி அளித்திருப்பதால் இந்த வருடம் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. அன்னாசிச் செய்கையில் ஈடுபடவிரும்புவோர் விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இணைந்து கொள்ளலாம்.- என்றார். (ற-11)

# இதுவரையும் டெங்கால் 19 ஆயிரம் பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22
நாட்டில் இந்த வருடம் மாதாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். இதுவரை 19 ஆயிரத்து 91 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

கடந்தமாதங்களுடன் ஒப்பிடும்போது கடந்த 2 மாதங்களாக மிக அதிகளவானோர் டெங்குத் தொற் றுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த மாதம் 2 ஆயிரத்து 40 பேரும், அதற்கு முதல் மாதம் ஆயிரத்து 470 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மே மாதத்தில் ஆயிரத்து 622 பேரும், ஏப்ரலில் ஆயிரத்து 292 பேரும், மார்ச்சில் ஆயிரத்து 961 பேரும், பெப்ரவரியில் 3 ஆயிரத்து 731 பேரும், ஜனவரியில் 6 ஆயித்து 343 பேருமாக இந்த மாதம் இது வரை 632 பேரும் அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் இதுவரை ஆயிரத்து 542 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்.மாவட்டத்திலேயே அதிகளவாக - ஆயிரத்து 217 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் 108 பேரும், வவுனியாவில் 90 பேரும், மன்னாரில் 77 பேரும், கிளிநொச்சியில் 50 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொழும்பு மாநகரில் இந்த வருடம் இதுவரை ஆயிரத்து 694 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு கொழும்பு புறநகரில் 4 ஆயிரத்து 241 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் டெங்குத் தொற்று கொழும்பில் அதிகமாகவும் அதற்கடுத்ததாக கம்பஹாவிலும் காணப்படுகிறது என்றும் மிகக் குறைந்த அளவாக அம்பாறையில் 39 ஆகப் பதிவாகியுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ற-4)



தெல்லிப்பழை சிறி துர்க்கையம்மன் ஆலய வருடாந்தத் திருவிழாவின் மூன்றாம் நாள் திருவிழா திருமுறைத் திருவிழாவாக நடைபெற்றது. கடந்த புதன்கிழமை இரவு அம்மன் உள்வீதி வலம் வருகையில் இந்தியாவில் இருந்து வந்திருந்த பண்ணிசை ஓதுவார் குமாரசுவாமி பாலசந்திரன் பண்ணிசை ஓதியதுடன், வெளி வீதியுலாவில் தேவார முதலிகளான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோருடன் மாணிக்கவாசகரதும் திருவுருவச் சிலைகளும் வீதியுலா வந்தன. (ற-86)

# பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.22
அனுராதபுரம் யாழ்ப்பாண சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனமும், மோட்டார் சைக்கிளொன்றும் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளன. அதில் அநுராதபுரம் உடமலுவ பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடமையின் நிமித்தம் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# தேர்தலின் பின்னரான காலத்தில் 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன

## தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22
பொதுத் தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.




பதிவாகியுள்ள முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்காக, அந்த முறைப்பாடுகள், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிடம் ஒப்படைக்கவுள்ளன என்றும் அவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற)

# நேரசூசி பின்பற்றாத தனியார், அரச பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

## அதற்கென விரைவில் 38 பேர் நியமிக்கப்படுவர் என வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக.22
நேர சூசியை பின்பற்றாத அரச, தனியார் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரால் விரைவில் 38 ஊழியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று வடக்கு மாகாண போக்கு வரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரச, தனியார் பஸ் கழகங்களுக்கிடையிலான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கஷ்டகாலத்தில் எந்த விதமான போட்டி தன்மைகளும் இல்லாது மக்கள் நலனுக்காக வீதிகள் பழுதடைந்து இருக்கையிலும் மக்களுக்கு சேவை செய்யத அரச, தனியார் பஸ் கழகங்கள் தற்போது தான் அதிகளவான முரண்பாடுகளுக்கு உள்ளாகின்றார்கள். ஏற்கனவே கூறியது போல் மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கில் 60க்கு



40 என்ற வீதத்தில் தனியார், அரச பஸ்களும் போக்குவரத்தில் ஈடுபடவேண்டும் தனியார் 60க்கு கூடுதலாக சேவையிலீடுபட்டாலோ, அரச பேருந்தினர் 40க்கு கூடுதலாக சேவையிலீடுபட்டாலோ அந்தந்த தரப்பினர் அவ்விடயம் தொடர்பாக உரியவர்களிடம் முறைப்பாட்டை செய்யவேண்டும். அதன் பின்னர் அரச பஸ் [illegible] சாலை முகாமையாள[illegible] யார் பஸ் இருந்தால் தலைவரும் சேர்ந்து கதைத்து அதைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு போட்டிபோட்டு சண்டைகள் பிடிப்பது ஒழுக்கக்கேடான விடயம். இந்தப் பெரிய பிரச்சினைக்குக் காரணம் பஸ்கள் நேர சூசியை பின்பற்றாமல் போக்குவரத்தில் ஈடுபடுவதே. எனவே தான் நான் தற்போது 38 ஊழியர்களை எனது அமைச்சால் நியமித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரிடம் ஒப்படைக்க உள்ளேன். அவர்கள் குறித்த இடங்களில் நின்று நேரசூசியை பின்பற்றாத பஸ்களுக்கு அதாவது தனியாராக இருந்தால் அவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதும், அரச பஸ்ஸாக இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்ற விடயங்களையும் மேற்கொள்வார்கள்.

இவ்வாறான ஒரு சட்டம் வந்ததன் பின்னர்தான் நாங்கள் கேட்டம் என்று கூறுவது தவறு. போக்குவரத்து சேவை மக்களை நோக்கியதாகத் [illegible] ங்க ளும் கதைத்து அனுசரித்து செல்ல வேண்டும்.- என்றார். (ற-21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 ஆயிரம் குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகள் தேவை

## முல்லைத்தீவு மாவட்ட செயலர் தெரிவிப்பு

**ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் போரின் பின்னரான மீள்குடியேற்றத்தின் போது 41 ஆயிரத்து 112 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன**

முல்லைத்தீவு, ஓக.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கவேண்டிய தேவையிருக்கின்றது என்று முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று மற்றும் வெலிஓயா ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் போரின் பின்னரான மீள்குடியேற்றத்தின் போது 41ஆயிரத்து 112 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஐந்து வருடங்களில் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிதியுதவியில் நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளது. சேதமடைந்த வீடுகளும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

தற்போது ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் 17 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கவேண்டியிருகின்றது. 2 ஆயிரத்து 900 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருப்பதால் அவற்றையும் புனரமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. - என்றார். (ற)

# மூன்று ஆண்டுகள் நடைபெறும் வீதி திருத்தத்தால் மக்கள் சிரமம்

கிளிநொச்சி, ஓக. 22

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் கொங்கிரீட் இடப்பட்ட வீதி மூன்று வருடங்கள் கடந்தும் முழுமையாக திருத்தி முடிக்கப்படாதுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முத்துவிநாயகர்புரம் பகுதியில் கிராம இணைப்பு வீதிக்கே மூன்று கிலோமீற்றர் கொங்கிரீட் இடுவதற்கான வேலைத் திட்டம் முழுமைபெறாத நிலையில் காணப்படுகின்றது.

இதில் ஒரு கிலோமீற்றருக்கு கொங்கிரீட் இடப்பட்டும் மீதமுள்ள பகுதிகளுக்கு சல்லி பரவப்பட்டும் கணப்படுகின்றது. அத்துடன் கொங்கிரீட் இடப்பட்ட பகுதிகளுக்கு இருபக்கமும் கிரவல் பரவப்படாமையால் வீதியால் பயணிக்கும் உழவியந்திரங்கள் மற்றும் வாகனங்கள் வழிவிடுவதற்கு பெரும் சிரமப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருகின்ற போதும் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து முடித்து தர வேண்டும் என்று அந்தப் பகுதி வாழ் மக்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். இதே நிலைமைகள் தொடருமாயின் பருவ மழைக் காலத்தில் தாங்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கவேண்டிவரும் என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ற)



# போதையில் சாரத்தியம்: இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக.22

மதுபோதையில் முச்சக்கரவண்டி செலுத்தியவர் மின் கம்பத்துடன் மோதியதில் அவரது விலா எழும்பு முறிவடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் சுதுமலை அம்மன் கோயில் பகுதியில் இடம்பெற்றுள்ள இச் சம்பவத்தில் 24 வயதுடைய நபரே படுகாயங்களுக்கு உள்ளாகி அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டியைச் செலுத்திய சாரதி உட்பட அதில் பயணித்தவர்கள் அனைவரும் மதுபோதையில் இருந்ததுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்துப் பொலிஸார் விசாரணைளை மேற்கொண்டுள்ளனர்.(ற)

# எள்ளுக்காட்டு சிறுமி வழக்கு: நன்னடத்தை பிரிவில் சிறுவன்

## தொடர்ந்து வைக்குமாறு நீதிமன்று நேற்று உத்தரவு

கிளிநொச்சி, ஓக.22


கிளிநொச்சி எள்ளுக்காட்டை சேர்ந்த 3வயது சிறுமியை வன்புணர்வுக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த சிறுமியின் ஒன்று விட்ட சகோதரனான 14 வயது சிறுவனை தொடர்ந்தும் சிறுவர் நன்னடத்தை பிரிவில் தங்க வைக்குமாறு உத்தரவிட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஐ வஹாப்தீன்.

கிளிநொச்சி எள்ளுக்காட்டு பகுதியை சேர்ந்த 3வயது சிறுமி காணாமல் போனது தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிறுவன் மூன்றாவது தவணையாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதி வான் முன்னிலையில் முற்படுத்தப் பட்டார். இதன்போது எந்த விசாரணைகளும் இன்றி சந்தேகநபரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை தொடந்தும் அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை பிரிவில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. வஹாப்தீன் உத் தரவிட்டார்.

கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த சிறுவன் முதல் தவணை மன்றில் முற்படுத்தியபோது தானே தனது தங்கையை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக மன்றில் ஒப்புக்கொண்டிருந்தான்.

சென்ற தவணையின் போது சிறுமியின் உடற்கூற்று பரிசோதனையின் முடிவுகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்வரை – வரும் 20ஆம் திகதி வரை தொடரந்து சிறுவர் நன்னடத்தை பிரிவில் சேர்க்கும் படி நீதிவான் உத்தரவிட்டிருந்தது. (ற-21)

# பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகள் சிக்கின



கொழும்பு, ஓக. 22

கிளிநொச்சி பொலிஸாரால் நேற்று சுமார் 9 இலட்சம் பெறுமதியுடைய மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதன்போது வாகனம் இரண்டும், சாரதிகள் இருவரும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு முதிரை குற்றிகளை ஏற்றி சென்ற வாகனங்கள் இரண்டை சோதனைக்குட்படுத்திய பொலிஸாராலேயே குறித்த மரக்குற்றிகளை ஏற்றி சென்ற வாகனமும், சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த மரக்குற்றிகளை ஏற்றி சென்ற வாகனம் தப்பி செல்ல முற்பட்ட வேளை, பொலிசாரின் துரித நடவடிக்கையால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பகல் வேளையில் துணிகரமாக சட்ட விரோத மரக்குற்றிகளுடன் பயணித்த வாகனத்தினையும், செலுத்திய சாரதியையும் கைது செய்ததாவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் முற்படுத்தவுள்ளதாகக் கூறியுள்ள பொலிஸார், கடத்தப்பட்ட முதிரை மரக்குற்றிகளின் பெறுமதி சுமார் 9 லட்சம் ரூபா என்றும் தெரிவித்தனர். (ற)

# குளங்களில் குடியிருப்பவர்களை அகற்றுவதற்கு தீவிர நடவடிக்கை

## வவுனியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் முன்னெடுப்பு

கொழும்பு, ஓக.22

வவுனியாவில் உள்ள குளங்களில் அத்துமீறி குடியேறியவர்களை வெளியேற்ற கமநல அபிவிருத்தி திணைக்களம் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள 700 குளங்களில் 200 குளங்களின் நடுப்பகுதி வரை மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளதுடன் 500 குளங்களின் நீரேந்து பிரதேசங்களை மக்கள் ஆக்கிரமித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக குளத்து நீரை நம்பிய வவுனியா மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதுடன் விவசாய நிலங்களுக்கான நீர் வசதியும் குறைந்து செல்கின்றது. இது தொடர்பாக விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விவசாய திணைக்களங்களுக்கு தொடர்ச்சியாக முறையிட்டு வந்திருந்தனர்.

இந்த நிலையில் தற்போது குளங்களில் அத்துமீறி குடியேறியோரை வெளியேற்றவும் குளங்களுக்கான எல்லையிடும் நடவடிக்கைகளும் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கையை வவுனியா குட்செட் வீதி அம்மாபகவான் குடியிருப்பு பகுதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டபோது மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கூறியுள்ளதாவது:-

வவுனியா மாவட்டத்தில் கைவிடப்பட்ட குளங்களுடன் சேர்த்து சராசரியாக 700 குளங்கள் உள்ளது. இவற்றில் பல பொது மக்களால் பிடிக்கப்பட்டு குளத்தினுள் மண் இடப்பட்டு வீதிகள் அமைக்கப்பட்டுப் பெரும் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. அதனால் குளங்கள் அழிவடையும் நிலையை எதிர் நோக்கியுள்ளன.

மக்களைப் பொறுத்தவரையில் குளங்கள் வயலுக்கு நீர்ப்பாசனத்திற்கு மாத்திரமே. ஆகவே 10, 15 ஏக்கர் வயல் காணிக்கு எதற்காக இந்த பெரிய குளங்கள் என்ற எண்ணத்தில் உள்ளனர்.

ஆனால் வரட்சியால் பாதிக்கப்பட்டும் மாவட்டத்தில் வவுனியா மாவட்டம் முதலாம் இடத்தில் உள்ளது. வரட்சியான காலத்தில் குளத்தில் நீர் இல்லாது விட்டால் கிணற்றில் நீர் இல்லாத நிலை உள்ளது. இந்த யதார்த்த உண்மையை எல்லோரும் உணர வேண்டும். குளங்களின் அலை கரையில் குடியேறியவர்கள் இன்று குளத்தின் நடுப்பகுதி வரை பிடித்துள்ளார்கள். இதற்கு முன்னைய அதிகாரிகளின் செயற்பாடுகளும் காரணமாக உள்ளதுடன் மக்களின் அசமந்தமான போக்கும் காரணமாக உள்ளது.

வைரவபுளியங்குளத்தில் எமக்கு பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இது தொடர்பாக நாம் ஜனாதிபதிக்கு அறிவிக்கவுள்ளோம். அதன் பின்னர் அவருடைய முடிவை பொறுத்தே எதிர்காலத்தில் அந்தக் குளத்தின் செயற்பாடுகள் தங்கியிருக்கும்.

எனினும் குளங்களில் அத்துமீறி குடியேறுபவர்கள் தொடர்பாகவும் குளங்களை பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியும் எமது பொது சொத்துக்களை பாதுகாப்பதற்கு எமக்கு பொது மக்களும், அரசியல் கட்சிகளும் உறுதுணையாக இருக்க வேண்டும்.– என்றார். (ற)

# விபத்தில் இளைஞன் உயிரிழப்பு: வீதியை மறித்து மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக.22

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலையிறவு பாலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து பொதுமக்கள் பாலத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்துகொண்டுள்ளனர் என்று தெரிவித்தே பொதுமக்கள் இந்த போராட்டத்தை மேற்கொண்டனர்.

காலை 7 மணியளவில் மட்டக்களப்புக்கு வேலைக்கு வந்து கொண்டிருந்த கன்னன்குடாவை சேர்ந்த 27 வயதுடையஇளைஞனை மண் ஏற்றிய கன்டர் ரக வாகனம் மோதியுள்ளது. இதன்போது இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் உடனடியாக விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் உரிய விசாரணை மேற்கொள்ளாமல் பொலிஸார் வாகனத்தை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்றதாக தெரிவித்து பொதுமக்கள் வலையிறவு பாலத்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக வவுணதீவு பிரதேசத்தில் உள்ள அரச மற்றும் தனியார் அலுவலகங்களுக்கு செல்லும் ஊழியர்கள் பாலத்தின் இரு மருங்கிலும் நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டியேற்பட்டது.

தமக்கு நீதி கிடைக்கும் வரை போக்குவரத்துக்கு வழிவிடமாட்டோம் என்று தெரிவித்து பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேநேரம் சம்பவ இடத்துக்கு வந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான என். சிறிநேசன், வியாளேந்திரன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர். துரைரெட்ணம் ஆகியோர் சம்பவம் தொடர்பில் பொது மக்களிடம் கேட்டறிந்து கொண்டதுடன் பொலிஸாருடனும் கலந்துரையாடினர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலும் நடைபெறாது

## பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக.22

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதித் தேர்தலோ, பொதுத் தேர்தலோ நடைபெறமாட்டாது என்று நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியை மட்டும் சிந்தனையில் கொண்டு செயற்படாமல் நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு பொதுவான இலக்குக்காக செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க வுடன் இணைந்து தொடர்ந்தும் நாட்டை வளம்மிக்கதாக முன்னெடுத்துச் செல்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் ஒன்றுசேர்ந்து செயற்பட முன்வரவேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள் குறித்து கிடைத்திருக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்துவதற்கு பின்நிற்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள அவர், ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய நபர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நிறுவனங் களுக்கு மேலும் பலம் சேர்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஐந்தாண்டு காலத்தில் எம்முன் இருக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து அவற்றை வெற்றி காணவும் தாம் தயாராக உள் ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## ஹெரோயினுடன் பெண் கைது

கொழும்பு, ஓக.22

மாத்தறை, ஹித்தெடிய ரஜமகா விகாரைக்கு அண்மையில் 80 ஹெரோயின் பக்கெட்டுக்கள் வைத்திருந்த பெண்ணொரு வரையும் ஆணொருவரையும் கடந்த புதன்கிழமை இரவு 10 .05 மணியளவில் கைது செய்துள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணிடமிருந்து 70 ஹெரோயின் பக்கெட்டுக்களும் ஆணிடமிருந்து 10 ஹெரோயின் பக்கெட்டுக்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட பெண், 48 வயதுடைய தெவிநுவர பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்டவர் எனவும் ஆண், 43 வயதுடைய பத்தரமுல்ல பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது பயணத்துக்காக பஸ்ஸில் காத்திருந்த குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# மிக விரைவில் மஹிந்த சிறை செல்ல நேரிடும்

## அசாத் சாலி கூறுகின்றார்

கொழும்பு, ஓக.22

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு மூன்று நாடாளுமன்ற அமர்வுகளின் பின்னர் சிறைக்குச் செல்ல நேரிடும் என்று கூறியுள்ளார் மத்திய மாகாணசபை உறுப்பினர் அசாத் சாலி.

தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்கப் போவதில்லை என அவர் கூற முடியாது. ஏனென்றால் அவருக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப் படமாட்டாது என்று தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருக்கும் வரையில் அவருக்கு எது வித பதவிகளும் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மஹிந்த, தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்கப்போவதில்லை என்று தெரிவித்திருந்தமைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# சிறந்த சமூகத்தை உருவாக்க போதையை ஒழிக்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



கொழும்பு, ஓக.22

நாட்டில் சிறந்த சமூகத்தை உருவாக்க போதைப்பொருள் தடையாக உள்ளது என்றும், அதனை ஒழித்து நாட்டை முன்னேற்ற வேண்டுமென்றும் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விளம்பரத் தூதுவராக கடந்த புதன்கிழமை கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டார். அந்த நிகழ்வில் உரையாற்றியபோதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் பாவனை கடந்த காலத்தில் நாட்டில் அதிகமாகக் காணப் பட்டது. போதைப்பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்க வேண்டியது முக்கியமானதாகும். காரணம், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்தே, சட்ட விரோதமான வக்கை ல், போதையை ஏற்படுத்தும் வில்லைகள், தூள் என்பன வற்றை ரகசியமாக விநியோகிக்க ஆரம்பித்துள்ளனர்.

போரை நிறைவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்தியது போல, நாட்டில் சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இதற்கு போதைப்பொருள் பாவனை பெரும் தடையாக உள்ளது.

நான் வெளிநாடு சென்றிருந்த போதும், வெளிநாட்டுத் தலைவர்கள் எமது நாட்டிற்கு வருகை தந்திருந்த போதும், இலங்கைக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படுவதை தடுக்க உதவுமாறு கோரியிருந்தேன். அதற்கு அவர்களும் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர்.

நாட்டில் தற்போது வாழ்பவர்களுக்காக மட்டுமன்றி, எதிர்காலத்தில் பிறக்கவுள்ள குழந்தைகளுக்காக வும் நாம் இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண் டும். குமார் சங்கக்கார செய்யும் சேவை யானது, நாட்டுக்குச் சேவை மட்டுமன்றி, ஒரு புண்ணிய காரியமாகவும் இருக்கும். - என்றார். (ற)



# 4 ஆம் திருவிழா

### "தர்மம் நிலைத்திட சாந்தி நிலவிட சஞ்சலம் நீக்கிடு நாயகனே"

நல்லை நகரிலே மகிமை மிகு கூட்டி
நலம் பல தருபவனே
வள்ளி குஞ்சரியோடு வீதி வலம் வந்து
வரம் அள்ளி தருபவனே
பக்தர் கூடி பஜனை முழங்கிட
பந்தவினை தீர்ப்பவனே
சேவற் கொடியும் சித்திரவேலும் விண்ணொளி வீசிட
வீதி வலம் வருபவனே
தர்மம் நிலைத்திட சாந்தி நிலவிட
சஞ்சலம் நீங்கிடு நாயகனே

*தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்.*

### கார்த்திகை நாளில் வந்தாய் முருகா

பார்த்திருக்கப் பக்திதரும் நல்லூர்க் கந்தா
பன்னிருகை வேலவனே செல்வக்குமரா
ஆர்த்தொலிக்கும் ஓசையெல்லாம் உன் நாமமே
அரகரா சண்முகா என்றோதுமே
கார்த்திகை நாளிலே வந்தாய் முருகா
கருந்தேனும் தினைமாவும் சேர்த்தேயுனக்கு
நேர்த்தியாய் மாவிளக்கு ஏற்றி வைத்தோம்
நீ யொருகால் நின்று எம்மைப் பாராய் ஐயா!

*செ.பவானி, வண்ணார்பண்ணை.*

### நல்லூரின் நாயகனே அருள் புரியாயோ?

உலகமே உந்தன் புகழ் பாடுகின்ற
பூலோகத்தின் கலியுக கந்தனே
நிலையில்லா மானிடப் பிறவிதனில்
தமிழினம் பட்ட துயர் போதும் ஐயா பாரினில்
இனியும் வேண்டாம் எம் சந்ததிக்கு இந்த நிலை
அழியாத நினைவுகளாக எம் இனத்தில்
மனங்களில் அலையாக மோதுகின்ற
வேதனைகளை மாற்றி உந்தன் புகழ் பாட
அருள் புரியாயோ நல்லூரின் நாயகனே

*சு.வன்னியசிங்கம், காரைநகர்.*

### ஞான ஒளி வள்ளலே

விதம் விதமாய் கோலம் கொண்டு விழிநிலை அருள் கொண்டு
கண்களுக்கும் மனதுக்கும் விருந்தளிக்கும்- தற்பரனே
சதாசிவனின் மைந்தனே, ஞான பண்டிதா உந்தனருள்
அனுதினமும் கிடைக்க வழி செய்தருள்வாய் - முருகையா,
திருவிழாக் காலந்தனில் திருவுலாவால் மனங்குளிர்ந்து
எம்மவரின் மனங்களது குளிர வழி காட்டிடையா
அபிடேக கந்தனாய், அலங்காரப் பிரியனாய் ஆறுமுகம்
கொண்ட எங்கள் ஞான ஒளி வள்ளலே

*சிவஸ்ரீ க.ஜெயராமக்குருக்கள், வளலாய்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு, அவர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்

**இடபம்:** பேச்சில் பெருந்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய வழியில் ஆதாயம் கிடைக்கும். குடும்பப் பிரச்சினை நீங்கி, மனதில் நிம்மதி உண்டாகும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**மிதுனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு மற்றவர் பொறாமை கொள்வர். தொழில், வியாபாரத்தில், அமோக இலாபம் கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ் வீர்கள். வாகனப் பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**கடகம்:** முயற்சிக்கேற்ப வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக, வெளியூர் செல்வர். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்

**சிங்கம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு, வெற்றி காண் பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில், தேவையான உதவி கிடைக்கும். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு ஏற்படும்.

**கன்னி:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகும். மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். வாகனப் பயணத்தில் சந்தோஷ அனுபவம் ஏற்படும்.

**துலாம்:** தாய்வழி உறவினர்களுடன் இணக்கம் உண்டா கும். சாமர்த்தியத்தால், குடும்பப் பிரச்சினைக்கு தீர்வு காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் சம்பள உயர்வு கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்:** மக்கள் மத்தியில் செல்வாக்குடன் திகழ் வீர்கள். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு உருவாக லாம். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததை விட இலா பம் கூடும். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு ஏற்படும்.

**தனுசு:** நேர்மையுடன் செயல்பட்டு நற்பெயர் காண்பீர் கள். பெற்றோர் உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். நண்பருடன், விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** திட்டமிட்டுச் செயலாற்றி, பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி வியப்பூட்டும் விதத்தில் அமையும். விலகிச் சென்ற உறவினர் கூட உங்களை நாடி வருவர். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** குடும்பத்தினர் எதிர்பார்ப்பை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் மிதமாக இருக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வது அவசியம். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்கப் பெறுவர்.

**மீனம்:** எதிரி தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதுமையைப் புகுத்தி இலாபம் காண்பீர்கள். சுப நிகழ்ச்சியில், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண் டாகும்.



## போதும் பாஸ் உங்க இரகசியம்

ஒரு படத்தின் கதைக்கருவை ரிலீஸ் செய்தாலே இது எனது கதை என ஒரு கூட்டம் போர்க்கொடி தூக்கத் தயாராக இருக்கும் நிலையில், பல பெரிய ஹீரோக்களின் படங்கள் இரகசியமாக வைக்கப்படுவது நாமறிந்ததே. ஆனாலும் இந்த ரகசியம் கொஞ்சம் ஓவர் பாஸ் என்றே சொல்லத் தோன்றுகிறது. அண்மையில் தொடங்கிய கமலின் 'தூங்காவனம்' ரஜினியின் 'கபாலி' என வரிசையாக செய்திகள் வந்த வண்ணம் உள்ள நிலையில் இந்தப் படங்களின் குழுவினர் என்ன தான் செய்கிறார்கள் என்ற கேள்விகள் எழத் தொடங்கிவிட்டன. அஜித் படத்தின் தலைப்பை வெளியிடுவதையே அவரது இரசிகர்கள் விழாவாகக் கொண்டாடி வரும் நிலையில், படத்தின் தலைப்பு முதல் எழுத்து 'ஏ' என நெருங்கிய வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ளன. வெட்டி விலாஸ் என அங்காங்கே பரவி வந்தாலும் இப்படி ஒரு பெயர் வைப்பார்களா? என்ற கேள்விகளும் மனதில் தோன்றத்தான் செய்கின்றன. இரசிகர்களைக் கொஞ்சம் அதிகமாகவே சோதிக்கின்றனர் தல படக்குழுவினர் எனினும் எதைப் பற்றியும் கவலை கொள் ளாமல் படக்குழு இப்போது படத்தின் பாதிப்படப் பிடிப்புகளை மும்பையில் முடித்துவிட்டு அடுத்தகட்ட படப்பிடிப்புகளை சென்னை யில் நடத்த திட்டமிட்டுள்ளனர்.


## நாமே எமக்குத் துணை

தண்ணீரின் வெப்பம் அதிகரிக்கும்போது தவளை தனது உடலை அந்த வெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றி கொண்டே வரும்......

வெப்பம் ஏற ஏற தவளையும் அந்த வெப்பநிலைக்கு ஏற்ப தனது உடலை ஏற்ப மாற்றிக் கொள்ளும்.

தண்ணீர் கொதிநிலையை அடையும்போது வெப்பத்தைக் தாங்கமுடியாமல் தவளை பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்க முயற்சி செய்யும். ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் தவளையால் வெளியேற முடியாது. ஏன் என்றால்..... வெப்பத்துக்கு ஏற்ப தனது உடலை மாற்றிக் கொண்டே வந்ததால் அது வலு விழந்து போய் இருக்கும். சிறிது நேரத்தில் அந்தத் தவளை இறந்து விடும். எது அந்தத் தவளையைக் கொன்றது ? பெரும்பாலானோர் கொதிக்கும் நீர் தான் அந்தத் தவளையை கொன்றது என்று சொல்வீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால், எப்போது தப்பித்து வெளியேற வேண்டும் என்று சரியாக முடிவெடுக்காத அந்த தவளையின் இயலாமை தான் அதைக் கொன்றது.

நாமும் அப்படித்தான் எல்லோரிடமும் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து போகிறோம். ஆனால் நாம் எப்போது அனுசரித்து போக வேண்டும், எப்போது எதிர்கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருக்கவேண்டும். மனரீதியாக, உடல்ரீதியாக, பணரீதியாக மற்றவர்கள் எம்மை நசுக்க ஆரம்பிக்கும்போது நாமும் சுதாரிக்காமல் போனால் மீண்டும் அதையே தொடர்ச்சியாகச் செய்ய ஆரம்பிப்பார்கள். உடலில் வலிமை இருக்கும் போதே அவர்களிடமிருந்து தப்பித்துவிடுதல் நன்று. நாம் அனுமதித்தால் ஒழிய எம்மை அழிக்க எவராலும் முடியாது.



## ஐஸ்லாந்தின் எழில் கொஞ்சும் அழகு..

குளிர்கால ஐஸ்லாந்து நாட்டின், அருவி, கடல், நீரோடைகள் மூலம் ஆழ்மனதில் பதியவைக்கும் தருணங்களை அற்புதமான புகைப்படங்களாய் கண்களுக்கு குளிரூட்டும் விதமாக விருந்து படைத்திருகிறார் ஜொருன் ஸ்ஜொப்ன் என்ற புகைப்பட கலைஞர்




## பேஸ் புக்கில் பிடித்தவை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அளவீட்டைக் கண்டித்து முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்

## தோப்பூர், செல்வநகர் பிரதேசத்தில்

திருகோணமலை, ஓக.22

திருகோணமலை, சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தோப்பூர், செல்வநகர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான ஆயிரம் ஏக்கர் காணி சேருவில பௌத்த விகாரைக்குரியது என்று தெரிவித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை நில அளவை மேற்கொள்ளப் பட்டமையைக் கண்டித்து அப்பிரதேச மக்கள் நேற்றுவெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜும்மா தொழுகையின் பின்னர் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை தோப்பூர் பிரதேசகிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், சமூக நலன்புரி அமைப்புக்கள் ஆகியவை இணைந்து முன்னெடுத்திருந்திருந்தன. சேருவில விகாரைக்கு சுவீகரிப்பு செய்வதற்காக நிலஅளவை மேற்கொள்ளப்பட்ட இந்த ஆயிரம் ஏக்கர் காணிக்கான உறுதிப்பத்திரங்கள் பலரிடம் உள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்தக் காணி விடயத்தில் நிரந்தர தீர்வு எட்டப்படாதுவிடின், இது போன்ற எதிர்ப்புத் தொடர்ந்து வெளிப்படுத்தப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கூறினர்.

தங்களின் பரம்பரைக் காணிகளை மீட்டுத்தருவதற்கான முயற்சிகளை உரிய அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டும் என்று காணிச் சொந்தக்காரர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம்களின் காணிகளை 'சுவீகரிக்காதே', 'நல்லாட்சிக்கு பங்கம் விளைவிக்காதே', 'ஏழை விவசாயிகளின் வயிற்றில் கைவைக்காதே' 'எங்களின் பரம்பரைக் காணிகள் எங்களுக்கு வேண்டும்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(ற)

# தேசிய அரசை அமைப்பது மக்கள் ஆணைக்கு மாறானது

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஓக.22

தேசிய அரசு மக்கள் ஆணைக்கு மாறானது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி எடுத்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை எதிர்த்தே மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அரசு அமைப்பது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



தேசிய அரசுக் கொள்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்று முழுதாக நிராகரித்து வந்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் ஆணையை மதிக்காதவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கடந்த தேர்தலில் காணக் கிடைத்தது எனவும் அந்த நிலைமை அடுத்த தேர்தலில் ஏனையவர்களுக்கும் நேரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)



யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவை நேற்றுக் கொண்டாடியது. அதன் ஓர் அங்கமாக இரத்ததான நிகழ்வு இடம்பெற்றதுடன் அரச பணியில் கடமையாற்றி ஏறத்தாழ 52 தடவைகள் இரத்ததான சேவையை வழங்கிய உத்தியோகத்தர்கள் இருவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். 52 தடவைகள் இரத்ததானம் வழங்கிய, தற்போது மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் க.ஓங்காரபூபனுக்கு மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் விருது வழங்கிக் கௌரவித்தார். யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர்(காணி) உட்பட உத்தியோகத்தர்கள் இரத்ததானம் வழங்கினார். (ற–ரி2)

# தேசியப் பட்டியலில் எம்.எச்.எம். நவவி

புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக போட்டியிட்டு மிக குறைவான வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்த முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவியின் பெயர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள் ளது என்ற தகவல் புத்தளத்தில் பரவியதை அடுத்து புத்தளம் மக் கள் நள்ளிரவினைத் தாண்டியும்மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்ட னர்.

40 வருடங்களுக்கு மேல் அரசியல் அனுபவமுடைய எம்.எச்.எம். நவவி அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த நாடாளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிட்டிருந்தார்.

இந்நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியலுக்கு வட மேல் மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். நவவியின் பெயர் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு புத்தளம், கற்பிட்டி, ரத்மல்யாய உட்பட புத்தளம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பட்டாசு கொளுத்தி மக்கள் ஆர வாரத்தில் ஈடுபட்டனர். கடந்த 26 வருடங்களாக நாடாளுமன்ற தேர் தலில் புத்தளம் மாவட்டத்தில் எந்தவொரு கட்சியைச் சேர்ந்த சிறுபான்மை சமூகத்தவரும் வெற்றி பெறாத நிலையில் புத்தளத்துக்கு வழங்கப்பட்ட இரண்டாவது தேசிய பட்டியல் உறுப்பினர் வாய்ப்பு இதுவாகும். (ற)

# அழகை மெருகூட்டிய இளம்பெண் சாவு

கண்டி அம்பிட்டிய பிரதேசத்தில் 27 வயது இளம் பெண்ணொருவர் நேற்று முன்தினம் காலை திடீரென உயிரி ழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருமண நிகழ்வு ஒன்றுக்கு செல்வதற்காக தனது உடல் அழகை மெருகூட்டிக் கொள்வதற்காக தென்னங் கும்புர பிரதேசத்தில் உள்ள அழகு படுத்தும் நிலைய மொன்றுக்கு சென்று திரும்பிய நிலையி லேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவரது உயிரிழப்புக்கு அழகுபடுத்தும் நிலையத்தில் உபயோகிக்கப்பட்ட எதேனும் இரசாயனப் பொருள் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகப்படுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# சிறுத்தை தாக்கி பெண் காயம்

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலாவ கியூ தோட்டத்தில் சிறுத்தை தாக்கி பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை அப்பகுதியில் உள்ள தேயிலை மலையில் குறித்த பெண் பணியில் ஈடுபட்டிருந்த போது தேயிலைச் செடியின் அடிப் பகுதியில் இருந்து வந்த சிறுத்தை குறித்த பெண்ணைத் தாக்கியுள்ளது. குறித்த பெண்ணை உயிர் ஆபத்து இன்றி சக தொழிலாளர்கள் சிறுத்தையிடம் இருந்து மீட்டுள்ளனர்.

காயங்களுக்கு உள்ளான பெண், தற்போது பொகவந்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# இனவாதமற்று இயங்கும் ஜனாதிபதியும், பிரதமரும்

## மகிழ்ச்சி தெரிவிக்கிறார் வடிவேல் சுரேஸ்

கொழும்பு, ஓக.22



ஜனாதிபதியும், பிரதமரும் இனவாத மற்ற முறையில் இணைந்து செயற்படுவதை நோக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மலையகத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி, ரணில் தலைமையிலான ஆட்சியில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ரணில் விக்ரமசிங்கவின் இன்றைய பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ற)

# காட்டு யானைகள் தாக்கி வீடு சேதம்

மட்டக்களப்பு, ஓக.22

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி 4 கிராம அலுவலகர் பிரிவிலுள்ள உதயன்மூலை கிராமத்துக்குள் கடந்த வியாழக்கிழமை இரவு புகுந்த காட்டு யானைகள் மேற்கொண்ட தாக்குதலில் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இந்தக் கிராமத்திலிருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள வயல்களில் வேளாண்மை அறுவடை முடிவடைந்ததை தொடர்ந்து, கடந்த பத்து நாள்களாக சித்தாண்டிக் கிராமத்தின் எல்லைப்பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்குள் காட்டு யானைகள் புகுந்து பயிர்களுக்கும் வீடுகளுக்கும் சேதம் விளைவிப்பதாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் காட்டு யானைகள் வருவதால் வீடுகளில் உறங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமாணி பெறுபேறுகள் வெளியாகின

மானிப்பாய், ஓக.22

யாழ்.பல்கலைக்கழக முதுகல்வி மாணி (M.Ed) 10ஆவது அணி மாணவர்களது இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

10 ஆவது அணியில் 103 பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதியிருந்தனர். அதில் 3 மாணவர்கள் முதற்தர சித்திகளைப் ($1^{St}$ CLASS) பெற்றுள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகள் யாவும் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி அலுவலகத் தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. (ற-50)

## படுக்கை தீப் பிடித்து வயோதிபர் காயம்

தென்மராட்சி, ஓக.22

படுக்கைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த கைவிளக்கு தட்டுப்பட்டு படுக்கை தீப்பிடித்துக் கொண்டதில் வயோதிபர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கைதடி நுணாவிலில் இடம் பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த பொன்னு பாலசுப்பிரமணியம் (வயது–71) என்பவர் எரி காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேல திக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசா லைக்கு

## வயோதிபப் பெண் விபத்தில் காயம்

வீதியைக் கடக்க முயன்ற வயோதிபப் பெண் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் சங்கத்தானை ஏ–9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த பத்மநாதன் கமலாம்பிகை (வயது–61) என்பவர் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் வந்து இறங்கி வீடு செல்வதற்காக வீதியைக்கடக்க முற்பட்ட வேளையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ற–9)

## குப்பைக்குள் இருந்த மர்மப்பொருள் வெடித்து தம்பதியினர் காயம்

யாழ்ப்பாணம், ஓக.22

குப்பைக்குத் தீ மூட்டியபோது அதனுள் இருந்த மர்மப்பொருள் வெடித்ததில் கணவனும் மனைவியும் முகத்தில் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சரசாலை பகுதியில் நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வர்ணன் (வயது–30) பேபிவாணி(வயது– 26) ஆகியோரே படுகாயமடைந்தவர் களாவர்


கணவன் மனைவி இருவரும் தமது வீட்டுக் காணியைத் துப்புரவு செய்து குப்பைகளை எரிக்கும் போதே வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. மண்ணில் ஏதாவது பொருள் புதைந்திருந்து பின்னர் வெளிக்கிளம்பியிருந்த நிலையில் குப்பைகளுக்குத் தீ மூட்டியபோது அது வெடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

வெடிப்பால் இருவரும் படுகாய மடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற–4,10

## மரண அறிவித்தல்கள்

### மருதப்பு பரநிருபசிங்கம்



யாழ்ப்பாணம், புங்குடுதீவு, 3ஆம் வட்டாரம் குறிகட்டுவானைப் பிறப்பி டமாகவும், கிளிநொச்சி, வட்டக்கச்சி, இல.36, கட்சன் வீதியை வதிவிடமாகவும், வவுனியா வேப்பங்குளம் 6ஆம் ஒழுங்கையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு பரநிருபசிங்கம் 20.08.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மருதப்பு - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் சவுந்தரம் அவர்களின் பாசமிகு கணவரும் கோவிந்தராஜன்(சுவிஸ்), சித்திராரூபி(வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்), உதயகுமாரன்(கனடா), தயாபரன்(பிரான்ஸ்), சந்திரலேகா(பிரான்ஸ்), விஜயசிறி(லண்டன்), கோசலாதேவி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு, பராசக்தி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, குணரத்தினம், தர்மலிங்கம், சண்முகம், பத்பநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயகுமாரி(சுவிஸ்), கோணேஸ்வரன்(வவுனியா வளாகம்), வாணிசிறி (கனடா), கமலவேணி (பிரான்ஸ்), ஜீவானந்தராஜா(பிரான்ஸ்), யோகநாதன் (லண்டன்), சிறிவினோதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, அனோஸ், கேசாம்பவி, கோகர்ணன், பவதாரணி,ரதுஷன், வதுஷன், ஆருஷன், டினோஜன், தர்சனா, அர்சியா, விதுஷன், சரிசன், அக்ஷன், அவின், யபிதா, சச்சின், சங்கவி, ஆருதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

இல.68, 6ஆவது ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா.

தகவல் :-
குடும்பத்தினர்.
024 222 6918

### செல்லன் தங்கராசா


பிறப்பு 23.05.1964 இறப்பு 20.08.2015

வெள்ளாம்போக்கட்டி, ஜெடி காமத்தைப் பிறப்பிடமாகவும் VH லேன், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் தங்கராசா 20.08.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லன் மற்றும் கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் சகுந்தலா தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் (கலா) அன்புக் கணவரும் யதீஸ்ரன், குயிஸ்ரன் (பிரான்ஸ்), துவாகரன், கீர்த்திகரன், டினுசியா, கனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடேசு, மற்றும் சின்னையா, கனகம்மா, ராணி, யோகராசா, இந்திராணி (பிரான்ஸ்), புஸ்பமலர் ஆகியோரின் சகோதரனும் கோபிகா, திவ்யா ஆகியோரின் அன்பு மாமனும் மமதியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2015) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

VH லேன் ,
இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி குமாரசாமி



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் நவாலி மற்றும் நவாலி வீதி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி குமாரசாமி 20.08.2015 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் குணரட்ணம், பவளராணி யோகேஸ்வரி, அருட்சோதி, சந்திராதேவி, இந்திராதேவி, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ரங்கநாயகி, விக்னேஸ்வரராஜா,ஜெயக்குமாரன் , பிருந்தாபரன்,விக்னேஸ்வரன், அழகேஸ்வரன் ,வனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுமித்திரா -செல்வகுமார், வசீகரன் -பிரவீனா பபாகரன்,சிந்துஜா ,ராதிகா,ராஜ்கரன் கிருஷ்ணவேணி- நாகேஸ்வரன், சண்முகநாதன்- நீரஜா, விஜித்தா- மோகன், உமாசங்கர் ,கஜகரன், விதுஜா , தனுஜா , அபிராமி, ரிஷி,காரணி, அபூர்வா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் தர்ஷனா, கீர்த்தனா கர்ஷன், சமீனா, மதுஷா, மிதுஸ், சாருஜன், அபிசன், ஆரபி,அர்ச்சயா ஆகியோரின் அன்புப் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நவாலிவீதி ஆனைக்கோட்டையில் உள்ள இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல் தகனத்திற்காக காக்கைதீவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வீதி,ஆனைக்கோட்டை.
077 917 6846

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி சிவலிங்கம்



ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சிவலிங்கம் 20.08.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காத்தலிங்கம் - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரு - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் தங்கராணி (கனடா), காலஞ்சென்ற மகாலக்ஷ்மி மற்றும் பரமேஸ்வரி, விநாயகமூர்த்தி (ஜேர்மனி), கதிர்காமலிங்கம் (நித்தி), சற்குணவதி, ஈஸ்வரி,பவானி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெயவதனி (ஆசிரியை - யா/தொண்டைமானாறு வி.ம.வி), ஜெயசுதாகர்(கனடா), சுரேந்திரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பகீரதன்(ஆசிரியர் - யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), மனோஜா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சாருஜன், ஜனுசிகா, யஸ்சிகா, மிதுஷன்(கனடா), பபிசா(கனடா), விதுசா(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (24.08.2015) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக ஊரிக்காடு இந்துமயானத்துக்கு முற்பகல் 10மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை
இலங்கை +94021 226 5173

கனடா + 15143428842
+ 15147819798
+ 15142440284

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு படுக்கை விரிப்புக்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஓக.22

சாவகச்சேரி வைத்தியசாலை விடுதிகள் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றில் உள்ள நோயாளர் பரிசோதனைக் கட்டில்களுக்கான படுக்கை விரிப்புகள் கொழும்பில் உள்ள மருந்[illegible] நிறுவனம் ஒன்றால் நேற்று வழங்கப்பட்டன.

வைத்தியசாலை நோயாளர்களுக்கு வழங்கும் அளப்பரிய சேவையை கௌரவித்து முதற்கட்டமாக படுக்கை விரிப்புகள் வழங்கப்படுவதாக அவற்றை வழங்கிய நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ற–9)

## 'நண்பி' குறும்படம் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக22

'நண்பி' குறும் பட வெளியீட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ்.செல்லா திரையரங்கில் நடைபெறவுள்ளது என்று திரைப்படக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற–ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவில்வான் இசைமாளமோட்டை கிராம மக்களின் காணிகளை அபகரிக்க முயற்சி

## மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு

மன்னார், ஓக.22

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குருவில்வான் இசைமாளமோட்டை கிராமத்தில் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை வாழ்ந்து வரும் மக்களின் காணிகளை அபகரிக்க வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாவது:–

மன்னார் மாவட்டத்தில் பல காணிகளை வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சுவீகரித்து வருகின்றனர். இந்த நிலையில் காணி அபகரிப்பின் ஓர் அங்கமாக பல வருடங்களாக நாம் வசித்து வரும் குருவில்வான் இசைமாளமோட்டை கிராமத்தில் உள்ள எமது காணிகளை அபகரிக்க குறித்த அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

தற்போது எமக்கு எதிராக வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து எங்களை குருவில்வான் இசைமாளமோட்டை கிராமத்தில் இருந்து முற்றாக வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் எமது கிராமத்திற்குள் நுழையும் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் எங்களை அச்சுறுத்துகின்றனர்,

வீடுகளுக்குள் வந்து சமைத்து வைத்துள்ள உணவுகளை திறந்து பார்க்கின்றனர். கடந்த புதன்கிழமை மாலை எமது கிராமத்துக்குள் வந்த வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் திடீர் என பெயர்ப் பலகைகளை நட்டுள்ளனர். குறித்த பெயர் பலகைகளில் 'யோதவாவி சரணாலயம்', என்ற வாசகம் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தால் பொறிக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையில், எவ்வித தீர்ப்பும் வழங்கப்படாத நிலையில் இவர்கள் தன்னிச்சையாக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது இங்குள்ள 22 குடும்பங்களையும் வெளியேற்றும் முகமாகவே வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர்– என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குருவில்வான் இசைமாள மோட்டை கிராமமானது மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலபெருமாள்கட்டு கிராம சேவகர் பிரிவில் கட்டுக்கரைக் குளத்தின் பின்புறத்தை அண்டியதாக சகல வளத்தையும் கொண்ட கிராமமாக காணப்படுகின்றது. 1972ஆம் ஆண்டு குறித்த பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

அங்குள்ள மக்கள் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வந்ததோடு பலாமரம், மாமரம், உள்ளிட்ட பழ மரங்களினால் கிடைக்கும் வருமானத்தை வைத்து தமது இயல்பு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அது மட்டுமின்றி கட்டுக்கரைக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதுடன் மீன்களை பதப்படுத்தி (வத்தல் போடுதல்)விற்பனை செய்து வந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழலை அடுத்து வடக்கில் உள்ள மக்கள் இடம் பெயர்ந்து சென்றபோது குறித்த கிராமத்தில் உள்ள மக்கள் இந்தியா மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் இடம் பெயர்ந்து சென்றனர். தற்போது சமாதான சூழ்நிலையின் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளச் சென்ற போது அக்கிராம மக்களும் மீளச் சென்றுள்ளனர்.

மீள் குடியேறியுள்ள இக்கிராமத்துக்கும், கிராம மக்களுக்கும் அரச உதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இந்தப் பகுதியை சேர்ந்த 7 மீனவ சங்கங்களைசேர்ந்த120அங்கத்தவர்களுக்கு 46 நன்னீர் மீன்பிடிக்கான வள்ளங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஆரம்ப காலம் போல் தற்போது வரை இக்கிராம மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை சந்தோசமாக வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையிலே குறித்த கிராம மக்களை எதுவித முன் அறிவித்தலுமின்றி உடனே வெளியேறும்படி வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்படுகின்றது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பலருக்கு எதிராக வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிராம மக்களை தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேற்ற ஏற்கனவே இராணுவம் முயற்சி செய்து வந்தது. இதற்கு மக்கள் ஒத்துழைக்காததால் பொது மக்களுக்குச் சொந்தமான பல இடங்களில் இராணுவத்துக்குச் சொந்தமான இடம் என இராணுவத்தினரால் பெயர்ப் பலகைகள் நடப்பட்டன என்றும், தற்போது வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் 'யோத வாவி சரணாலயம்' என குறிப்பிடப் பட்டுள்ள பெயர் பலகைகளை நட்டுச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–56)

# அம்பாறையில் மோட்டார் குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஓக.22

அம்பாறை, பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டைப் பிரதேசத்தில் பழைய மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது என்று பொத்துவில் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் ரொட்டைப் பிரதேசத்திலுள்ள நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் விசேட அதிரடிப்படையினரின் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த முகாம் அகற்றப்பட்டதை அடுத்து இந்தக் காணி நீர்ப்பாசன திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்தக் காணியை நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை மாலை துப்புரவு செய்து எல்லை இடும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, இந்த மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அது தொடர்பில் பொத்துவில் பொலிஸாருக்கு நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் தகவல் வழங்கியதை தொடர்ந்து, அங்கு விரைந்த பொலிஸாரும் பொத்துவில் அறுகம்பை விசேட அதிரடிப்படையினரும் மோட்டார் குண்டை மீட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ற)

# ஆற்றுமணல் அகழ்ந்தவர்கள் கைது

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பள்ளக்காடு களியோடை ஆற்றில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்வில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இருவரைத் தாம் கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். ஆற்று மணல் அகழ்ந்து உழவு இயந்திரங்களில் ஏற்றிக் கொண்டிருந்த இருவரையும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அக்கரைப்பற்று சாகாமம் விசேட அதிரடிப்படையினர் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று இருவரையும் கைதுசெய்ததுடன் இரண்டு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# வவுனிக்குள வாய்க்காலை பாதுகாக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.22

முல்லைத்தீவிலுள்ள வவுனிக்குளத்தின் இடதுகரை வாய்க்காலின் இரண்டு பக்கங்களையும் பாதுகாக்கக்கூடிய வகையில் கொங்கிரீட் வாய்க்கால் அமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும் நீர்ப்பாசனக் குளங்களின் ஒன்றான வவுனிக்குளம், 2013ஆம் ஆண்டு 600 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. குறித்த குளத்தின் நீரேந்துப்பிரதேசம் அதிகரிக்கப்பட்டமை, அணைக்கட்டு கலிங்கு ஆகியன உயர்த்தப்பட்டதுடன் நீர் விநியோக வாய்க்கால், கழிவு வாய்க்கால்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் என்பனவும் புனரமைக்கப்பட்டன.

அத்துடன் குளத்தில் இடதுகரை வாய்க்காலில் மண்ணரிப்பு ஏற்படக் கூடிய பகுதிகளில் கொங்கிரீட் இட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு பகுதிக்கு மாத்திரமே கொங்கிரீட் இடப்பட்டுள்ளது. எனவே, மண் அரிப்பை தடுக்கும் வகையில் இரண்டு பக்கமும் கொங்கிரீட் சுவர்களை அமைத்து குளத்தின் கீழான எஞ்சிய நீர்ப்பாசன வாய்க்கால்கள், நீர்ப்பாசன வீதிகள் உள்ளிட்ட கட்டுமானங்களை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)


## Vacancies

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Course Counselor - Female**

பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும். (Age 19-24)

**Junior Customer Service Executive Female (Age 19-24)**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asiansjobs@gmail.com

## தேவை

நல்லூர் ஆலய சூழலில் வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள நவீன சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் தகுதியுடையவர்கள் தேவைப்படுகின்றனர்.

* உதவி முகாமையாளர் ஆண்/ பெண்
* காசாளர் (Cashier) (பெண்கள் விரும்பத்தக்கது)
* சமையல் உதவியாளர்கள்
* சுத்திகரிப்புப் பணியாளர்கள்
* குழு உறுப்பினர்கள் Crew members

தொடர்பு : 077 480 3840

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை


## திருமஞ்சத் திருவிழா

(6 ஆம் திருவிழா)

காலம் :
இன்று (22.08.2015)
(ஆவணி 06 ஆம் நாள்)
சனிக்கிழமை

நேரம் :
மாலை 6.00 மணி

திருமஞ்சத்தில் அம்பாள் வலம்வரும் காட்சியைத் தரிசித்து நல்லருள் பெறுவோமாக.



இங்ஙனம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

திருமஞ்சத் திருவிழா உபயகாரர்.

## தேவை

யாழ் நகரத்திற்கு அண்மித்த பகுதியில் இயங்கும் உணவகத்திற்கு கொத்துரொட்டி தயாரிப்பவரும், உதவியாளரும் தேவை. சம்பளம் நேரில் கதைத்துத் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 846 9173

(62427) (9.3.7)

## வாடகைக்கு

ஆனைப்பந்தியடியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்களுக்கு உகந்தது.

தொடர்பு : 371/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## நாய்குட்டிகள் விற்பனைக்கு

Lion German Sheperd இன,60 நாள் நிரம்பிய Black and brown நிறமுடைய 02 ஆண் நாய்க்குட்டிகள் உடனடி விற்பனைக்கு உண்டு.

(சாவகச்சேரி மீசாலை)

தொடர்பு : 077 525 8639

## சிறுநீரகம் தேவை

19 வயது யுவதிக்கு $O^+$,$B^+$ உடைய சிறுநீரகம் தேவை.

தொடர்பு : 077 2715117,0773622151

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப்பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.

இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691

(62359) (45.3.7)

## மணமக்கள் தேவை

* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய Msc இஞ்சினியர் மணமகனுக்கு பட்ட தாரி மணமகள் தேவை.
* 85இல் பிறந்த 7இல் சூரியனும் செவ்வாயும் 56 பாவமுடைய A/L சித்தி அடைந்த மணமகளுக்கு அரச உத்தியோகத்தில் மணமகன் தேவை.
* 87 இல் பிறந்த 7இல் சூரியனும் செவ்வாயும் 80 பாவமுடைய POST MASTER மணமகனுக்கு அரச பணி புரியும் மணமகள் தேவை.
* 88 இல் பிறந்த 1இல் செவ்வாய் 70½ பாவமுடைய BBA முடித்து அரசபணிபுரியும் மணமகளுக்கு அரச பணிபுரியும் மணமகன் தேவை.
* 89 இல் பிறந்த 12இல் செவ்வாய் 34½ பாவமுடைய அரசவங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 36½ பாவமுடைய அமெரிக்கா பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 89 இல் பிறந்த 7இல் சூரியனும் செவ்வாயும் 30¾ பாவமுடைய BSc மணமகளுக்கு வெளிநாடு OR அரச பணிபுரியும் மணமகன் தேவை.
* 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 30பாவமுடைய லண்டன் பிரஜாஉரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு:
காலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச் சோலையடி, [illegible]
077 607 0862


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஓக. 22
நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பாரம்பரிய விளையாட்டு விழாவும் நாளை ஞாயிற் றுக் கிழமை பி.ப 3மணிக்கு மன்ற முன்றலில் நடைபெற வுள்ளது. (ற-7)


ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி தங்கம்மா கந்தையா



திதி: ஆவணி வளர்பிறை அட்டமி
முன்னைத் தவப் பயனாய் அம்மா!
உந்தன் உதிரத்தில் உற்பவித்தோம்
எம்முடைய செல்வங்களை
- சிறப்பாடையச் செய்தாய்
என்றும் நாம் சிறப்படைய
- பாடுபட்ட அம்மா
இன்று ஓராண்டு போயுள்ளதே
அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காய்
நிதம் போற்றி நிற்கும்.

மலர்வு 04.10.1936
உதிர்வு 02.09.2014

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
கச்சாய் வீதி, கொடிகாமம்.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 02 . 1952
மறைவு 02 . 09 . 2014

திருமதி சிவனேஸ்வரி ஜெயரட்ணம்

எம் குடும்பத்தின் குலவிளக்கே! உங்களை
இழந்த துன்பமும் துயரமும் எம் மனதிலிருந்து
இன்னும் மறையவில்லை! மண்ணிலிருந்து
நீங்கள் மறைந்தாலும் எங்கள் நினைவில் என்றும்
நிறைந்து வாழ்கின்றீர்கள்!

உங்கள் பிரிவால் வாடும்,
உங்களை நினைவுகூரும்
கணவர், பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

ஒஸ்காலேன்,
உரும்பிராய் தெற்கு
உரும்பிராய்



விழிகளில் கண்ணீர் கரைந்து
12 வருடங்கள் ஆனதைய்யா.......



ஜெகத்சனாய் 03 . 04 . 1959
ஜெகத்பமாய் 03 . 09 . 2003

திதி: பூர்வபக்கஅட்டமி 22.08.2015

வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

எம் கரம் பற்றி வாழ்வின் வழி - சொல்லாது
இடையிலே சென்றது ஏனைய்யா....!
காலனவன் உம் மீது ஆசை கொண்டு
அழைத்தான் என்றா எம்மை விட்டு சென்றீர்கள்
உம் பிள்ளைகள் நாம் இன்று - தரணியிலே
பெருமையுடன் வாழ்கின்றோம்
இதைக்கண்டு கண்மலர இன்று
நீங்கள் இல்லையே - அப்பா
வானில் இருந்து ஆசீர்வதிக்கும் - உங்களை
எம் கண்களுக்குத் தெரியவில்லை - எனினும்
உம்மோடு நாம் அன்று இருந்த நினைவுகள்
இன்றும் எம் கண்களில் கண்ணீராய்க் கரைகின்றது
எத்தனை வருடங்கள் மலர்ந்தாலும் - உங்களது
ஆத்ம சாந்திக்காக கண்ணீர்துளிகளால்
இறைவனைப் பிரார்த்திப்போம்.....

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகள், மகன்,
மருமகன்மார்.

ஸ்ரீரங்கம்,
374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## கோயில் சுற்றுமதிலுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு



மட்டக்களப்பு, ஏறாவூர் ஸ்ரீகணேசா பத்திரகாளி அம்பாள் கோவில் வளவுக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு அடிக்கல் நேற்று வெள்ளிக் கிழமை நாட்டப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.யோகேஸ்வரன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டார்.
ஸ்ரீகணேசா காளிகா ஆலய பரிபாலன சபையினரும் ஊர் மக்க ளும் சனசமூக நிலைய நிர்வாகிகளுமாகச் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் ஆலய பிரதம குருக்கள் கே.வாம தேவன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் பி.கஜேந்திரகுமார், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் நிலோஜினி மோகனதாஸ், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும் அறிவாலயம் கல்வி அபிவிருத்திச் சபையின் தலைவருமான பரமேஸ்வரி இளங்கோவன் உட்பட ஊர் மக்களும் கலந்து கொண்டனர். (ற)

## இசை அரங்கம்

யாழ்ப்பாணம், ஓக.22
சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெய்வீக இசைச்சங்கமம் திருவிழாக்காலத்தில் தினமும் நடைபெறவுள்ளன. நான்காம் திருவிழாவான இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு மயிலணி, செல்வி சுபகரி ஈஸ்வர நிவாஸ்குருக்கள், இணுவில் கீதஸ்ரீ சிவானந்தசர்மா ஆகியோரின் இசை அரங்கம் நடனாஞ்சலி இடம்பெறும். (ஐ)


20ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் ஆறுமுகம் கந்தையா
(இளைப்பாறிய தபால் அதிபர் - கோப்பாய்)
திதி: ஆவணி மாத பூர்வபட்ச அட்டமி
22.08.2015 சனிக்கிழமை

தோற்றம் 18.04.1907
மறைவு 02.09.1995

எம் அருமை அப்பாவே! இருபது ஆண்டென்ன
இருபது ஆயிரம் ஆண்டுகள்தான் உருண்டாலும்
உங்களது நினைவுகள் எங்களை என்றும்
விட்டு அகலாது! உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
க.குலராசன் (மகன்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

கைதடி தெற்கு,
கைதடி.



9ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் பத்மநாதன் வீஷ்மானந்தர்

மலர்வு 30.05.1977
உதிர்வு 02.08.2006
திதி: அட்டமி 22.08.2015

ஆண்டுகள் ஒன்பது ஆனபோதும்
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு தீராத வேதனையால்
தினம் தினம் துடிக்கின்றோம்
ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறாது எம் மனம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளோடு
அம்மா, அப்பா, சகோதரர்கள்
மற்றும் உறவினர்கள்.

யாழ்ப்பாணம்.


## நல்லூர் திருவிழாவில் இதுவரையில் 8 பேர் நகைகளை இழந்தனர்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 22
நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா ஆரம்பமாகியுள்ள நிலையில் அங்கு திருட்டு, கொள்ளைகளும் குறைவில்லாது நடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த புதன் கிழமை மாத்திரம் 8 திருட்டுகளில் சுமார் 20 பவுண் நகைகள் பறிபோயுள்ளன. எனவே கோயிலுக்கு வருபவர்கள் நகைகள் விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.
திருட்டுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் புத்தளத்தைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்த னர்.
எனினும் வேறு எவராவது அதில் தொடர் புபட்டுள்ளனரா என்பது தொடர்பிலும் விசா ரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த வருடமும் திருவிழாக் காலத்தில் திருட்டில் ஈடுபட்ட பெண்கள் சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நில்லயில் இம் முறையும் அது தொடர்கின்றது. இந்தச் செயற் பாடானது பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனவீனம் அல்லது உரிய வழிப்படுத்தல் இல்லாமை இதற்குக் காரணமா என்ற சந்தேகத் தைத் தோற்றுவிப்பதாகவும் பேசப்படுகிறது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற-4)

## முன்பள்ளி விளையாட்டு விழா

அச்சுவேலி, ஓக.22
ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா முன் பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன் பள்ளி விளையாட்டரங்கில் நடைபெறவுள் ளது.
செ.தவராசசிங்கம் தலைமையில் நடை பெறும் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், சிறப்பு விருந்தி னராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, ஆவரங்கால் நடராச இரா மலிங்க வித்தியாலய அதிபர் எஸ்.சத்திய வரதன், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் ஜெயசிங்க, பிரதேச சபை புத்தூர் உபஅலுவலக பொறுப்பதிகாரி மு.தயாபரன் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-11)

## பாலர் பாடசாலை புதிய கட்டட திறப்பு விழா

தென்மராட்சி, ஓக.22
சாவகச்சேரி சங்கத்தானை நாமகள் பாலர் பாடசாலையின் புதிய கட்டடம் நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது. நீண்ட காலமாக தனியார் வீடொன்றில் இயங்கி வந்த நாமகள் பாலர் பாடசாலைக்கு தற்போது அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.
பாலர் பாடசாலையின் நிறுவுநரும், நீண்ட கால ஆசிரியையுமாக கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி நா.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் மற்றும் பாலர் பாடசாலையின் பழைய மாணவனும் யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவரு மான த.சதீஸ்குமாரும், கௌரவ விருந்தினர் களாக ஓய்வுநிலை கிராம அலுவலர் சி.க. வேலாயுதபிள்ளை, பாடசாலையின் பழைய மாணவனும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி யின் முன்னாள் ஆசிரியரும் தற்போது பிரான்ஸில் வசிப்பவருமான த.பரமானந் தம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள் ளனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டேப்லட்

## வாங்கும்போது கவனிக்க வேண்டியவை



டேப்லட் இன்றைய நாளில் அனைவரும் பயன்படுத்தும் சிறிய கணினிச் சாதனமாகவுள்ளது. எங்கும் எந்த நேரமும் அலுவலக மற்றும் கல்வி சம்பந்தமான விடயங்களை, பணிகளை செய்ய டேப்லட் உதவி புரிகிறது. டேப்லட் தற்போது அவரவர் பயன்படுத்தும் நோக்கில் வகைப்படுத்தப் பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆயினும் டேப்லட் வாங்கும் போது கவனிக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

**எத்தகைய பணிக்கு ஏற்ற டேப்லட்:**
அலுவலகப் பணிக்கான, அலுவலகம் சார்ந்த, தொழில் முறைசார்ந்த தேவைக்கு எனும்போது முழு அளவு அதாவது 8.9 இன்ச் அல்லது அதைவிட பெரிய திரை கொண்ட டேப்லட் பயன்படும். இதில் கீ போர்ட் வெளிப்புற இணைப்பாக இருப்பது அவசியம். ஒவ்வொரு டேப்லட் தயாரிப்பு நிறுவனமும் அலுவலகப் பணி சார்ந்த இணைப்புகளைக் கொண்டவாறு டேப்லட்டை உருவாக்கித் தருகின்றன.

**விளையாட்டுக்கு ஏற்ற டேப்லட்:**
அப்பிள் ஐபேடு விளையாட சிறந்த டேப்லட். அதுபோல் ஆண்ட்ராய்டு டேப்லட்டில் உள்ள ஸ்நாப்டிராகன் 805 மற்றும் டெக்ரா சிறந்த கிராபிக்ஸ்க்கு உதவி புரிகிறது. டை-ஹார்ட் விளையாட விரும்புபவர்களுக்கு நிவிடியா ஷீல்டு டேப்லட் நல்ல பலனைத் தருகிறது. சிறுவர்களுக்கு ஏற்ற பாதுகாப்பு அம்சத்துடன் நிறையக் குடும்பப் பகிர்வுகளைக் கொண்ட டேப்லட் சிறந்ததாக இருக்கும். அந்த வகையில் அமேசான் பையர் டேப்லட் நன்மை பயக்கும். அமே சான் பையர், அதிக உத்தரவாதம் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்ற பல சிறப்பம்சம் கொண்டது.

**டேப்லட் காட்சித் திரை அளவுகள்:**
எமக்கு எந்த அளவு காட்சித் திரை வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். 7 இன்ச் என்பது நமது கையில் அடக்கிவிடக் கூடிய அளவு. 8 இன்ச் அளவு என்பதில் அதிக அப்ஸ், கேம்ஸ் மற்றும் படங்கள் கொண்டதாகவுள்ளது. 10 இன்ச் என்பது பெரிய அளவாக வுள்ளது. நிறை 1 முதல் 1.6 பவுண்ட் வரை டேப்லட்டுக்கள் உள்ளன. நிறை குறைவான டேப்லட் எடுத்து செல்ல வசதியாக இருக்கும்.

**இயங்கு தளங்களில் அணி வரிசை:**
ஆண்ட்ராய்டு, ஐஓஎஸ் 8, விண்டோஸ் 8.1 என்ற இயங்கு தளங்களைக் கொண்டவாறு டேப்லட் வருகிறது. இதில் நமக்குத் தேவையான இயங்குதளத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இயங்கு தளங்களைக் கொண்டே சில டேப்லட்களின் விலையும் நிர்ணயிக்கப்படுவதுடன், புதிய தொழில்நுட்ப அம்சங்களும் நிறைய இருக்கும்.

**எந்த வகையான அப்ஸ்கள் வேண்டும்:**
அப்ஸ் ஸ்டோர்களை தேர்ந்தெடுப்பது நமது கையில் அப்பிள் அப்ஸ்டோர், கூகுள் பிளே ஸ்டோர், அமேசான் ஆன் டிமாண்ட் இவற்றில் எது எமது அப்ஸ் தேவைகளைப் பூர்த்தி செய்யுமோ அதனைக் கொண்ட டேப்லட்டைத் தேர்ந் தெடுங்கள்.

**ரேம் வசதி:**
டேப்லட்கள் 2ஜிபி ரேம் கொண்டு இருப்பது சிறந்தது. சில டேப்லட் 3 ஜிபி ரேம்- உடன் வருகின்றன.
டேப்லட்களை தேர்ந்தெடுக்கு போது மேற்கூறியவைகளைக் கவனித்து வாங்கவும்.

## Samsung Galaxy S6 Edge Plus ஸ்மார்ட் கைப்பேசியின் சிறப்பம்சங்கள்



அப்பிள் நிறுவனத்துக்குப் போட்டியாக ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்து வரும் சாம்சுங் நிறுவனம் Samsung Galaxy S6 Edge Plus எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.
இந்தக் கைபேசியானது Samsung Galaxy S6 Edge கைபேசியின் புதிய பதிப்பாக வெளிவரவுள்ள நிலையில், அதன் சிறப்பம்சங்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி 5.7 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய Quad HD Super AMOLED தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், Samsung's Octa Core Exynos 7420 Processor, பிரதான நினைவகமாக 4GB RAM, 32GB அல்லது 64GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. இவை தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.



நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்துக்குத் தினமும் பாம்பு கடல் வழியாக பூக்கொண்டு செல்லும் வரலாற்றுச் சிறப்புமிக்க அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலய பெருந் திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த் திருவிழாவும்,மறுநாள்தீர்த்தத்திருவிழாவும்நடைபெறவுள்ளன. (ற-9)

# மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடுதியில் தங்கியிருந்தோர் வெளியேற்றம்

## நீதிமன்ற உத்தரவையும் மீறித் தங்கியிருந்தமையால்



மன்னார், ஓக.22
மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விடுதியில் பலவந்தமாக தங்கியிருந்த வர்கள் நேற்றுக் காலை பொலிஸாரின் உத வியுடன் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
மன்னார் நகர சபை பிரதான வீதியில் மன்னார், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடுதி அமைந்துள்ளது.
குறித்த விடுதியில் கடந்த 33 வருடங்களுக்கு முன் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கடமையாற்றிய ஒருவர் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்துள்ளார்.
இந்த நிலையில் கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கடமையாற்றிய குறித்த நபர் இறந்து விட்டார்.
இந்த நிலையில் ஏனையவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபை கோரிக்கை விடுத்திருந்தது.
எனினும் கடந்த 8 வருடங்களாக அவர்கள் குறித்த விடுதியிலே வாழ்ந்துள்ளனர். அதையடுத்து மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அவர்களை வெளியேற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டது.
கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த விடுதியில் தங்கியிருந்தவர்கள் அங்கிருந்து வெளியேறிச் செல்ல நீதிமன்றால் 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த நிலையில்மூன்று மாதகால முடிவில் குறித்த வழக்கு விசாரனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவர்கள் குறித்த விடுதியை விட்டு வெளியேறவில்லை.
இந்த நிலையில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாக நேற்று வெள்ளிக்கிழமை காலை. மன்னார் பொலிஸாரின் உதவியுடன் குறித்த விடுதியில் இருந்த பொருள்கள் அனைத்தும் வெளியில் கொண்டு வரப்பட்டு அங்கிருந்த வர்கள் வெளியேற்றப்பட்டனர். (ற-56)

# பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோர்களின் பங்களிப்பு

## காத்தான்குடியில் கலந்துரையாடல்

பாடசாலை அபிவிருத்தி முகாமைத்துவத்தில் சிவில் சமூகமான பெற்றோர்களின் பங்களிப்பு எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடலொன்று நேற்று வெள்ளிக் கிழமை காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.
சொலிடாரி லைக் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழுள்ள கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.நிசாம், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கிழக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது வலயக் கல்வி அலுவலகங்களின் கல்வி அதிகாரிகள், கோட்டக்கல்வி அதிகாரிகள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.
பாடசாலை அபிவிருத்தி முகாமைத்துவத்தில் சிவில் சமூகமான பெற்றோர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இதை வலுப்படுத் தும் வேலைத்திட்டமாக இந்த வேலைத் திட்டம் இடம்பெறுவதாக இதன் ஏற்பாட்டாளர், சொலிடாரி லைக் நிறுவனத்தின் ஆலோசகர் அய்யூப் கிதாயத்துல்லாஹ் இதன்போது தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே கிராமத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் திடீர் மாயம்

### நீங்காத மர்மம்

ரொறான்ரோ,ஓக.22

கனடாவில் அமைந்துள்ள அங்கிகுனி என்றழைக்கப்பட்ட கிராமத்தில் வாழ்ந்த 2 ஆயிரம் குடியிருப்புவாசிகள் திடீரென மாயமான சம்பவம் மர்மமாகவே நீடிக்கின்றது. அந்தக் கிராமத்தில் சுமார் 2 ஆயிரம் எஸ்கிமோக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் விலங்கின் தோல்களை விற்று அதன் மூலம் தங்களது வாழ்வை நடத்தி வந்துள்ளனர். எனவே அவர்கள் விலங்கை வேட்டையாடுவதற்காக வேட்டை நாய்களையும் வளர்த்து வந்துள்ளனர். அந்தக் கிராமத்தினரிடம் இருந்து விலங்கின் தோல்களை வாங்கிச் செல்ல எண்ணற்ற வியாபாரிகள் வந்து செல்வது வழக்கம். இந்த நிலையில் அந்தக் கிராமத்தில் கடந்த 1930 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் பனிக் காலத்தில் ஒரு வினோத சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. கனடாவைச் சேர்ந்த ஜோ லேபலே என்னும் விலங்குத் தோல் சேகரிக்கும் நபர், அந்த கிராமத்துக்குச் சென்றுள்ளார். அவர் அந்தக் கிராமத்தை அடைந்த போது அங்கு ஒரு அமைதி நிலவியுள்ளது. ஜோலேபலே கண்ணில் ஓர் கிராமவாசி கூடத் தென்படவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த அவர் அங்கிருந்த அவர்களது கூடாரங்களைத் தேடிச் சென்றுள்ளார். தெருக்கள் மட்டுமல்லாமல் அனைத்துக் கூடாரங்களும் ஆள்கள் இல்லாமல் வெறுமையாகவே இருந்துள்ளன. மேலும் அவர்கள் வளர்த்த வேட்டை நாய்கள் ஒன்று கூட அந்தக் கிராமத்தில் இல்லை.

வறுமை மற்றும் பஞ்சம் காரணமாக அவர்கள் அந்தக் கிராமத்தை விட்டு இடம் பெயர்ந்திருக்கலாம் என்று நினைத்த அவர், அவர்களுடைய தானியக் கிடங்கைச் சோதனையிட்டுள்ளார். ஆனால் அங்கிருந்த அனைத்துக் கூடாரங்களிலும் போதுமான அளவில் உணவும், மீன்களும் சேகரித்து வைக்கப்பட்டு இருந்துள்ளன. இதனால் மேலும் குழப்பமும் அதிர்ச்சியும்டைந்த ஜோ, கிராமத்தினரின் காலடித் தடங்கள் எதுவும் உள்ளதா? அதன் மூலம் அவர்கள் எந்த திசையில் சென்றார்கள் என்று அறிய அந்தப் பனிப் பிரதேசத்தில் தேடியுள்ளார்.

பயத்தில் தந்தி அலுவலகம் நோக்கி ஓட்டமெடுத்த அந்த நபர், கனடா பொலிஸாருக்கு நடந்த சம்பவத்தைப் பற்றித் தந்தி அனுப்பியுள்ளார். இதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர். எவ்வித தடயமும் கிடைக்காததை அடுத்து பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டுச் சோதனை நடந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் அங்கிருந்த கல்லறைகள் அனைத்தும் வெறுமையாக இருந்துள்ளமை மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அங்கு புதைக்கப்பட்டிருந்த உடல்கள் யாரால், எதற்காக அகற்றப் பட்டன என்ற சந்தேகம் எழுந்தது.

அப்படியெனில் பனியால் சூழப்பட்ட அந்தக் கிராமத்தில் ஜோ நுழைந்த போது, எரிந்த தீப்பந்தங்கள் யாரால் எவரால் கொளுத்தப்பட்டன என்பது போன்ற எண்ணற்ற விடை தெரியா கேள்விகள் மிச்சம் இருந்தன. இந்தச் சம்பவம் உண்மை சம்பவம் அல்ல என்றும், புனைவுக் கதை தான் என்றும் கூறப்படுவதால் எது உண்மை என்ற முடிவுக்கு வருவதில் பெரும் குழப்பமே நீடிக்கிறது. (ஐ)

# போர்க் களமாகிய அகதிகள் முகாம்

## குர்ஆன் புத்தகத்தை கிழித்து கழிவறையில் வீசிய அகதி



பேர்லின்,ஓக.22

ஜேர்மனி நாட்டில் அகதி ஒருவர் இஸ்லாமிய புனித நூலான குர்ஆனைக் கிழித்து கழிவறையில் வீசியதால் வெடித்த கலவரத்தில் இஸ்லாமியர்கள் மற்றும் அகதிகள் மோதிக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துரிங்கியா நகருக்கு அருகில் அமைந்துள்ள அகதிகள் முகாம் ஒன்றில் ஆயிரத்து 200 புகலிடக்காரர்கள் மட்டுமே தங்க வைப்பதற்குப் பதிலாக ஆயிரத்து 800 நபர்களை அதிகாரிகள் தங்க வைத்துள்ளனர். அது மட்டுமல்லாமல், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களை ஒரே இடத்தில் தங்க வைத்துள்ளதால், அவர்களுக்குள் அடிக்கடி வாக்கு வாதங்கள் எழுந்த வண்ணம் இருந்துள்ளன.

இந்த நிலையில் கடந்த புதன் கிழமை இரவு நேரத்தில், அகதிகள் முகாமில் தங்கியிருந்த ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர், இஸ்லாமியர்களின் புனித நூலான குர் ஆனைக்கிழித்துக்கழிவறையில் வீசியதாகக் கூறப்படுகிறது.

இதனை அறிந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 20 இஸ்லாமியர்கள் முகாமில் நுழைந்து குர் ஆனைக் கிழித்த நபரைச் சரமாரியாக தாக்கிக் கொல்ல முயற்சித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தடுக்க வந்த அகதிகளையும் அவர்கள் சரமாரியாகத் தாக்கியுள்ளனர். நிலமையை அறிந்த பொலிஸார், அகதிகள் முகாமுக்கு விரைந்துள்ளனர்.

ஆனால், கலவரம் மோசமாக வெடித்திருந்ததால், அடிதடியைத் தடுக்க வந்த பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலவரத்தில் 6 பொலிஸார் உட்பட 11 அகதிகள் படுகாயம் அடைந்ததால் அவர்களை மீட்ட பொது மக்கள் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். கலவரம் குறித்துப் பேசிய ஜேர்மனியின் புலம்பெயர்வு துறை அமைச்சர், அகதிகள் முகாமில் அளவுக்கு அதிகமாக நபர்களை தங்க வைத்துள்ளதால் மட்டும் இந்தக் கலவரம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆனால், ஜேர் மனியின் பிரதமர் கூறுகை யில், கலவரம் நிகழ்ந்ததற்கு இட வசதிப் பற்றாக்குறையும் ஒரு காரணமாகத் தான் இருக்க முடியும் என்பதால், புலம் பெயர்ந்தவர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தி தரப்படும் என உறுதியளித்துள்ளார்.

மேலும், குர் ஆன் புத்தகத்தைக் கிழித்து வீசிய நபரை மன்னிக்க முடியாது என்றும், இதுபோன்ற செயல்கள் அகதிகள் முகாம்களின் நடை பெறாதவாறு நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப் படும் எனவும் உறுதியளித்துள்ளார். (ஐ)

## ஆசிய அழகியாக இந்தியப் பெண் தெரிவு





புதுடில்லி,ஓக.22

கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்ற அழகிப் போட்டி ஒன்றில் 2015 ஆம் ஆண்டின் ஆசிய அழகியாக கனிகாகபூர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்ற இந்த அழகிப் போட்டியில் பூட்டான், மலேசியா, இலங்கை, உஸ்பெகிஸ்தான், ஈரான் உள்ளிட்ட நாடுகளின் இளம் பெண்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டியில் இந்திய அழகு ராணியாகத் திகழும் கனிகா கபூர் 2015 ஆம் ஆண்டின் ஆசிய அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பரிசுகளும், பாராட்டுக்களும் குவிந்த வண்ணம் உள்ளன. 2 ஆவது [illegible] அல்ப்மேரி நதானியும், 3 [illegible] ஜைல்லா குலெவாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (ஐ)



## விமானத் தாக்குதலில் 43 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத்,ஓக.22

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானைச் சேர்ந்த பழங்குடி இன தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் பாகிஸ்தானில் வடக்கு மற்றும் தெற்கு வாஜிரிஸ்தான் பகுதிகளில் அந்த நாட்டு இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 43 பேர் கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் இராணுவத்தினர் கூறும் போது வடக்கு மற்றும் தெற்கு வாஜிரிஸ்தான் பகுதிகளின் –வால் பள்ளத்தாக்குப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தின் விமானங்கள் தொடர்ந்து குண்டுவீச்சு நடத்தின. அதில் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் அழிக்கப்பட்டன. மேலும் இந்தத் தாக்குதலின் போது அங்கு பதுங்கியிருந்த 43 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தமிழகம் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம்

புதடில்லி,ஓக.22

இந்தியாவில் பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள் ளது. தேசிய குற்றப் பதிவு ஆணையத்தின் ஆய்வில், இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக வாழ யூனியன் பிரதேசங்கள்தான் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ள்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாகலாந்து, லட்சத்தீவு புதுச்சேரி, தத்ரா நகர்வேலி, டாமன் மற்றும் டையூ என்பவையே அவையாகும்.இவற்றுக்கு அடுத்தபடியாக பெரிய மாநிலங்கள் வரிசையில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. இந்திய அளவில் பாதுகாப்பான மாநிலங்கள் பட்டியலில் தமிழகத்துக்கு 6 ஆவது இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிரீஸ் பிரதமர் பதவி விலகல்

ஏதேன்ஸ்,ஓக.22
கிரீஸ் நாட்டின் பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ் தமது பதவியை விட்டு விலகப் போவதாக அறிவித்துள்ளார். தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு ஏதுவாக அவர் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கிரீஸ், கடந்த 5 வருடங்களாகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அந்த நாட்டுக்கு நிதியுதவி அளித்து வந்த ஐரோப்பியக் கூட்டமைப்பு, சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தி வந்தது. பல கட்டப் பேச்சின் பின்னர் கீரிஸ் பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்துடனான கடன் ஒப்பந்தத்துக்கு சிப்ராஸ் சார்ந்திருந்த கட்சியிலேயே கடும் எதிர்ப்பு நிலவியது. இந்த நிலையில் கடன் வழங்கிய சர்வதேச நாடுகளுடன் பேச்சு நடத்தும் மிகக் கடினமான மற்றும் முக்கிய காலகட்டம் கடந்து விட்டது. இந்த ஒப்பந்தம் குறித்து நாட்டு மக்கள் என்ன கருதுகின்றனர் என்பதைக் கூற அனுமதிக்க வேண்டியது எனது கடமை. எனவே எனது பதவியை விட்டு விலகி தேர்தலைச் சந்திக்க போகிறேன் எனப் பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ் அறிவித்துள்ளார். (ஐ)

# வட- தென் கொரியா எல்லையில் மோதல் மக்கள் வெளியேற்றம்



சியோல்,ஓக.22
தென் கொரியாவிலிருக்கும் இராணுவ முகாம் மீது வட கொரியா நேற்று முன்தினம் தாக்குதல் மேற்கொண்டது. இதனையடுத்து தென் கொரியாவும் பதில் தாக்குதல்களை நடத்தியுள்ளது என தென் கொரியா தெரிவித்துள்ளது.
தென்கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் 1950-53 இல் நடைபெற்ற போரில் அமைதி உடன்படிக்கை ஏதும் ஏற்படவில்லை. போர் நிறுத்தம் மட்டுமே செய்து கொள்ளப்பட்டது. இதனால், இரு நாடுகளுக்கும் இடையில் மோதல் நடைபெறுவது வாடிக்கையாக இருந்து வருகிறது.
இந்த நிலையில் தென் கொரியாவில் சியோலுக்கு வட மேற்கில் உள்ள யோன்சியோன் பகுதியின் மீது வடகொரியா ரொக்கட் தாக்குதல் நடத்தியுள்ளது.
இதையடுத்து ரொக்கெட் ஏவப்பட்ட பகுதியை நோக்கி தென் கொரியாவும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.
இதன் காரணமாக யோன்சியோனில் வசித்து வந்த சுமார் 80 பேர் வெளியேற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தப்பகுதியில் வசிக்கும் மற்றவர்களும் வெளியேற வலியுறுத்தப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இரு தரப்பிலும் ஏற்பட்ட சேதம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. (ஐ)

## வரலாற்றில் வெப்பமான ஜூலை மாதம்

### அமெரிக்க விஞ்ஞானிகள் தகவல்


வொஷிங்டன்,ஓக.22
பூமியின்வெப்பநிலையை தொடர்ந்து அதிகரித்து வருவதன் மூலம் ஒரு புதிய மற்றும் சிக்கலான சாதனை ஒன்று செய்யப்பட்டுள்ளது. கடந்த ஜூலை மாதம் தான் வரலாற்றின் மிகவும் வெப்பமான மாதம் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது பற்றி விஞ்ஞானிகள் கூறும் போது "கடந்த காலத்தை ஒப்பிடும் போது 1880 முதல் 2015 வரையிலான ஆண்டுகளில், கடந்த ஜூலை மாதம் தான் மிக உயர்ந்த வெப்பநிலை உடைய மாதமாக இருந்துள்ளது. இது புவியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்தப்படியே இருப்பதைத் தான் காட்டுகிறது" எனத் தெரிவித்துள்ளனர். மேலும் புதை படிவ எரி பொருள்களை அதிகமாக எரிப் பது தான் இதற்கு முக்கிய காரணம் என அமெரிக்காவில், ஒன்லைனில் வெளியான மாதாந்த உலக காலநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## சோமாலியாவில் தீவிரவாதிகள் சாவு



ஜோகன்னஸ்பர்க்,ஓக.22
ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல் ஷபாப் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். பல கிராமங்களை அவர்கள் கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அந்தத் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில், ரான் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இதனை மூத்த இராணுவ அதிகாரி முகமது உமர் உறுதி செய்துள்ளார். அல் ஷபாப் தீவிரவாதிகள் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை விடுவிக்கும் வரையில் தாக்குதல் தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பாதிரியார் மீதான இனப்படுகொலை விவகாரம் பிரான்ஸ் அரசால் வழக்குத் தள்ளுபடி



ருவாண்டா,ஓக.22
உலகையே உலுக்கிய ருவாண்டா நாட்டு இனப்படுகொலையில் சுமார் 10 லட்சம் அப்பாவி மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்படும் கிறிஸ்துவ பாதிரியார் மீதுள்ள வழக்கைத் தள்ளுபடி செய்யவுள்ளதாக பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது. ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ருவாண்டாவில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் சுமார் 5 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலான மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் ருவாண்டா நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர், கிளர்ச்சியாளர்களுக்கு தன்னுடைய தேவாலயத்தில் அடைக்கலம் அளித்ததுடன், அங்கு ஏற்கனவே அடைக்கலமாகியிருந்த நூற்றுக்கணக்கான சிறுமிகள் மற்றும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகக் காரணமாக இருந்துள்ளார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.
ருவாண்டா நாட்டுச் சிறைத் தண்டனையிலிருந்து தப்பிக்க அந்தப் பாதிரியார் பிரான்ஸ் நாட்டில் அடைக்கலம் தேடி கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் பிரான்ஸில் வசித்து வருகிறார். ருவாண்டா நாட்டின் கோரிக்கையை ஏற்று பிரான்ஸ் [illegible]
[illegible] தைத் தொடர்ந்து, ருவாண்டா இராணுவ நீதிமன்றம் அந்தப் பாதிரி யார் இல்லாமலே அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. இதனைத் தொடர்ந்து, அவரைத் தனது நாட்டிடம் ஒப்படைக்குமாறு ருவாண்டா விடுத்த கோரிக்கையை பிரான்ஸ் அரசு நிராகரித்து வந்துள்ளது.
பல வருடங்களாக நடைபெற்று வந்த இந்த விசாரணையைத் தொடர்ந்து, [illegible] பட்டுள்ள எந்தக் குற்றச்சாட்டுகளையும் நிரூபிக்கும் வகையில் தகுந்த ஆதாரங்கள் இல்லை என்பதால் அவர் மீதுள்ள வழக்கைத் தள்ளுபடி செய்யவுள்ளதாக பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது.
இனப்படுகொலை குற்றம் சாட்டப்பட்டுள்ள பாதிரியார் தற்போது தெற்கு பிரான்ஸில் உள்ள ஒரு தேவாலயத்தில் பாதிரியாராக செயற்பட்டு [illegible] (ஐ)

## ஆளுநர் அலுவலகம் மீது வெடிகுண்டுத் தாக்குதல்

### 4 பேர் உடல் சிதறி சாவு

ஏடன்,ஓக.22
யேமன் நாட்டின் தெற்குப்பகுதியில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்றான ஏடனில், ஆளுநரின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த குண்டொன்று வெடித்ததில் 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 10 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
ஆளுநரின் தற்காலிக அலுவலகம், ஏடனில் உள்ள நிர்வாக அறிவியல் மையத்தில் செயல்படுகிறது. இந்த அலுவலகம் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் ஆளுநர் நயீப்-அல்-பக்ரிக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.
கடந்த மாதம் ஷியா கிளர்ச்சியாளர்களிடமிருந்து அரச படையினரால் ஏடன் நகர் கைப்பற்றப்பட்ட பின்னர் நடைபெறும் முதல் தாக்குதல் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறாளர்களைச் சீர்திருத்தும் பணியில் சமுதாய சீர்திருத்தக்காரியாலயம்

யாழ்ப்பாண நீதிவான் நீதி மன்றத்தில் தவறாளர்களாக இனங்காணப்பட்டு குற்றப் பணம் நியமிக்கப்பட்ட நபர்களுக்கு அந்தக் குற்றப்பணத்தை செலுத்தமுடியாது சிறைச் சாலைகளில் அடைக்கப்படுவதன் மூலம் குடும்பச் சீர்குலைவு, தொழிலை இழத்தல் பொருளாதார பின்னடைவு, பிரத்தியேக குற்றச்செயல்களுக்கு பழக்கப்படல், பிள்ளைகளின் எதிர்காலப் பாதிப்பு, எதிர்கால இருள் மிகுந்த வாழ்க்கை போன்ற நிலைப்பாடுகளுக்கு தள்ளப்படுகின்ற தவறாளர்களை மீண்டும் தமது குடும்ப மற்றும் சமூக வாழ்க்கையுடன் இணைத்தல், பொருளாதார பிரச்சினைகளை நீக்குதல், சுயதொழில் வாய்ப்புக்கள் மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கல் தவறுகள் தொடர்பான விளக்கங்கள், சிகிச்சைகள் தெரிவுகள் வழங்கல் போன்ற செயற்பாட்டில் சமுதாய சீர்திருத்த காரியாலயங்கள் செயற்பட்டு வருகின்றன. அந்த நிலையில் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிவரும் சமுதாய சீர்திருத்தக் காரியாலயம் 2013 ஆம் ஆண்டு குறிப்பிட்ட தவறாளர்களை சீர்திருத்தத்துக் கென நீதிமன்றத்திடமிருந்து பெற்று சீர்திருத்த காரியாலயத்தினூடாக சீர்திருத்திக் குடும்பத்துடன் இணைத்துள்ளது. தொடர்ந்து 2014 ஆம் ஆண்டு 65 தவறாளர்களையும் 2015 ஆம் ஆண்டு முதல் 6 மாதகாலப் பகுதிக்கு 80 தவறாளர்களையும் சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு (சமூக சேவை) உட்படுத்தி அவர்களுக்கென சீர்திருத்தப்பணிகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறான சமூக சேவை கட்டளையாளர்களில் 7 பேர் பெண்களாவர். நீதிமன்றமானது குற்றவாளிகளை சிறைவாசம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும் நிறு



> 1999 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க சமுதாய சீர்திருத்த சேவை சட்டத்துக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கட்டாயச் சிறை மற்றும் நட்டஈட்டுப் பணம் தவிர்ந்த ஏனைய தண்டப்பணங்களுக்கு. சிறுகுற்றம் தொடர்பான தண்டனைக்கு சட்டத்தரணி ஊடாகவும் அல்லது சுயமாகவும் சமுதாய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வனம் என நினைக்கும் பொதுமக்கள் மத்தியில் அங்கு – சிறுவர் பாதுகாப்பு அணி, குடும்ப நன்னடத்தைப் பிரிவு, சட்டத்தரணிகள் தெளிவுபடுத்தல் பிரிவு, நீதிமன்ற தாபன நடைமுறைகள், தீர்ப்புக்கு பதிலான சிவில்நீதிமன்ற நியமிப்பு, குடும்ப ஆலோசனைப் பிரிவுகள், போதைப்பொருள் சிகிச்சை மையம், உளவளப் பிரிவு, சமுதாய சீர்திருத்தப் பிரிவு போன்றவை நீதிமன்றங்களில் காணப்படுகின்றமையை அறியாதுள்ளனர்.

இவ்வாறாக தவறாளர்களை சமு தாய சீர்திருத்தத்துக்கு உட்படுத்தும் பெரும் பணியைச் செய்து வரும் சமுதாய சீர்திருத்தக் காரியாலயம். நீதி அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் சமுதாயம்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் கீழ் ஒவ்வொரு நீதிவான் நீதிமன்றங்களிலும் இயங்கி வருகின்றது. சமுதாய சீர்திருத்தக் காரியாலயம், போதைப்பொருள் தொடர்பான உபதேசம், சிகிச்சை மற்றும் ஆன்மிகச் சிந்தனை, சிரமதானப் பணி, விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம், குடும்பநல உபதேசம், சமூகமயப்படுத்தல், தலைமைவகித்தல் செயற்பாடு, தொழில்பயிற்சி, சுயதொழில் மற்றும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடு, சட்டங்கள், ஒழுங்குகள் தொடர்பான தெளிவுபடுத்தல் போன்ற நிகழ்ச்சிகளையும் சிறப்புத் தினங்களான அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, கிறிஸ்மஸ், றமழான்..... போன்றவற்றையும் சிறப்பு வேலைத்திட்டமாக கடிதவுறை, பயிர்ச்செய்கை, பை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதுடன் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்துக்கு உட்பட நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், வேலணை பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத் தர்களை நியமித்து அவர்களுக்கு ஊடாக சமுதாய சேவக கட்டளைக்கு உட்பட்ட தவறாளர், சிறைச் சாலையிலுள்ளவர்கள் மற்றும் சிறைச் சாலையிலிருந்து வெளிவந்தவர்கள் அவதானமுள்ளவர்கள் ஆகியோருக்கு சுய தொழில் வாய்ப்புக்கான கடன் திட்டம், உதவித் திட்டம், பாடசாலை பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் உள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் தவறாளர் குடும்பங்களின் பிரச்சினைகள் பிரதேச செயலகங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியுடன் இவ்வாறான பிரிவினரின் மீண்டும் குற்றம் செய்யாத வகையில் அவர்களது பிரச்சினைகளை இனங்கண்டு சமூகத்துடன் இணைத்து அவர்களை நல்வழிப்படுத்துவதே அபிவிருத்தி உத்தியோகத்தரின் கடமையாகும்.



1999 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க சமுதாய சீர்திருத்த சேவை சட்டத்துக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கட்டாயச் சிறை மற்றும் நட்டஈட்டுப் பணம் தவிர்ந்த ஏனைய தண்டப்பணங்களுக்கு, சிறுகுற்றம் தொடர்பான தண்டனைக்கு சட்டத் தரணி ஊடாகவும் அல்லது சுய்மாகவும் சமுதாய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

*சமுதாயம் சார் சீர்திருத்தக் காரியாலயம்*
*நீதிவான் நீதிமன்றம் – யாழ்ப்பாணம்*

# ஐந்து விருதுகளை வென்றுள்ள செலிங்கோ லைப் அதிகாரிகள்



செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் விற்பனை துறைசார் நிபுணர்கள் நான்கு பேர் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தேசிய விற்பனை காங்கிரஸ் வைபவத்தில் ஐந்து விருதுகளை வென்றுள்ளனர். அதன் மூலம் இந்த கீர்த்திமிக்க வருடாந்த நிகழ்வில் நாட்டின் ஆயுள் காப்புறுதித் துறைத் தலைவர்கள் பெரும் கௌரவத்தை ஈட்டியுள்ளனர்.

இவர்களுள் மிகச் சிறந்த பெறுபேறைப் பெற்றவர் நதீக ஜயமாலி ஆவார். ஆயுள் காப்புறுதி விற்பனை நிறைவேற்றுத்துறைப் பிரிவில் அவர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். அத்தோடு இந்த ஆண்டின் மிகச் சிறந்த பெண் விற்பனைப் பிரமுகர் என்ற விருதையும் அவர் வென்றுள்ளார். முன்னிலை, விற்பனை நிறைவேற்றுத் தரம் மற்றும் இடைநிலை முகாமைத்துவம் என மூன்று பிரிவுகளில் பெண்களுக்காக வழங்கப்பட்ட ஒரே விருது இதுவாகும்.

[illegible] சேல்ஸ் விற்பனைப் பிரிவைச் சேர்ந்த திருமதி ஆர்.எஸ். பனாகொட, ஆயுள் காப்புறுதித் துறையில் முன்னிலைப் பிரிவில் வெள்ளி விருது, டபிள்யூ.எஸ். ஆர்.பெர்ணான்டோ இடைநிலை முகாமைத்துவப் பிரிவில் வெள்ளி விருது, ஆர்.பி.எதிரிசிங்க விற்பனை நிறைவேற்று பிரிவில் வெண்கல விருது என்பனவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

விற்பனை அதிகாரிகள் மத்தியில் தொழிற்சார் பண்புகளை ஊக்குவிப்பது, தொடர்ச்சியான முன்னேற்றங்களுக்கான வசதிகளை வழங்குவது, என்பன செலிங்கோ லைஃப் கம்பனி உருவாக்கப்பட்டது முதலே அதன் அடிப்படை கொள்கைகளாக இருந்து வருகின்றன. இந்த அதிகாரிகளின் வெற்றிகள் குறித்து நாம் பெருமை அடைகின்றோம் என்று கூறினார் செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன். சிறந்த விற்பனைக் கோட்பாடுகளை பின்பற்றுவதில் நாம் காட்டும் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கம்பனியில் உள்ள ஏனைய அதிகாரிகளும் இத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள இது தூண்டுதலாக அமையும்' என்று அவர் மேலும் கூறினார்.

ஊடகம், தகவல் தொழில்நுட்பம், உற்பத்திகள் மற்றும் சேவைகள், காப்புறுதி, நிதித்துறை உற்பத்திகள் மற்றும் சேவைகள், தொலைத்தொடர்பு, உல்லாசப் பயண மற்றும் விடுமுறை சேவைகள், நவநாகரிகம் மற்றும் ஆடை வடிவமைப்பு, நுகர்வோர் பாவனைப் பொருள்கள், உணவு மதுபானம் மற்றும் புகையிலை பிரிவு என பல்வேறு பிரிவுகளில் முன்னிலை, நிறைவேற்று விற்பனை பிரிவு மற்றும் இடை நிலை முகாமத்துவம் என சிறந்த செயற்பாடுகளுக்குரிய தொழிற் சார் நிபுணர்கள் தெரிவு செய்யப்பட்டு வருடாந்தம் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதற்கான தெரிவுகளை மேற்கொள்ளும் நடுவர்கள் குழாம் முன்னிலையில் இவர்கள் நேர்காணல் ஒன்றுக்காக தோற்றிய பின்பே தெரிவுகள் இடம்பெறுகின்றன.

2004 முதல் இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் தலைமை தாங்கும் நிறுவனமான செலிங்கோ லைஃப் இந்தத் துறையில் நாட்டில் மிகப் பெரிய கிளை வலையமைப்பையும் கொண்டுள்ளது. நாட்டின் சகல மாவட்டங்களிலும் சுமார் ஐயாயிரம்பேர்கொண்ட விற்பனைப் படையும் அதற்கு உண்டு. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள் புனரமைப்பு இடம்பெறுமா?

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்துக்கு வடக்குப் புறமாக அமைந்திருக்கும் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியின் பல இடங்களிலும் சல்லிக் கற்கள் வெளிக் கிளம்பிக் காணப்படுவதால் மோட்டார் சைக் கிள், சைக்கிள் ஆகியவற்றில் செல்பவர்கள், சில்லுகளில் காற்றுப் போவதால் அவற்றை உருட்டிச் செல்வதையும் காண முடிகின்றது. மேலும் அண்மையில் பெய்த மழை காரணமாக இந்த வீதி ஆரம்பமாகும் இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் அமைந்துள்ள பள்ளத்தில் வெள்ள நீர் தேங்கி நின்றதால் மக்கள் நடந்து செல்ல முடியாத நிலை கூட உருவாகியது.

இதேவேளை இந்த வீதியின் புனரமைப்புக்கென பறிக்கப் பட்ட கற்கள் சீண்டுவாரில்லாத நிலையில் பல நாள் களாகக் காணப்படுகின்றன. இந்த வீதி அகலிக்கப்பட்ட பின்னரே புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இழுபறி நீடிக்குமானால் வீதியின் புனரமைப்பு இடம்பெறும் சாத்தியங்கள் இப்போதைக்கு இல்லை யென மக்கள் தெரிவிக்கின்றனர். வீதியின் தற் போதைய நிலையில் அதைப் புனரமைத்துவிட்டு எதிர் காலத்தில் வீதி அகலிப்புத் தொடர்பாகச் சிந்திக்கலாமெனவும் மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் வீதியும் மோசமாகப் பாதிக் கப்பட்ட நிலையில் காணப்படுவதால், இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்களும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அண்மையில் பெய்த மழை காரணமாக இந்த வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்கள் வீதியைப் பயன்படுத்துவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே பிரதேச சபையினர் இந்த இரண்டு வீதிகளையும் புனரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே மக்களின் விருப்பமாக உள்ளது.

***பிற்குறிப்பு:-*** தற்போது முதலில் குறிப்பிட்ட வீதியின் பள்ளங்களை நிரப்பும் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதிலும் அதில் மக்கள் திருப்தி அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தி.சோதிநாதன்,** சுன்னாகம்

# போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்

குடாநாட்டில் உள்ள மூன்று முக்கிய ஆலயங்களின் மஹோற்சவங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதனால் ஆலயங்களுக்குச் செல்லுகின்ற பக்தர்களின் எண்ணிக் கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆனால் ஆலயங்களுக்குச் செல்லுகின்ற பக்தர்கள் கடுமையான போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் நான் யாழ்.நகருக்குச் செல்வதற்கென பஸ்ஸை எதிர்பார்த்து மல்லாகத்தில் நின்றேன் – அப்போது காலைவேளையாக இருந்ததால் அலுவலர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு வழக்கமாகச் செல்பவர்களுடன் வேறு தேவைகளுக்கு செல்பவர்களும் அங்கு காணப்பட்டனர். இவர்களைவிட நல்லூர் மற்றும் சந்நிதி கோவில்களுக்குச் செல்வதற்காகவும் பலர் அங்கு பஸ்ஸுக்காகக்காத்திருந்தனர். சிறு குழந்தைகளும் இவர்களில் அடங்கியிருந்தனர். ஆனால் அங்கு வந்த பஸ்களில் சனக் கூட்டம் நிரம்பி வழிந்ததால் அவற்றினுள் ஏற முடியவில்லை. நான் ஒருவாறு ஏறியபோதிலும் படிக்கட்டில் நின்றுதான் பயணிக்க வேண்டியேற்பட்டது.

சுன்னாகத்துக்கும் – மல்லாகத்துக்கும் இடைப் பட்ட பஸ் தரிப்பு நிலையங்களிலும் பலர் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர். ஆனால் அவர்களை அந்த பஸ் ஏற்றிச் செல்லவில்லை. சுன்னாகத்தில் ஒரு சிலர் கீழே இறங்கப் பலர் உள்ளே ஏறிய தால் கடுமையான நெரிசல் ஏற்பட்டது. மூச்சுவிடக் கூட முடியவில்லை. சிறு குழந்தைகள் அழுவதையும் காணமுடிந்தது.

சுன்னாகத்துக்கும் – யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் அங்கு பஸ்ஸுக்காகக் காத்திருந்தவர்களை ஏற்றாத நிலையில் பஸ் சென்று கொண்டிருந்தது. சிறிய மினிபஸ்ஸில் எத்தனை பேரைத்தான் ஏற்ற முடியும்? நெரிசலாக இருந்தாலும் மினிபஸ்கள் சேவையில் ஈடுபடாதுவிட்டால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைதான் ஏற்படும். விசேட தினங்களிலாவது அரச பஸ்களைப் போதிய அளவு சேவையில் ஈடுபடுத்துவதன் மூலமாக மக்களின் சிரமங்களைக் குறைத் துக் கொள்ள முடியும். சாதாரண நாள்களில் குறைந் தளவு பயணிகளுடன் அரச பஸ்கள் சேவையில் ஈடு படுவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் போதிய வருமானமும் கிடைப்பதில்லை.

## வாசகர் திருமுகம்



ஆனால் விசேட தினங்களில் அதிகளவு மக்கள் பயணிப்பதால் வருமானத்துக்குக் குறைவிருக்காது.

ஆகவே அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு ஆலய உற்சவங்கள் இடம்பெறுகின்ற தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்து வசதிகளை அதிகரித்து மக்களின் சிரமங்களைப் போக்குதல் வேண்டும்.

**த.மயூரன்,** மல்லாகம்.

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# தமிழ்க் கூட்டமைப்பின் பக்கம் பெரும் பொறுப்பு

**நா**டாளுமன்றத் தேர்தல் இம்முறை பெரிய குழப்பங்கள் இன்றி நிறைவடைந்திருக்கிறது. ஆனால் கடந்த காலங்களில் இருந்ததைவிட இம்முறை வேட்பாளர்களுக்கான போட்டித் தன்மை அதிகரித்திருந்தது. குறிப்பாகக் கட்சிகளுக்கிடையிலான போட்டி பெருமளவில் தோற்றம் பெற்றிருந்தது. அதற்குக் கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்ததும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், ஒரு காரணம். கடந்த காலங்களில் நாட்டின் சூழ்நிலையும் வேறுபட்டதாக அரசில் வெறுப்பைக் கொண்டவர்களாக மக்கள் விளங்கினர். இப்போதும் அது இருக்கின்றபோதும் முன்னர் இருந்ததை விடச் சற்றுக் குறைந்துள்ளது என்று கூறுவது பொருத்தமானதாக இருக்கும். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் தமது சொந்தக் கட்சியாகவே கருதிக் கொண்டிருக்கின்றனர். அதனைப் பிரிப்பதற்காகவே தென்னிலங்கைக் கட்சிகளும் தென்னிலங்கைக் கட்சிகளைப் பிரிதிநிதித்துவப்படுத்துபவர்களுடன் இணைந்திருக்கும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் போட்டியிட்டு வந்தனர். மக்கள் தெளிவாக இருந்தாலும் கூட்டமைப்பை உடைப்பதற்காகவே பாடுபடும் சில கூட்டங்கள் இருக்கவே செய்கின்றன.

தாம் வெல்லப்போவதில்லை என்பது அவர்களுக்கே தெரிந்திருந்தும் போட்டியிடுவதைக் கைவிடவில்லை. ஏனெனில் அத்தகையவர்களுக்குப் போட்டியிட்டு வாக்குகளை உடைப்பதற்கென்றே பணம் வழங்கப்பட்டிருந்ததை மறுக்க முடியாது. அந்தப் பணத்துக்காகவேனும் அவர்கள் போட்டியிடுவார்கள். அவ்வாறு பணம் கிடைக்கும் வரைக்கும் அவர்கள் பின்வாங்க மாட்டார்கள்.

அவர்கள் இம்முறையும் போட்டியிட்டுத் தமது உறவுகள், நண்பர்களது வாக்குகளைத் தமக்கு எடுத்துக் கூட்டமைப்புக்கு கிடைக்கும் வாக்கு வங்கியை உடைப்பதை நோக்காகக் கொண்டு செயற்பட்டனர் என்பது தெளிவானது. அவர்களிடமிருந்து வாக்கு வங்கியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கூட்டமைப்பு போன்ற பெரிய கட்சிகளுக்கு உள்ளது. கூட்டமைப்பு அதனை எதிர்காலத் தில் திறம்பட முன்னெடுக்க வேண்டியுள்ளது. அது கட்டாய தேவை என்று தான் கூட்டமைப்பைப் பொறுத்தளவில் கூறமுடியும்.

இம்முறை வாக்கு வங்கியை உடைக்கப் பல கட்சிகள் முனைந்தபோதும் முன்னணியின் கட்சியினரும் அதற்காகப் பெரும் பாடுபட்டனர் என்று கூறலாம். அதனால் அவர்களுக்கு ஒரு தொகை வாக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முகப் புத்தகங்கள் அதனை உறுதிப்படுத்துவதைப் போன்று செயற்பட்டன. ஆனாலும் அது எடுபட மாட்டாது என்று அவதானிகள் கூறியிருந்தது மட்டுமன்றி, நம்பக்கூடியதாக அது இருக்கவுமில்லை. ஆனால் அதுவே உண்மையாகி மிகக் குறைந்த வாக்குகளைப் பெறுமளவுக்கு முடிவுகள் அமைந்திருந்தமை அனைவருக்கும் தெரியும். முடிவு வரும் வரைக்கும் கூட்டமைப்பை நிலைகுலையச் செய்யும் அளவுக்கு நிலைமை இருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மக்கள் தெளிவாக இருந்து வழமை போன்றே இம்முறையும் கூட்டமைப்புக்குத் தமது பேராதரவை வழங்கி வெற்றி பெறச் செய்தனர்.

ஏனைய கட்சிகள் தாம் முன்னர் பெற்று வந்த வெற்றியைக்கூட இம்முறை பெறமுடியவில்லை. நம்பியிருந்து ஏமாந்து போனார்கள் அவர்கள்.

எனவே தற்போது எழும் புதிய விடயங்களில் பல கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளன. அதில் மக்களுக்கான கூட்டமைப்பின் பங்களிப்பு இனிமேல் எந்தளவுக்கு இருக்க வேண்டும். அதனை அவர்கள் செவ்வனே செய்ய வேண்டும் என்பது முக்கிய விடயமாகிறது.

முன்னைய கால நிலைமை மாற்றம் கண்டுவிட்டது. நல்லாட்சி என்று கூறும் அளவுக்கு நிலைமை உள்ளதனால் மக்களும் அதன்பால் ஈர்க்கப்பட்டு வருகின்றமையை மறுக்க முடியாது. எனவே தெரிவாகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை செய்தவை போக இனிமேல் என்ன செய்ய வேண்டும்? என்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். மக்களும் சிந்தித்துச் செயற்படுகின்றனர். வெற்றிக்கு மக்கள் உறுதியாகவிருந்ததுபோல அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு - அவற்றுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு உள்ளது. அதிலிருந்து அவர்கள் எக்காரணம் கொண்டும் பின்வாங்கக் கூடாது. பின்வாங்க முடியாது.

அவர்களுக்கான சில உதவிகள் தென் பகுதியினரைச் சார்ந்திருக்கின்ற கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களிலும் தங்கி உள்ளது. அது ஏற்கனவே தொடர்கிறது. ஆனால் என்னதான் அவற்றைப் பெற்றாலும் அவற்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை. அதனைப் பெற்றுக் கொள்வது மக்களுக்கான உரிமை. அதனை எவரும் தட்டிக் கேட்க முடியாது. தேசியம் கொள்கையில் உறுதியாக நிற்பவர்கள்கூட அதனைத் தெரிந்திருப்பர். அதனால் தான் என்னதான் உதவிகளைப் பெற்றாலும் மக்கள் தமது தேசிய உணர்விலிருந்து தவறிச்செல்லாது இருக்கின்றனர். அதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கூட்டமைப்புக்கு உண்டு. எனவே இதனை உணர்ந்து கொண்டு அடுத்த நடவடிக்கைகளை, செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முதன்முறையாக தேசிய அரசு; நன்மைகளை எதிர்பார்ப்போம்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் ஊடாக, இந்நாட்டு அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாவது சக்தியாக உயர்ந்து இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஒரு போதும் உருவாக முடியாதிருந்த இந்த நிலை, நாட்டில் இன நல்லிணக்கம் முகிழ்ப்பதற்கு கால்கோளாக அமையும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பவர் யார், அவர் கூறுவது சாத்தியமானதா என்று எங்களில்-தமிழ் மக்களில்-பலர் மூக்கில் விரலை வைப்பர்.

பௌத்த மத குருவான வண.சோபித தேரரே இந்தக் கருத்தை முன்வைத்தவர் என்ற தகவல் தெரிந்தாலும், அவரது கருத்தை உள்வாங்குவதற்கு எங்களில் மிகப்பெரும் எண்ணிக்கையினர் பின்னடிப்பர்.

அதற்கான காரணம் உண்டு. இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று மக்களைப் பிரிந்துப் பிளந்து விட்டதில், பௌத்த குருமாருக்கு மிகப்பெரும் பங்கு உண்டு என்பது, மறந்துவிட முடியாத, மறுக்க முடியாத வரலாறு எனின் தப்பன்று.

அந்த வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால், படித்தால் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோக மொழி என்ற சட்டத்தை கொண்டு வருவதற்கு, ஆதரவு மட்டுமன்றி தூண்டுகோலாக இருந்தவர்களும் பௌத்த துறவிகளே என்பது புலப்படும். ஆனால் அவர்களில் கணிசமான எண்ணிக்கையினர், நாட்டின் பிரசைகள் எல்லோரும் தமக்குரிய உரிமைகளுடன் வாழ்வதற்கு அரசுகள் வழி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்.

அத்தகையவர்களில் ஒருவரே, வண.சோபித தேரர் எனக்கொள்ளலாம். தேர்தல் முடிவுகள் குறித்துக் கருத்து வெளியிடுகையில், தமிழ் மக்களைச் சிறுபான்மையினர் என்று கருதாமல் இந்த நாட்டின் பிரசைகள் என்று மதிப்பளிக்க வேண்டும் என அவர் எடுத்துக் கூறியுள்ளாரர்.

அத்தோடு நிற்காமல், நாட்டில் நல்லாட்சி உயர வேண்டும் என்பது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஆழமான கருத்துக்கள் நாட்டின் மீது அவர் வைத்திருக்கும் பற்றுக்குச் சாட்சியம் பகர்கின்றன.

அவர் தெரிவித்துள்ள கருத்துக்களை இந்தப் பத்தியில் பதிவது பொருத்தமே.

நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றுக்கு உள்ள அதிகாரங்களும் கைகோர்த்துச் செயற்பட வேண்டும்.

அதன்பால் ஜனாதிபதியும் பிரதமரும் அனைத்துச் செயற்பாடுகளையும், ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் முன்னெடுத்துச் செயற்படுத்துதல் பிரதானம்.

ஜனாதிபதியும் நாடாளுமன்றத்தினரும் ஒருங்கிணைந்து பயணிப்பதற்கே மக்கள் ஆணை வழங்கி உள்ளனர்.--

ஆகையால் அனைத்து அலுவல்களையும் இருதரப்புக்களும் ஒன்றிணைந்து ஆற்ற வேண்டும்.

அதனை நாடி, இணக்கப்பாடு நிறைந்த ஆட்சி அமைத்து, நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதும் மிக அவசியம்.

ஊடகங்கள் பாரபட்சமின்றிச் செயற்படுவதற்கு அனுமதித்ததால் அவற்றுக்குரிய சுதந் திரம் கிடைத்ததும் குறிப்பிடக்கூடியதாகும். இதே நிலை தொடரவேண்டும்.


வண.சோபித தேரர் வெளிப்படுத்தி உள்ள கருத்துக்கள்-- அவற்றின் செயல் வடிவங்கள் இப்போதைய தவிர்க்க முடியாத தேவைகள்.


மொத்தத்தில், இன்றையகால கட்டத்தில் தேசிய அரசாங்கமே நாட்டுக்குத் தேவை. தேரரின் அந்தக் கருத்தை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு, அதனை அமைப்பதிலும் செயற்படுத்துவதிலும் புதிய நாடாளுமன்றம் விரைந்து ஈடுபட வேண்டும்.

அச்சொட்டான தேசிய அரசு ஒன்று இதுவரை இந்த நாட்டில் செயற்பட்டதில்லை. வண.சோபித தேரரின் அறிவுரை காலத்துக்குத் தேவையானது. அதனைச் செயற்படுத்த மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசு காலம் தாழ்த்தாமல் செயலில் ஈடுபட வேண்டும்.

தேசிய அரசாங்கம் ஒன்றின் அவசியத் தேவையைக் கருத்தில் கொண்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் அதனை அமைக்கவுள்ளன என்ற தகவல் ஊர்ஜிதமாகி உள்ளது. அதற்கான உத்தியோகபூர்வ ஏற்பாடுகள் தயாராகி வருகின்றன. இது வரவேற்கத்தக்கதே.

# புதிய அரசியல் கலாசாரம் நாட்டில் உருவாக வேண்டும்





வந்தியத்தேவர்

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முழுமையான ஓய்வில் இருந்திருக்க வேண்டிய மஹிந்த ராஜபக்ஷவின் ஆசை நிராசையாகிவிட்டது. நொறுங்கிப் போன பிரதமர் கனவுடன் தோல்வியை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தற்போது அறிவித்துள்ளார் அவர். தமது போராட்டத்தில் தாம் தோல்வியடைந்துள்ளதாக விரக்தியுடன் அவர் தெரிவித்திருந்தாலும், அரசின் நல்ல கொள்கைகளை ஆதரிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார். சிறுபான்மை இனங்களை முழுமையாக அடக்கி ஒடுக்கி நசுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்ட அவருக்கு, வடக்கு மற்றும் தென்னிலங்கையில் வசிக்கின்ற தமிழ், சிங்கள மக்கள் இணைந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். அவரது தெற்கில் இனவாதக் கோட்பாட்டுக்கு ஆதரவு இருக்கத்தான் செய்கிறது என்பதைத் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின் றன. இதற்கு நாமல் ராஜபக்ஷ மிகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளமை ஒரு சான்றாகும். எது எப்படி இருந்த போதும் மஹிந்த மக்களால் நிராகரிக்கப்படுகின்றார் என்பது நடைபெற்ற தேர்தலின் மூலம் தெளிவாகியுள்ளது.

இந்த நிலையில் தேசிய ஒருமைப் பாட்டு அரசுக்கு ஜனாதிபதி மைத் [illegible] ஐ.தே.கவும் சுரி. ஐ.ம.சு.முன்னணியும் சரி அறுதிப் பெரும்பான்மையற்ற நிலையில் உள்ளன. ஐ.தே.க. 106 ஆசனங்களையும் ஐ.ம.சு.முன்னணி 95 ஆசனங்களையும் பெற்றிருப்பதனால் தனித்து ஆட்சியமைக்கக் கூடிய வாய்ப்புக்களை இழந்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.கட்சிக்கு ஆதரவு வழங்கும் என ஏற்கனவே சம்பந்தன் தெரிவித்திருந்தார். தமிழ்தேசியத்தில் நம்பிக்கை கொண்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றக் கூடியதாக தாங்கள் தமது பணியை முன்னெடுப்போம் என மாவை சேனாதிராசா கூறியுள்ளார். மக்களது எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம் என சம்பந்தன் மீண்டும் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கையாக சமஷ்டியுடன் இணைந்த சுயாட்சியை வெளிப்படுத்தியிருந்தது. மக்கள் இந்தக் கோட்பாட்டுக்கே தமது ஆதரவை வழங்கியிருந்தார்கள் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒவ்வொரு உறுப்பினரும் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டியுள்ளது. ஐ.தே.கட்சி ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு எனவும் கிராம மட்டத்திலான அதிகாரப் பரவலாக்கம் எனவும், குறிப்பிட்டிருக்கிறது. இந்திய மாநிலங்களுக்கு இடையில் சமஷ்டி ஆட்சி என்று சொல்லப்பட்டாலும் மாநில அரசுகளுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரமும் உள்ளதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி மூலம் தனி நாட்டுக்கு அத்திபாரமிடுகின்றது என்று பரப்புரைகளை முடுக்கிவிட்டு தமிழர் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்க தென்பகுதி அரசியல் தலைவர்கள் முனையவும் கூடும். நல்லாட்சி என்று கூறும் புதிய அரசும் வெறும் கடிதம் எழுதும் நிலைக்குள் மட்டும்தான் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ற நிலைக்குள் நிற்கும். ஆனால் தீர்வுக்குக் கிடைத்த இறுதிச் சந்தர்ப்பம் இதுவாக இருக்க முடியாது. அது நீண்டு கொண்டே இருக்கும் என்பதுதான் யதார்த்தம்.

நல்லாட்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தென்பகுதி அரசியல் தலைமைகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இப்போது இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் தமது ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியதன் மூலம் நல்லாட்சி தொடர வேண்டும் என்ற தமது விருப்பத்தையும் தெரியப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இனப்பாகுபாடற்ற அனைத்து மக்களும் உரிமையுடன் கூடிய மக்களாக தனது ஆட்சிக்காலம் அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீண்டகாலத்தின் பின்னர் இப்போது மக்களது ஆதரவைப் பெற்றுள்ளார். நாட்டில் உள்ள பெரும்பான்மையான சிங்கள மக்களும் தமிழ், முஸ்லிம் மக்களும் உரிமை பெற்றவர்களாக ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்ற தமது விருப்பத்தை தேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். பிரதமர் ரணிலும் அவரது அரசும் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்று அவற்றுக்கு மதிப்பளித்து ஒரு சுமுகமான தீர்வை எட்டுவதன் மூலம் புதிய அரசியல் கலாசாரத்துள் நாட்டை நகர்த்திச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்தை தொடர்வதற்கான வாக்கு





பேராசிரியர்
ஜயதேவ உயங்கொட
தமிழில்: ரஜீபன்

இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இரு முக்கியமான அரசியல் விளைவுகள் உண்டாகியுள்ளன. முதலாவது ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜனநாயக மாற்றங்களை முழுமையாக முன்னெடுப்பதற்கு பெரும்பான்மையான வாக்காளர்கள் ஆணை வழங்கியுள்ளனர். இரண்டாவதாக மிகவும் முக்கியமாக மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவது குறித்த முன்னாள் ஜனாதிபதியின் விருப்பத்தை இந்தத் தேர்தல் முடிவுகள் முறியடித்துள்ளன.

நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் 2016 ஏப்பிரல் வரை காணப்பட்ட போதிலும் அது சில வேடிக்கையான சூழ்நிலைகளின் கீழ் கலைக்கப்பட்டது.ஜனாதிபதி சிறிசேனவும் அவருக்கு ஆதரவு வழங்கிய கூட்டணியும் தங்கள் ஆட்சிக்காலத்தின் 100 நாட்கள் முடிவடைந்தவுடன் புதிய தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகும் என வாக்குறுதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறு பார்த்தாலும் அப்போதைய அரசு சிறுபான்மை அரசாகவே காணப்பட்டது. புதிய தேர்தல் மூலமாக நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெறவேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது.

எனினும் நடைபெற்று முடிந்த தேர்தல் மூலம் ஐக்கிய தேசிய கட்சிக்கு முழுமையான பெரும்பான்மை கிடைக்காதது குறிப்பிடத்தக்கது.இவ்வாறான நிலை ஏற்படலாம் என பல ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருந்தனர். தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நாட்டில் ஒரு கட்சிக்கு ஆதரவான பெரிய அலை அடித்தால் மாத்திரமே அந்தக் கட்சியால் அதிக பெரும்பான்மையைப் பெற முடியும்.

2010 இல் மகிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இதற்கு சற்று நெருங்கிவந்தது, (இரண்டு ஆசனங்கள் குறைவான நிலையில்) ராஜபக்ஷ விடுதலைப் புலிகளை தோற்கடித்த வழமைக்கு மாறான சூழ்நிலையின் கீழ் அது இடம்பெற்றது.

**அரசியல் ஸ்திரத்தன்மை**

போருக்குப் பிந்திய இலங்கையில் பெரிய அலைகளை உருவாக்கும் திறனற்றவையாக அரசியல் கொள்கைகள் மாறியுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி அதிகளவு ஆசனங்களைப் பெற்றுள்ள போதிலும், பெரும்பான்மையைப் பெறவில்லை, அதற்கு அடுத்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு காணப்படுகின்றது, வடக்கு கிழக்கில் இலங்கைத் தமிழரசுக்கட்சி அதிகளவு ஆசனங்களை பெற்றுள்ளது. எனினும் அந்தக் கட்சி எந்தக் கூட்டணியிலும் இணையாது , வெளியிலிருந்து ஆதரவை வழங்கும்.

ஐந்து ஆசனங்களைப் பெற்றுள்ள ஜே.வி.பியும் நடுநிலைமை வகிக்கலாம்.

இதன் காரணமாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னுடன் இணையுமாறு அழைப்பு விடுக்க வேண்டிய தேவையுள்ளது. பிரதமரும் ஜனாதிபதியும் பல மாதங்களாக முன்வைத்து வரும் தேசிய அரசு என்ற எண்ணக்கரு இவ்வாறு கட்சி மாறுவதை நியாயப்படுத்த உதவியாக அமையும்.

ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் ஏன் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை என்ற கேள்வியே இலங்கை அரசியலின் தற்போதைய போக்கைப் புரிந்துகொள் வதற்கு உதவியாக அமையும். ராஜபக்ஷ ஒரு வருட காலப்பகுதியில் இரு தேர்தல் தோல்விகளை சந்தித்தமைக்கு இரு காரணிகள் காரணமாக அமைந்துள்ளன.


முதலாவது, ஜனாதிபதி தேர்தல் தோல்வியிலிருந்து அவர் பாடம் கற்கத் தவறியது. மற்றையது–அவரது தனிப்பட்ட கவர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி.

**சிறுபான்மையினர் தனிமைப்படுத்தப்படல்**

ராஜபக்ஷவுக்கும்– சிறுபான்மைச் சமூகத்தினருக்கும் இடையிலான நம்பிக்கையில் காணப்படும் இடை வெளியை நிரப்பவேண்டும் என்ற முக்கியமான பாடத்தை ஜனவரி தேர்தல் தோல்விக்கு பின்னர் அவரது முகாம் கற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

ஜனவரியில் சிறிசேனவிடம் தோற்றபோதிலும், அவர் பெரும்பான்மைச் சிங்களவர்களின் அதிகவாக்குகளைப் பெற்றார், அதேவேளை சிறுபான்மையினத்தவர்கள் காணப்பட்ட தொகுதிகளில் அவருக்கு எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

சிறுபான்மையினத்தவர்களின் கரிசனைகளை கவனத்தில் எடுக்க வேண்டும் என்ற முக்கிய விடயத்தை ராஜபக்ஷவின் முகாமைத் சேர்ந்தவர்கள் உணரவில்லை.தேசிய பாதுகாப்பு மற்றும் தேசப்பற்று என்ற விடயங்களை அடிப்படையாக வைத்து சிங்கள வாக்காளர்களை கவருவதே அவர்களது முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது. சிங்கள வாக்காளர்களின் வாக்குகளை மாத்திரம்வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக வரமுடியும். அதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியைப் பிளவுபடுத்தலாம் என அவர்கள் திட்டமிட்டிருந்திருக்கலாம்.



ராஜபக்ஷ கடந்த காலங்களில் இதனை வெற்றிகரமாக செய்திருந்தார், தேர்தல் பரப்புரைகளின் இறுதிக் காலப் பகுதியில் அவர் சிங்கள வாக்காளர்களைக் கவரும் முயற்சியைத் தீவிரப்படுத்தியிருந்தார்.

சிறுபான்மையினத்தவர்கள் காணப்பட்ட தேர்தல் தொகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனவரி தேர் தலை விட மிகவும் மோச மாக பாதிக்கப்பட்டுள்ளதை தேர்தல் முடிவுகள் வெளிப் படுத்தியுள்ளன.

> மக்களை கவரும் ராஜபக்ஷவின் ஆற்றலில் ஏற்பட்ட வீழ்ச்சியும் குறிப்பிடத்தக்க விடயம். இதனைக் கட்சி கருத்தில் எடுக்கவில்லை, அவர் சிங்கள வாக்காளர்கள் மத்தியி லேயே அதிகளவு பிரபலமானவராக காணப்பட்டார் எனினும் ஜனவரியில் தோல்வியடைந்தார்.

மக்களைக் கவரும் ராஜபக்ஷவின் ஆற்றலில் ஏற்பட்ட வீழ்ச்சியும் குறிப்பிடத்தக்க விடயம். இதனைக் கட்சி கருத்தில் எடுக்கவில்லை, அவர் சிங்கள வாக்காளர்கள் மத்தியிலேயே அதிகளவு பிரபலமானவராகக் காணப்பட்டாரெனினும் ஜனவரியில் தோல்வியடைந்தார். பின்னர் அவரது ஆட்சி குறித்து சிறிசேன – விக்கிரமசிங்க அரசு மேற்கொண்ட விசாரணைகளும் ராஜபக்ஷவின் மக்கள் செல்வாக்கைப் பாதித்தன.

ராஜபக்ஷ முன்னர் போன்று மக்களைக் கவரும் ஆற்றல் மிக்க தலைவராகத் தற்போது இல்லை, அவ்வரை முன்னிறுத்தி வெற்றிபெற முடியாது என்பதே இந்த தேர்தலின் மூலம் புலனாகியுள் ளது.ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பரப்புரைகள் கட்சிக்கான புதிய அலை எதனையும் உருவாக்கவில்லை என்பது முக்கியமான விடயம்.

**ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் பிளவுகள்**

மேலும் சிறிசேனவுக்கும், மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் காணப்பட்ட அதிகாரப் போட்டியும் தேர்தல் முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம், தன்னைப் பிரதமர் வேட்பாளராக நியமிக்கவேண்டும் என மகிந்த ராஜபக்ஷ கடும் அழுத்தங்களைக் கொடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் பிடியின் கீழ் காணப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சிறிசேனவின் ஜனநாயக சீர்திருத்தங்களைக் குழப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட வேளையே சிறிசேனவுக்கும், ராஜபக்ஷவுக்கும் இடையிலான தனிப்பட்ட மற்றும் அரசியல் உறவுகள் பாதிக்கப்பட்டன, நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் தீவிர தருணங்களில் சிறிசேன, மஹிந்தவைப் பிரதமராக்கப் போவதில்லை என வெளிப்படையாகவே தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச்செயலாளர்களை சிறிசேன நீக்கினார். இவர்கள் இருவரும் ராஜபக்ஷவின் விசுவாசிகள்.

இருவருக்கும் இடையிலான இந்த மோதல் ராஜபக்ஷ முகாமுக்குள் எதிர்பாராத விளைவுகளை உருவாக்கியது. அவரது நெருக்கமான ஆதரவாளர்களை அது பலப்படுத்தியிருக்கலாம். எனினும் கட்சியின் நீண்ட கால ஆதரவாளர்களைச் சோர்வடையச் செய்தது. பலர் வாக்களிக்கவே செல்லவில்லை.

வலுவான எதிர்க் கட்சி என்பது நல்லாட்சிக்கு சிறந்த விடயமே, எனினும் புதிய அரசமைப்புச் சீர்திருத்தங்களை நிறைவேற்ற விரும்பினால் சிறிசேன– ரணிலுக்கு எதிர்க்கட்சியின் ஆதரவு அவசியம். கடந்த சில மாதங்களாக இரு தரப்பும் பின்பற்றி வரும் மோதல் மனப்பான்மை காரணமாக சீர்திருத்த நடவடிக்கைகள் மீண்டும் பாதிக்கப்படலாம்.

அடுத்த சில வாரங்களில் ஜெனீவாவில் வெளியாகப் போகின்ற அறிக்கையை எவ்வாறு கையாள்வது என்பதே இலங்கையின் புதிய அரசு எதிர்கொள்ளப் போகின்ற முதல் சவாலாகக் காணப்படுகின்றது. இலங்கை அரசும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையும் விட்டுக் கொடுக்கும் நிகழ்ச்சி நிரலில் இணங்கிப்போகலாம்,எனினும் இதனால் தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் சீற்றம் ஏற்படலாம்.

வடக்கு கிழக்குக்கான வலுவான அதிகாரப் பகிர்வு மற்றும் அதனை நோக்கிய அரசமைப்பு மாற்றங்கள் குறித்தும் விரைவில் சிந்திக்க வேண்டியிருக்கும்.

தேர்தல் பரப்புரையின் போது ஐக்கிய தேசிய கட்சி இது குறித்துப் பேசுவதைத் தவிர்த்தது. சமஷ்டிக் கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வு குறித்து எதனையும் குறிப்பிடுவதைக் கவனமாகத் தவிர்த்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சிறந்த வெற்றிகளைப் பெற்றுள்ள போதிலும் வடக்கு அரசியல் மீண்டும் தீவிரவாத மயப்படுத்தப்படும் அறிகுறிகள் தென்படுவதால். அரசு, அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நல்லிணக்கம் போன்ற விடயங்களில் அக்கறையை வெளிப்படுத்தாத பட்சத்தில் தமிழரசுக்கட்சி அரசுக்கு வெளிப்படையாக ஆதரவை அளிப்பது கடினமான விடயமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கிறார்

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



ஏழைகளும் வறியவர்களும் படும் துன்பத்தையும் துயரத்தையும் கண்டு எவரது உள்ளம் கசிந்து உருகுகிறதோ, எவருக்கு, அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடனடியாக ஏற்படுகிறதோ அவர்களே உண்மையான தேச பக்தர்கள். தேச சேவை செய்வதற்குத் தகுதியானவர்கள். அவர்களே மகாத்மாக்கள்.
கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கிறார். இதை விடத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. மக்களுக்கு ஒருவன் செய்யும் சேவை அந்த மகேசனுக்கே செய்யும் சேவையாகும். இதுவே உண்மை. எவர் ஒருவர் எதைப் பெறுவதற்கு தகுதியாக இருக்கிறாரோ அதை அடையவிடாமல் தடுப்பதற்கு, பிரபஞ்சத்தில் உள்ள எந்தச் சக்தியாலும் முடியாது.

# வெண்ணெய் சாப்பிடுவது நல்லதா?

உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் உணவுப் பொருள்களில் வெண்ணெய்யும் ஒன்று. பாலில் அடங்கி உள்ள அநேக ஊட்டச்சத்துகள் வெண்ணெயிலும் காணப்படுகின்றன.
வெண்ணெயில் விற்றமின்–ஏ சத்துக்கள் அதிகமான அளவில் காணப்படுகின்றன. இது தைரொய்டு மற்றும் சிறுநீரக நோய்களுக்கு சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தி அளிப்பதாகும்.
லாரிக், லிசிதீன் போன்ற அமிலங்கள் வெண்ணெயில் நிறைந்துள்ளன. இவை உடலில் கொழுப்புகளைச் சேரவிடாமல் விரைவில் செரிக்கச் செய்கின்றன.
மேலும் உடலை பூஞ்சை தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்கிறது.
உடலுக்கு சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்கும் பல்வேறு சத்துக்களும் வெண்ணெயில் நிறைந்து காணப்படுகின்றன. இவை உடலில் ஏற்படும் நோய்க் காரணிகளைப் போக்கி உடலைக் காக்கின்றன.
வெண்ணெயில் விற்றமின்–ஈ மற்றும் விற்றமின்–கே குறிப்பிட்ட அளவில் காணப்படுகின்றன. இவை பல்வேறு உடற்செயல்களில் பங்கெடுக்கின்றன, மேலும் நோய் எதிர்ப்பாற்றலை வழங்கக்கூடியவை.
எளிதில் செரிமானமாகும் கொழுப்புச் சத்துகள் வெண்ணெயில் நிரம்பியுள்ளன. இவை உடலுக்கு சக்தி அளிப்பதுடன் உடலைப் புற்றுநோய் மற்றும் திசுச் சிதைவுகள் ஏற்படாமல் காக்கவல்லவை. பற் களை வலுப்படுத்தும் விற்றமின்–டி மற்றும் கல்சியம் சத்துகள் வெண்ணெயில் நிறைந்துள்ளன.
குழந்தைகளின் உணவுப் பொருள்களுடன் வெண்ணெய் சேர்த்துக் கொள்வதால், அவர்களின் நரம்பு மண்டலங்கள் சீராக இயங்குகின்றன. அதிலுள்ள கொழுப்பு அமிலங்கள் மூளை தொடர்பான பல நோய்களைத் தடுக்கின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 80 | 60 | 60 | 30 |
| கத்தரி | 120 | 80 | 80 | 80 | 100–120 | 60 | 80 | 40 |
| கரட் | 160 | 160 | 100 | 100 | 100–180 | 160 | 140 | 150 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 40 |
| பயிற்றை | 140 | 40 | 60 | 100 | 60 | 40 | 140 | 50 |
| பாகல் | 120 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 50–60 |
| பூசணி | 40 | 30 | 50 | 30 | 30–35 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 120 | 100 | 80 | 80 | 120 | 100 | 70–80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 15 | 30 | 30 | 10 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 170 | 250 | 160 | 160 | 400 | 120 | 150 |
| புடோல் | 40 | 30 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 |
| கோவா | 90 | 100 | 80 | 80 | 60 | 80 | 100 | 60 |
| வெண்டி | 40 | 30 | 50 | 40 | 80 | 80 | 80 | 70 |
| போஞ்சி | 160 | – | 180 | 180 | 140 | 160 | 180 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 160 | 100 | 80–100 | 80 | 120 | 130 |
| தேங்காய் | 40 | 45 | 50 | 50–60 | 60 | 40–60 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 80–90 | 90 | 100 | 80 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 160 | 60 | 60 | 150 | 100–110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 08–10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 140 | 80 | 160 | 160 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | 100 | 160 | 160 | 140 | 120 | 180 | 90 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 60 | 40 | 100 | 90 | 120 | 65–70 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 650 | 800 | 600 | 650 | 550 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 500 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 500 | 500 | 600 | 500 | – | 400 |
| சுறா | 500 | 600 | 500 | 600 | – | 450 |
| சீலா | 250 | 500 | 400 | 350 | 300 | – |
| விளை | 550 | 400 | 450 | 400 | 400 | 350 |
| மூரல் | 250 | 400 | 300 | 300 | – | 350 |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 450 | 800 | 700 | 400 | – | – |
| ஒரா | 300 | 400 | 300 | 400 | – | 300 |
| திரளி | 200 | 300 | 200 | 250 | – | 250 |
| நகரை | 150 | 300 | 300 | 300 | – | – |
| சூடை | 100 | 200 | 130 | 120 | 150 | 80 |
| ஒட்டி | 200 | 150 | 300 | 300 | – | 250 |
| திருக்கை | 100 | 350 | 200 | 250 | 200 | 120 |
| பாலை | 300 | 300 | 400 | 400 | 300 | 300 |
| வாளை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 80 | 200 | 150 | 100 | 50 | – |
| மதனம் | 100 | 300 | 200 | 250 | 100 | 200 |

## நாளை

ஆவணி–06
ஞாயிற்றுக்கிழமை
23.08.2015

திதி: அட்டமி மு.ப.09.23 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.07.30 வரை
சுபநேரம்: 09.05–10.35 வரை
இராகுகாலம்: 04.35–06.05 வரை

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 7 | 1 | 5 | 8 | 2 | 6 | 9 |
| 5 | 6 | 1 | 2 | 9 | 3 | 7 | 8 | 4 |
| 9 | 2 | 8 | 4 | 7 | 6 | 5 | 3 | 1 |
| 6 | 9 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 8 |
| 4 | 1 | 2 | 8 | 3 | 9 | 6 | 7 | 5 |
| 8 | 7 | 5 | 6 | 1 | 2 | 4 | 9 | 3 |
| 7 | 3 | 9 | 5 | 6 | 4 | 8 | 1 | 2 |
| 2 | 5 | 6 | 9 | 8 | 1 | 3 | 4 | 7 |
| 1 | 8 | 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 AUG 2015


# ஆவணி மாத இராசி பலன்கள்



## சிங்கம்

முன்னின்று புகழ்பவனும், பின்னின்று தூண்டி விடுபவனும் ஒரே தன்மையானவர்கள் என்பதை அறிந்த நீங்கள், புகழ்ச்சிக்கு மயங்கிவிட மாட்டீர்கள். கடந்த ஒருமாத காலமாக 12 இல் மறைந்து கிடந்த உங்கள் இராசிநாதனான சூரியன் இப்பொழுது உங்கள் இராசிக்குள்ளேயே ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் எதிலும் வெற்றி, மனநிம்மதி கிடைக்கும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். தள்ளிப்போன அரச காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். தந்தை வழியில் இருந்து வந்த மனக்கசப்புக்கள் நீங்கும். முகம் மலரும். செவ்வாய் 12 இல் மறைந்திருப்பதால், வேலைச்சுமை அதிகரிக்கும். பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். சகோதர, சகோதரிகளால் அலைச்சல் இருக்கும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. 3 ஆம் வீட்டில் வக்கிரச் சனி நிற்பதால் தடைப்பட்ட காரியங் கள் முடியும். புதன் இராசிக்குள்ளேயே நிற்பதால் பழைய நண்பர், உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். இராசிக்குள்ளேயே குரு நிற்பதால் மனக்குழப்பம், தடுமாற்றம் வந்து நீங்கும். எவரை நம்புவது, நம்பாமல் போவது என்ற கலக்கம் வந்துசேரும். வீண் சந்தேகங்கள் வரும். பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரமை வரும். சில நேரங்களில் சின்னச் சின்ன கை வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம். கடுமையாக அடிவயிற்றில் வலி வர வாய்ப்பிருக்கிறது. பழம், காய்கறிகளைத் தினசரி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. கார, அசைவ உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. 2இல் ராகு நிற்பதால் இனந் தெரியாத கவலைகள், மனஇறுக்கம் என்பன வந்து செல்லும். அரசியல்வாதிகளுக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் உதவுவார்கள்.

கன்னிப் பெண்களின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் பிறக்கும். ஆசிரியர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். வேலையாள்கள், பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தேங்கிக்கிடந்த பொருள்களைத் தள்ளுபடி விலைக்கு விற்றுத் தீர்ப்பீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.



உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும். மூத்த அதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். சிலருக்கு தேவையற்ற, விரும்பத்தகாத இடமாற்றம் வரக்கூடும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பழகுங்கள். கலைத்துறையினர்களை உதாசீனப் படுத்திய நிறுவனமே உங்களை அழைத்துப் பேசும். விவசாயிகளுக்கு வற்றிப் போயிருந்த கிணற்றில் நீர் சுரக்கும். விளைச்சல் இரட்டிப்பாகும். புதிதாக ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பீர்கள். புதிய பாதையில் பயணிக்கும் மாதமிது. மாத ஆரம்பமே யோகமாக அமையும். இராசிநாதன் சூரியன் பலத்தால் தொட்டது துலங்கும். கொடுக்கல், வாங்கலில் தேக்க நிலை நீங்கும். தடைப்பட்ட கட்டட வேலை தொடங்கும். தந்தை உடல்நலத்தில் கவனம் தேவை. திடீர்ச் செலவுகள் வரலாம். சகோதர உறவுகளால் அலைச்சல், செலவுகள் வந்து நீங்கும். மனைவியின் சொல்லுக்கு செவி சாய்ப்பது நல்லது. உறவினர் நிகழ்ச்சிகளை முன்நின்று நடத்துவீர்கள். வசதியான வீட்டுக்கு குடிபோகும் யோகம் உள்ளது. வெளிநாடு போவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். மாதக் கடைசியில் வெளியூர் பயணங்கள் இருக்கும். உத்தியோகத்தில் சூழ்நிலை அறிந்து நடப்பது நலம் தரும். உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் பாதகமில்லை. இலாபம் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்குவீர்கள்.

**பரிகாரம்:** நம சிவாய எனத் தினமும் 108 முறை தியானிக்கலாம். புதன்கிழமை நரசிம்மர், குலதெய்வத்தை வழிபடுவது நலம். முதியோர் இல்லங்களுக்கு உதவலாம்.



## கன்னி

மென்மையையும், மேன்மையையும் விரும்பும் நீங்கள், தவறு செய்பவர்களைக் கண்டால் வன்மையாகக் கண்டிப்பீர்கள். உங்கள் இராசி நாதன் புதன் இந்த மாதம் முழுவதும் சாதகமாக இருப்பதால் சந்தோஷம் நிலைக்கும். சமயோசித புத்தியால் சாதித்துக் காட்டுவீர்கள். சவாலான தேர்வில் வெற்றி பெறுவீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தையும் கொடுத்து முடிப்பீர்கள். திருமணம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உங்கள் இராசிக்கு 2இல் வக்கிரசனி தொடர்வதால் பணப் பற்றாக்குறை, அலைச்சல், சின்னச்சின்ன காரியத் தடைகள், இழுபறியான சூழ்நிலைகள் இருக்கும். குரு 12 ஆம் வீட்டிலேயே தொடர்வதால் எவ்வளவு பணம் வந்தாலும் செலவுகள் துரத்தும். மனக் குழப்பங்களும், தடுமாற்றங்களும் வந்து செல்லும். திடீர் பயணங்களும் அதிகமாகும். செவ்வாய் இலாப வீட்டில் நிற்பதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். சிறுகச்சிறுக சேர்த்து ஒரு வீடு மனையாவது ஊரைத் தள்ளியிருக்கும் பகுதியில் வாங்கி விட வேண்டு மென்று நினைப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். சூரியன் இராசிக்கு 12 இல் அமர்ந்திருப்பதால் சுப செலவுகள் அதிகரிக்கும். வீட்டில் கூடுதலாக ஒரு தளம் அல்லது அறைகட்டுவீர்கள். நீண்ட நாள்களாகப் போக நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். அரசியல்வாதிகள் பரபரப்புடன் காணப்படுவீர்கள். கன்னிப் பெண்களுக்கு எதிர்பார்த்தபடி நல்ல இடத்தில் வரன் அமையும். ஆடை அணிகலன்கள் சேரும்.

மாணவர்களுக்கு உயர்கல்வியில் வெற்றியுண்டு. நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். வியாபார இரகசியங்கள் எவர் மூலம் கசிகிறது என்பதை அறிந்து வேலையாள்களை மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களைக் கனிவாக நடத்துங்கள். பங்குதாரர்களால் அவ்வப்போது குடைச்சல் இருந்தாலும் பிரச்சினைகள் பெரிதாக இருக்காது. உத்தியோகத்தில் இடமாற்றம், வேலைச்சுமை இருக்கும். மேலதிகாரி ஒத்துழைப்புத் தந்தாலும் சக ஊழியர்களால் சிறுசிறு பிரச்சினைகள் வந்துசெல்லும். கலைத்துறையினர் மூத்த கலைஞர்களிடம் சில நுணுக்கங்களைக் கற்றுத் தெளிவீர்கள். விவசாயிகளுக்கு வங்கிக் கடனுதவி கிடைக்கும். தரிசு நிலங்களையும் இயற்கை உரத்தால் பக்குவப்படுத்தி விளையச் செய்வீர்கள். நீண்டகால கனவுகள் நிறைவேறும் மாதமிது. அஷ்டமஸ்தான கிரக அமைப்பு, நிழல் கிரகங்களால் அலைச்சல், கோபம், சிடையூறு ஏற்பட்டு நீங்கும். குடும்ப விடயங்களில் சற்று நிதானமாகப் போவது நல்லது. சொத்து வழக்குகள் சம்பந்தமான சமாதான முயற்சி பலன் தரும். கர்ப்பிணிகள் கவனமாக இருப்பது நல்லது. வேலை சம்பந்தமாக பரீட்சை எழுதியவர்களுக்கு நல்ல தகவல் உண்டு. மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள் குணமடைவார்கள். நெருங்கிய உறவுகளால் திடீர்ச் செலவு இருக்கும். வெளிமாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் செல்வீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். பெண்களுக்கு பிறந்த வீட்டாருடன் இருந்த மனக்கசப்பு நீங்கும். அலுவலகத்தில் சாதகமான திருப்பம் உண்டு. குடும்பத்தைப் பிரிந்து வெளியூரில் தங்க வேண்டி வரலாம். வியாபாரம் சூடு பிடிக்கும். வேலையாள்கள் சாதகமாக இருப்பார்கள்.

**பரிகாரம்:** தினமும் 108 முறை ஸ்ரீராம ஜெயம் எழுதலாம். சிவாலயங்களில் அன்னதானம் தரலாம். ஏழைப் பெண்களின் திருமணத்துக்கு உதவலாம்.

# எதற்குத் திருமணம்?

திருமணம் என்பது இரண்டு உள்ளங்களுக்கு இடையே ஏற்படும் சமயப்பற்றான உறவாகும். அது பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டதாக இருக்கலாம் அல்லது காதல் திருமணமாக இருக்கலாம். தங்களை நேசிப்பதற்கும், காதலிப்பதற்கும், கவனிப்பதற்கும், வாழ்க்கை முழுவதும் உடனிருப்பதற்கும் ஒருவர் வேண்டும் என்பதால் தான் ஆண்களும் பெண்களும் திருமணம் செய்துகொள்கின்றனர். பணத்துக்காகத் திருமணமா அல்லது காதலுக்காகத் திருமணமா என்ற கேள்வி எப்போதும் உலா வந்து கொண்டே இருக்கிறது. காதல் என்பது வாழ்க்கையில் மிகவும் முக்கியம் தான். ஆனால் அதற்காகப் பணத்தை ஒதுக்கிட முடியுமா? அதிகரித்துக் கொண்டே இருக்கும் இன்றைய பொருளாதாரத்தோடு போராடா ஒருவர் நடை முறைக்கு ஒத்துவரும் படியும் யோசிக்க வேண்டும் அல்லவா? நமது வாழ்க்கையை நடத்திட வெறும் காதல் மட்டும் போதாது அல்லவா? நம்மிடம் பணம் இல்லாமல் நம்மைச் சுற்றிலும் ஒரே பிரச்சினைகள் நிலவும் போது காதல் வந்து உதவி புரிந்திட முடியுமா என்ன? காதலுக்காகத் திருமணம் செய்வதைவிட பணத்துக்காகச் செய்யப்படும் திருமணங்கள் சிறந்ததாக விளங்குவதற்கு பல காரணங்களும் உதாரணங்களும் உள்ளன.



### பாதுகாப்பு:

காதல் என்பது முக்கியம்தான், ஆனாலும் பாதுகாப்பு என்பதும் முக்கியம் தானே. உங்கள் வருங்காலம் நல்லபடியாக அமைய ஒரு உறுதி வேண்டாமா? உங்கள் வருங்காலம் சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும்படி பார்த்துக் கொண்டு திருமணம் செய்யுங்கள்.

### வசதி வாய்ப்புகள்:

திருமணத்துக்குப் பின்னர் அடிப்படைத் தேவைகளும் வசதிகளும் பூர்த்தியாக வேண்டாமா? வெறும் காதலுக்காகத் திருமணம் செய்தால் இந்த வசதிகள் எல்லாம் உங்களுக்குக் கிட்டி விடும் என்று சொல்ல முடியாதல்லவா? நீங்கள் எவரையாவது காதலித்துத் திருமணம் செய்து கொண்டாலும் கூட அவர்களுடன் சந்தோஷமாக குடும்பம் நடத்த இந்த அடிப்படை வசதிகள் வேண்டும் தானே.

### மன நிறைவு:

ஒரு குடும்பத்துக்கு மனதுக்கு நிறைவான வாழ்க்கை வேண்டுமானால் அதற்குப் பணம் தேவை. ஒரு பெண்ணுக்கு வேண்டியது எல்லாம் அவளது குடும்ப பந்தம் நீண்ட ஆயுளோடு விளங்கி அவளது தேவைகள் பூர்த்தியாவதே. இதுவே ஒரு ஆண் என்றால், அவன் குடும்பத்தை அன்பாகக் கவனித்துக் கொள்ளவும் அவனைத் திருப்தியாக வைத்துக் கொள்ளும் ஒரு மனைவியை எதிர்பார்க்கின்றான். பணம் அல்லது காதலை அடிப்படையாக கொண்டதோ எதுவாக இருந்தாலும் அந்தத் திருமண பந்தத்தில் மன நிறைவு கிடைக்கவேண்டும்.

### குடும்ப பந்தம்:


தங்களுக்கு நிகரான அந்தஸ்தை உடைய சம்பந்தத்தை பெறவே பணத்தை அடிப் படையாகக் கொண்ட திருமணங்கள் நடை பெறுகின்றன. சமுதாயக் கோட்பாடுகளை சில நேரம் காதல் திருமணங்கள் உடைத் தெறியும்.

### நீடித்து நிலைத்திட:

காதலுக்காகச் செய்யப்படும் திருமணங்களைவிட பணத்துக்காகச் செய்யப்படும் திருமணம்தான் அதிக நாள்களுக்கு நீடித்து நிற்கும். கேட்பதற்கு வித்தியாசமாக இருந்தாலும் அது தான் உண்மை. அதற்குக் காரணம் உங்களின் காதலும் ஈர்ப்பும் காலப் போக்கில் மறைந்து விடும். தினசரி பிரச்சனைகள், குடும்பத் தேவைகள் மற்றும் வேலைபளு ஆகியவைகள் உங்கள் காதலைத் தேயச் செய்யும். இதனால் அடிக்கடி சண்டையும் சச்சரவும் உண்டாகும். பணத்துக்காகச் செய்யப்படும் திருமணத்திலும் இந்த பிரச்சினைகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணம் என்பது இலங்கைத் தீவின்வடமுனையிலுள்ள ஒருமாநகர மாகும். யாழ்ப் பாண மாவட்டத்தின் தலைநகராகும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குப் பகுதியில் யாழ்ப்பாண நீரேரியை நோக்கியபடிஅமைந்துள்ளது. இலங்கையின் தலை நகரான கொழும்பிலிருந்து 396 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. 1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடமாகாணத்தின் தலைநகரமாக விளங் கிய யாழ்ப்பாணம், அந்த வருடத்தில் தற்காலிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து உருவான வட– கிழக்கு மாகாண சபைக்குத் திருகோணமலையைத் தலை நகரமாக்கிய பின், மாகாணத் தலைநகரம் என்ற நிலையை இழந்தது. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் வடமாகாணத் தலை நகராக யாழ்ப்பாணம் மீண்டும் விளங்குகின்றது. இங்கு தமிழர்கள் பெரும் பான்மையினராக இருந்த போதும், குறிப்பிடத்தக்க அளவில் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். சிங்களவர்கள் மிகவும் குறைவே. சமய அடிப்படையில் யாழ் நகரில், இந்துக்களே பெரும்பான்மையினராக உள்ளனர். இதனை விட போர்த்துக்கீசர் கைப்பற்றுவதற்கு முன்னர் இலங்கையின் வடபகுதியில், இருந்து வந்த தமிழர் அரசும் யாழ்ப்பாண அரசு என்றே அழைக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இயற்றப்பட்ட யாழ்ப்பாணத்தின் வரலாறு கூறும், யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூலில், முற்காலத்தில் இலங்கையை ஆண்ட அரசனொருவனால், இந்தியாவிலிருந்து வந்த யாழிசையில் வல்ல பார்வையற்ற யாழ்பாணன் ஒருவனுக்கு வட பகுதியிலிருந்த மணற்றி (அல்லது மணற்றிடல்) எனும் இடம் பரிசாக அழிக்கப்பட்டதென்றும், அந்தப்பகுதி யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றுப் பின்னர் முழுப்பிரதேசத்துக்குமே இந்தப் பெயர் வழங்குவதாயிற்று என்றும் கூறப்படுகிறது. வேறு சிலர், நல்ல ஊர் என்னும் கருத்தைத் தருகின்ற சிங்களச் சொல்லான, யஹபனே என்பதிலிருந்தோ, அல்லது சிங்கள இலக்கியங்கள் சிலவற்றில், இப்பகுதியைக் குறிக்கப் பயன்பட்ட, யாபாபட்டுன என்ற சொல்லிலிருந்தோ மருவி வந்ததே யாழ்ப்பாணம் என்கிறார்கள். எனினும் யாழ்ப்பாணம் என்ற பெயரில் இருந்தே யஹபனே, யாபாபட்டுன ஆகிய சொற்கள் மருவி வந்ததாகக் கொள்ளப்படுகிறது.

# ஒரு குட்டிக் கதை



கடவுள் கழுதையைப் படைத்து அதனிடம் சொன்னார். 'நீ கழுதையாகப் பிறந்து, நாள் முழுவதும் பொதி சுமப்பாய். உனக்கு சிந்திக்கும் திறனே கிடையாது. புல்லைத் தின்று 50 வருடங்கள் வாழ்வாய்."

கழுதையாகப் பிறந்து 50 வருடங்கள் வாழ விருப்பமில்லை. 20 ஆண்டுகளே போதும் என்றது கழுதை.

அப்படியே ஆகட்டும் என்றார் கடவுள்.

நாயைப் படைத்து அதனிடம் சொன்னார். நீ மனிதனின் வீட்டைப் பாதுகாத்து அவனுக்கு நல்ல நண்பனாய் இருப்பாய். மனிதன் தரும் மிச்ச, மீதிகளை உண்டு 30 வருடங்கள் வாழ்வாய்.

30 வருடங்கள் எனக்கு அதிகம். 15 வருடங்களே போதும் என்றது நாய்.

அப்படியே ஆகட்டும் என்றார் கடவுள்.

கடவுள் குரங்கைப் படைத்து அதனிடம் சொன்னார். 'நீ மரங்களில் கிளைக்கு கிளை தாவி குழந்தைகளை மகிழ்விப்பாய். 20 வருடங்கள் உயிர் வாழ்வாய்'.

எனக்கு 10 வருடங்களே போதும் சாமி என்றது குரங்கு.

அப்படியே ஆகட்டும் என்றார் கடவுள்.

கடவுள் மனிதனைப் படைத்து. அவனிடம் நீ சிந்திக்கும் ஆற்றலுடன் பிறப்பாய். உனது அறிவைப் பயன்படுத்தி எல்லா உயிர்களையும் உனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவாய். 20 வருடங்கள் உயிர் வாழ்வாய் என்றார்.

மனிதன் கடவுளே 20 வருடங்கள் எனக்குப் போதாது. கழுதை வேண்டாமென்று சொன்ன 30 வருடங்களையும், நாயின் 15 வருடங்களையும், குரங்கின் 10 வருடங்களையும் எனக்குத் தாருங்கள் என்றான் மனிதன்.

கடவுள் அப்படியே ஆகட்டும் என்றார். அன்றிலிருந்து மனிதன் 20 வருடங்கள் மனிதனாகவும், பின்னர் திருமணம் செய்து 30 வருடங்கள் கழுதையைப் போல குடும்பப்பாரம் சுமந்தும், குழந்தைகள் வளர்ந்த பின்னர் 15 ஆண்டுகள் நாயைப் போல வீட்டைப் பாதுகாத்தும், கடைசி பத்து வருடங்கள் குரங்கைப் போல தனது ஒவ்வொரு மகன் அல்லது மகள் வீடு சென்று பேரக் குழந்தைகளை மகிழ்வித்தும் வருகின்றான்.

# வெற்றி என்பது ஒரு அடையாளமா?

இந்த உலகத்தில் வெற்றி, தோல்வி எனும் வார்த்தை எப்போது தோன்றியதோ, அப்போதுதான் குழப்பம் என்ற வார்த்தையும் தோன்றியிருக்க வேண்டும். வெற்றி, தோல்வி பற்றிய கண்ணோட்டம் தான் பல பிரச்சினைகளுக்கே அடிப்படையாக உள்ளது. வெற்றியடைவது எப்படி? வெற்றி பெறப்பத்துக் கட்டளைகள் என பல புத்தகங்களும், தோல்வியை கண்டு துவளாதீர்கள் என ஆறுதல் தரும் புத்தகங்களும், வெற்றி, தோல்வியை தீர்மானிக்கும் வழிமுறைகளைப் பற்றி சொன்னாலும், இதுதான் வெற்றி, இது தான் தோல்வி எனத் தீர்மானிக்கும் விதம் வேறு படுகிறது. அதுவும் இந்த வேறுபாடு நாட்டுக்கு நாடு, மதததுக்கு மதம், ஏன் ஆண்களுக்கு ஒரு மாதிரி பெண்களுக்கு ஒரு மாதிரியாகவும் கூட வேறுபடுகிறது.

பணம் நிறையச் சம்பாதிப்பதை வெற்றி என்று எடுத்துக் கொண்டால், கோடீஸ்வரர்கள், மனநோயாளிகளாகவோ, தற்கொலை செய்து கொள்பவர்களா கவோ இருந்திருக்கக் கூடாதல்லவா? காதலித்த பெண்ணையே திருமணம் செய்து கொள்வதை வெற்றி என்று எடுத்துக் கொண்டால், காதல் தம்பதிகள் விவாகரத்து செய்யக் கூடாதல்லவா? தோல்வி பற்றிய கண்ணோட்டம் என்பது சமூக சூழ்நிலைகளினாலும் பெருவாரியான மக்கள் ஆதரிக்கும் கருத்துக்களா லும் நிலை பெறுகிறது. இந்தக் கருத்துக்கள் தான் குடும்பம், அரசியல், ஆன்மிகம், கலைத்துறை, கல்வித்துறை என்று பல்வேறு துறைகளிலும் ஆட்சி செய்து, வெற்றி பெறுகிறவர்களுக்கு சந்தோஷத்தையும் தோல்வி அடைகிறவர்களுக்குத் துக்க[illegible] தலை முறையினர் [illegible] யினருக்குச் சொல்லும் கருத்துக்களில், முக்கால்வாசி இந்த வெற்றி, தோல்வி பற்றிய கண்ணோட்ட மாகத் தான் இருக்கிறது.



ஒரு தலைமுறையினர் மிகப்பெரிய வெற்றி என்று நினைத்தது, அடுத்த தலைமுறை [illegible] விடயமாகி விடுகிறது. [illegible] ஒரு தலைமுறையும் அந்தக் காலகட்டத்தில் சொல்லப்படும் வெற்றி, தோல்வி பற்றிய கருத்துக்களுக்கு இடையே அல்லல் பட்டுக் கொண்டே தான் இருக் கிறது.

வெற்றி, தோல்வி பற்றிய தெளிவு இல்லாவிட்டால் அது தேவையில்லாத மன அழுத்தத்தையும், சோர்வையும், சக்தியற்ற நிலைமையையும் உருவாக்கி விடும். ஒரு வகையினர் வெற்றியை ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடுகிறார்கள், இன்னொரு வகையினர், அமைதியாக இருப்பதே பெரிய வெற்றி என்று கூறுகிறார்கள்.

ஆனால் இரு வகையினருமே, வெற்றி என்ற வார்த்தைக்குள்தான் மாட்டிக் கொண்டு இருக்கிறார்கள். வெற்றி என்பது ஒரு அடையாளமா? அல்லது இயல்பாகவே ஒரு சக்திமிக்க உணர்வா? என்று கேட்டால், அதை ஒரு அடையாளம் என்று தான் எடுத்துக் கொள்ள முடியும்.

இந்த அடையாளம் தான் சிறந்த மாணவன், சிறந்த வியாபாரி , சிறந்த அரசியல்வாதி , சிறந்த மருத்துவர் என்று பல்வேறு முத்திரைகளைப் பெறுகிறது. சில நேரங்களில் இந்த முத்திரை மாறிக் கொண்டு இருக்கும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோல்வி அடைந்தவர்கள் கண் கலங்குவதும், அதைப்பார்த்து பெற் றோர்கள் தாரை தாரையாகக் கண்ணீர் விடுவதும், வெற்றி பெற்று விட்டால், குதிப்பதும் தவறான அணுகு முறைகள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் அழியாது!

செப்ரெம்பர் மாதத்தில் பூமி மீது விண்கல் மோதும் என்ற தகவல் குறித்து அச்சமடையத் தேவையில்லை என நாசா தெளிவுபடுத்தியுள்ளது. இது தொடர்பில் நாசா வெளியிட்டுள்ள செய்தியில்– அடுத்த மாதம் 15 திகதி தொடக்கம் 28 திகதிக்குள் மிகப் பெரிய விண்கல் ஒன்று பூமியின் மீது மோதவிருப்பதாகவும், இதனால் ஏற்படும் பெரும் சேதத்தால் பூமி தனது அழிவை சந்திக்கும் எனவும் பரபரப்பான தகவல் இணைத்தளங்கள் ஊடாக பரப்பப்பட்டு வருகிறது.

பல இணையதளங்கள் விண்கற்களை தாங்கள் பின்தொடர்வதாகவும் அவை பூமியை நோக்கி விழ இருப்பதாகவும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. பூமியை நோக்கி விண்கல் விழும் என்பதான கருத்துக்கு எந்த ஆதாரமும் இல்லை. இந்த திகதிகளைத் தாண்டியும் எந்த விண்கல்லும் பூமியைதாக்காது நாங்கள்தொடர்ந்துஅதனை ஆராய்ந்து வருகிறோம். அடுத்த நூறு ஆண்டுகளுக்கு இது போல எந்த பாதிப்பும் பூமிக்கு இருக்காது என்பது உறுதி. அத்தகைய தூரத்தில் விண்கற்கள் அல்லது வால் நட்சத்திரங்கள் எதுவும் பூமியை நோக்கி வரவில்லை. – என நாசா அறிவித்துள்ளது. (த)

# ரணில் பதவியேற்பையும் வாழ்த்துகின்றார் மோடி

கொழும்பு, ஓக. 22

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துக்கள்ளத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நான்காவது தடவையாக பிரதமராக நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டமைக்காக இந்தியப் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். டுவிட்டர் ஊடாக மோடி இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியதைத் தொடர்ந்து முதலாவதாக வாழ்த்துத் தெரிவித்தவர்களில் நரேந்திர மோடி முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# சீனப் பிரதமரும் வாழ்த்து

கொழும்பு, ஓக. 22

இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளதை சீனாவின் பிரதமர் லீ கெகியாங் வாழ்த்தியுள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை மற்றும் புதிய அரசின்கீழ் இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்திகள் மிகவும் வெற்றிகரமான நிலையை எட்டும்" என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

சீனாவும் இலங்கையும் காலத்தைக் கடந்த நல்ல நண்பர்கள். இருதரப்பும் தந்திரோபாய ஒத்துழைப்பு இணைப்பை ஏற்படுத்தியுள்ளன. இது நேர்மையான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் என்றும் நீடிக்கக்கூடிய நட்புறவைக் கொண்டது. இதன்கீழ் அனைத்து சாத்தியமான துறைகளிலும் பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய ஒத்துழைப்பு காணப்படுகின்றது. இது இரு நாடுகளின் மக்களுக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளை உருவாக்கியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பு இரு நாடுகளினதும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்.

சீன அரசு இலங்கையுடனான உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது. மேலும் அதனை விஸ்தரிக்கவும் ஆர்வம் கொண்டுள்ளது– என்றுள்ளது. (த)

# தேசிய நல்லிணக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

## ஆஸி. அரசு அறிவிப்பு

சிட்னி, ஓக. 22

இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்பதற்கு ஆஸ்திரேலிய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குமென அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிசொப் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்படி கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

அமைதியான முறையில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலினூடாக மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிராந்திய மற்றும் சர்வதேச சவால்களை முறியடிப்பதற்கு, இரு நாட்டுக்குமிடையில் காணப்படும் வலுவான பிணைப்பினூடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்தும் சேவையாற்றக் காத்திருக்கிறோம்.

ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான, நீண்டநாள் உறவு காணப்படுகிறது. அந்த உறவினூடாக வர்த்தக மற்றும் முதலீட்டு உதவிகளைத் தொடர்ந்தும் பரிமாறிக்கொள்ளவுள்ளோம்.

அத்தோடு தேசிய பாதுகாப்பு மற்றும் ஆட்கடத்தலைத் தடுப்பது போன்ற விவகாரங்களிலும் கூடிய கவனமொடுப்பது தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் நெருங்கிச் செயற்படவுள்ளோம். இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்பதற்கு ஆஸ்திரேலிய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளை வெளியிடத் தடை

கொழும்பு, ஓக. 22

2015 புலமைப் பரிசில் பரீட்சையின் வினாத்தாள்களை பரீட்சைகள் ஆணையாளரின் அனுமதி இன்றி பகிரங்கப்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இப் பரீட்சையின் வினாத்தாள்களை, பரீட்சைகள் ஆணையாளரின் அனுமதியின்றி பரீட்சை கண்காணிப்பாளர்கள் வைத்திருப்பதற்கும் – சட்டப்படி வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட காலத்துக்கு முன்னதாக பகிரங்கப்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பரீட்சை ஆணையாளரின் அறிவுறுத்தலை மீறுவோர் அல்லது மீறும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தலை மீறி செயற்படுவோர் தொடர்பாக தகவல் கிடைத்தால், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறு பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள் ளார் என பரீட்சைத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**Raveens EMC Karaveddy**

மேற்படி நிறுவனத்திற்குரிய Grade 11 மாணவர்கள் பங்குபெறும்
IMPROMPTU ORATORY (ENGLISH) AND PRIZE GIVING DAY
முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்)
பரிசளிப்பு விழாவும்

குறிப்பு : சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புக்களுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.
இடம் : நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் கல்யாண மண்டபம்
காலம் : 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 08.30
தலைவர் : ப.ஈஸ்வரநாதன் (நிர்வாகி - ரவீன்ஸ் EMC கரவெட்டி)

CHIEF GUEST
Mr.S.Kokulathasan B.sc (Ag) M.sc (Bot)
(CHAIRMAN, Palmyrah Dvelopment Board of Sri Lanka, Jaffna)
Distribution of Prizes :
Mrs Sarojinidevi Kokulathasan BA Hons
(Rtd. ISA Thenmaradchy educational Zone Chavahacheri)
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
ரவீன்ஸ் கல்விச் சமூகம்

**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை**

வெற்றிடங்கள் : கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.
1.நயினாதீவு 2. எழுவைதீவு 3. அனலைதீவு 4.நெடுந்தீவு 5. யாழ்ப்பாணம் 6. சாவகச்சேரி 7.பருத்தித்துறை 8. சங்கானை 9. தெல்லிப்பளை

தகைமைகள் :
01. க.பொ.த (சா/த)
02. உயரம் - 5'4", மார்பு - 32"
03. நல்ல கண்பார்வையும் நல்ல தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும். (விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

சம்பளம்:
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
EPF + ETF என்பன வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சை :
25.08.2015, 26.08.2015, 27.08.2015 (செவ்வாய், புதன், வியாழன்) மு.ப 1.00 மணிமுதல் பி.ப 2.00 மணிவரை பின்வரும் விலாசத்திலுள்ள காரியாலயத்தில் இடம்பெறும்.

கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை,
இல, 201/7, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**வேலையாள்கள் தேவை**
கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவம் மிக்க வேலையாள்கள் தேவை. கணக்கில் அனுபவமுள்ள வேலையாள்கள் (பெண் பிள்ளைகள்) விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 159 5826

**அறைகள் வாடகைக்கு**
அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உண்டு.(தட்டா தெருச் சந்திக்கு அருகில்)
தொடர்பு : 021 221 9078

**வான் விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள NISSAN வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 195, கோவில் வீதி,
நல்லூர்.
077 251 4986

**தேவை**
கடை ஒன்றில் பணிபுரிய 25 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தேவை
தொடர்பு: 075 498 5400

**ENGLISH PERSONAL CLASSES**
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்
அனுபவம் மிக்க ஆசிரியர் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு : 077 658 9443
யாழ்ப்பாணம்

**பணியாளர் தேவை**
கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்துள்ள சிவகுரு மோட்டோர்ஸ் நிறுவனத்திற்கு ஆண் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
1.கணக்காளர் - (கணக்காய்வில் போதிய அனுபவமும் கணினி அறிவும் வேண்டும்.)
2.எழுது வினைஞர்
3.சமையல்காரர்(கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.)
தொடர்புகளுக்கு: சிவகுரு ஹாட்வெயர், கரடிப்போக்கு, கிளிநொச்சி
எனும் முகவரி[illegible]
தொடர்பு: 077 772 2305


## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
## கேள்வி கோரல்

யாழ் மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை 2015.09.07 – 2016.02.29 வரை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன் புரிக்கிளையில் 2015.08.24 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2015.09.07 ஆம் திகதி பி.ப 2.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விவரத்தினை குறிப்பிட்டு **"தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2015.09.07ஆம் திகதி பி.ப 2.30 இற்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- காகிதாதிகள், எழுதுபொருட்கள்
- ரோணர் வகைகள்
- நுகர்வுப் பொருட்கள்
- ஹாட்வெயர் பொருட்கள்
- மின்இணைப்புப் பொருட்கள்
- இறப்பர் முத்திரைகள்
- உணவு / சிற்றுண்டி வகைகள்
- குடிநீர் / பால்மா வகைகள்
- வாகன ரயர்கள்
- வாகன பற்றிகள்

**முக்கிய குறிப்பு:**

1. விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.
2. பெறுகைக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைக்கப்பெற்று 2 தினங்களுக்குள் பொருள்களை யாழ் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்றவகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. பொருள்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின், அந்நிறுவனத்தினருக்கு யாழ் மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது. இதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நா.வேதநாயகன்
மாவட்ட செயலரும், அரசாங்க அதிபரும்
யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன விடுதலைக்கு ஒன்றுபட்டு உழைப்போம்

## நன்றி நவிலலில் சிவசக்தி ஆனந்தன்

"உரிமைகளுக்காக பேரம்பேசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே தமிழ் மக்கள் உள்ளார்கள் என்பதை மீண்டுமொரு தடவை தமிழ் மக்கள் உணர்த்தியுள்ள நிலையில், இனவிடுதலைக்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்" – என்று வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வெற்றியீட்டிய ந.சிவசக்தி ஆனந்தன் தெரி வித்துள்ளார்.

தனது வெற்றிக்காகவும், கூட்டமைப்பின் பெருவெற்றி க்காகவும் ஆதரவளித்த பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பிற்கும் உளமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

தனது வெற்றிக்காக ஆதரவளித்தவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கும் ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

"பல்வேறு சக்திகள் எமது வாக்குகளைப் பிரிப்பதற்காகக் களமிறக்கப் பட்டபோதிலும் – அதிகாரத்தில் இருந்தவர்கள் அவசர அவசரமாக நிவாரண உதவிகள், அன்பளிப்புகளை வழங்கியபோதிலும், அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் என்று முகம் பார்க்காமல், நாம் என்றுமே உரிமைகளுக்காகப் போராடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே இருக்கின் றோம் என்பதை எமது மக்கள் மிகத் தெளிவாக சகலருக்கும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் தெரி வித்துள்ளனர்.

கடந்தகால எனது கொள்கைகள், வேலைத்திட்டங்கள், பணிகளை ஏற்றுக்கொண்டு அங்கீகாரம் வழங்கி எனக்கு வாக்களித்த வன்னிவாழ் மக்கள், எதிர்காலத்தில் அதனை விடவும் அதிகமாக தங்களுக்குச் சேவையாற்றுமாறு நான் என்றும் தங்களது வீட்டுப்பிள்ளை என்ற உரிமையுடன் உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

நிரந்தர அரசியல் தீர்வுடன் எமது மக்களின் உடனடி பிரச்சினைகளான மீள்குடியேற்றம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போகச்செய்யப்பட்டோரைக் கண்டறிதல், பெண்களை தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு, போரால் அவயங்களை இழந்த விசேட தேவைக்குட்பட்டவர்களின் வாழ்வாதாரம், இளைஞர், யுவதிகளுக் கான வேலைவாய்ப்பு, இவற்றுடன் நிலையான அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒன்றுபட்டு வழங்கிய ஆணையுடன் எனது அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தாங்கள் பூரண ஒத்து ழைப்புகளை நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

என்சுயத்தைப்பற்றி – எனது கொள்கை பற்றி – எனது அரசியல் வேலைத் திட்டங்கள், மக்கள் நலப் பணிகள் பற்றி ஒவ்வொரு கிராமங்கள் தோறும், அந்த கிராமத்திலுள்ள ஒவ்வொரு தமிழ் குடிமகனுக்கும் எடுத்துச்சென்று சேர்ப்பித்து எனது வெற்றிக்காக அரும்பாடுபட்டு உழைத்த ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள், எமது கட்சியின் தோழர்கள், சிவில் சமூக அமைப்புகள், அமைப்புகளின் பிரதிநிதிகள், தாயக – தமிழக – புலம்பெயர் வாழ் உறவுகள் – குறிப்பாக, அரசியல் கைதிகளின் உறவினர்கள், காணாமல்போகச் செய்யப்பட்டவர் களின் உறவினர்கள் மற்றும் ஊடக அன்பர்கள் அனைவரையும் எனது நெஞ்சத்தில் ஏந்தி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கூடவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து பெருவெற்றியீட்ட உதவிய அனைத்துத் தமிழ் மக்களுக்கும் எனது உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" – என்றுள்ளது.

# தமிழ் மக்களுக்கான உரிமைக் குரல் ஓயாது

## குகவரதன் தெரிவிப்பு

"தலைநகர் தமிழ் மக்களின் வாழும் உரிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்காக எனது குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டேயிருக்கும். மாகாண சபையூடாக நான் முன்னெடுத்த சேவைகளை மேலும் விஸ்தரிப்பேன்" – என்று மேல் மாகாண சபை உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச் செயலாளருமான சண். குக வரதன் தெரிவித்தார்.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் எனக்கு வாக்களித்த எனது அன்பான மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, உங்கள் அன்புக்குத் தலை வணங்குகின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் ஐ.தே.கட்சியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சண். குகவரதன் விடுத்துள்ள செய்தியிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:–

"மனித வாழ்க்கையில் வெற்றி, பின்னடைவு என்பது சகஜம். ஆனால், வெற்றியிலும், பின்னடைவின்போதும் தாம் கொண்ட கொள்கை யில் வழிதவறாது – அதனை முன்னெடுப்பதே மனிதத்துவப் பண்பாகும். இந்தப் பண்பிலிருந்து நான் ஒரு போதும் விட்டு விலகமாட்டேன்.

மேல்மாகாண சபைக்குள்ளும் வெளியேயும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தேன். வீதிப் போராட்டங்களில் கலந்து கொண்டேன். அரசு நலன்புரிச் சேவைகளில், ஒதுக்கப்பட்டிருந்த எமது மக்களுக்கு அரச நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தேன்.

எனது இந்த அரசியலுக்கு நாடாளுமன்றத்துக்குள் பரந்துபட்ட அங்கீ காரத்தைப் பெற்றுக்கொள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட்டேன்.

எனது மக்கள் என்மீது நம்பிக்கை வைத்து தமது வாக்குகளை வழங்கியுள்ளமையானது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. என்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, தலைநகர் வாழ் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து உரிமைகளோடு வாழ்வதற்கு எனது குரல் மாகாண சபைக்குள்ளும் அதற்கு வெளியேயும் ஒலிக் கும். இதில் மாற்றமிருக்காது. எம் தலைவர் அண்ணன் மனோ கணேசனின் குரல் எமது மக்களுக்காக நாடாளுமன்றத்தில் ஒலிக்கும். எனது குரல் மாகாண சபையில் ஒலிக்கும்.

நாடாளுமன்றத்திற்குள்ளும் மாகாண சபைக்குள்ளும் தமிழ் மக்களுக்காக ஒலிக்கும் எமது குரல்கள். எம் மக்கள் உரிமையோடு தலை நிமிர்ந்து வாழ வழிவகுக்கும் என் பது நிச்சயமாகும்" – என்றுள்ளது.


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 15 . 11 . 1932

இறப்பு 23 . 07 . 2015



வைரமுத்து கிருஷ்ணபிள்ளை
(வேலுப்பிள்ளை)

கடந்த 23.07.2015 இல் இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு வைரமுத்து கிருஷ்ணபிள்ளை (வேலுப்பிள்ளை) அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (22.08.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

25, காரைக்கா[illegible] லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



16ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 10 . 03 . 1943

உதிர்வு 07 . 08 . 2015



உடுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட

அமரர் தம்பு குமாரசாமி

(குமாரசாமி அன் சன்ஸ் கட்டட ஒப்பந்தகாரர்)

கடந்த 07.08.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.08.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மன் வீதி,
உடுவில் சுன்னாகம்.

குடும்பத்தினர்.


# ஓரம் கட்டப்படுவதனால் அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போகின்றேன்

## பஸில் அறிவிப்பு



தமது கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்காது ஓரம் கட்டப்படுவதனால் முழுமையாக அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் செயற்பாட்டு அரசியலில் இருந்து விலகிக் கொண்டு ஓய்வு பெற்றுக்கொள்ள எடுத்த தீர்மானத்தில் மாற்றமில்லை என அவர் கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களாக பஸில் ராஜபக்ஷ அரசியல் நடவடிக்கை களில் ஈடுபடவில்லை. எனினும், நாடாளுமன்றத் தேர்தலில் தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டதைத் தொடர்ந்து அவரது அரசியல் நடவடிக் கைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்க முயற்சி எடுத்த போதிலும் அதற்கு உரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்நிலையில், தான் ஓரம்கட்டப் படுவதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் பல்கலைக் கழக பேராசிரியர்கள், உப வேந்தர்கள், சட்டத்தரணிகள், முன்னாள் அமைச்சு செயலாளர்கள், தொழில் சார் நிபுணர்கள் மற்றும் தொழிற்சங் கப் பிரதிநிதிகளை சந்தித்த போது தாம் அரசியலை விட்டு விலகிக் கொண் டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் ரீதியான தொடர்புகள் இல்லாத போதிலும் அரசியல்வாதி களுடனான நட்பு தொடரும் என்று பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கிடைப்பதைத் தடுக்க ரணில் சதியா?

கொழும்பு, ஓக. 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் தேசிய அரசு அமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டதனால் எதிர்க் கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கிடையாது என கொழும்பு அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டதனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோர முடியும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூன்றாவது அரசியல் கட்சி என்ற நிலையை தவிர்ப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட திட்டமிட் நடவடிக்கை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின்படி இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைத்தால் மூன்றாவது கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும். இந்நிலை யில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் தனித்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமையால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தற்போது மூன்றாவது அரசியல் கட்சியாக மாறியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நான்காவது கட்சியாகவுள்ளது.

எனினும் அரசியல் அமைப்பின் கீழ் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை கோர முடியுமாயினும் தேசிய அரசு அமைக் கப்பட்டதனால் நாடாளுமன்ற உறுப் பினர்களின் பெரும்பான்மை விருப் பங்களுக்கு ஏற்பவே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படும் சாத் தியம் இருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்

(த)

# தேசியப் பட்டியலில் எம்.பி பதவி வேண்டி போராட்டம்



கொழும்பு, ஓக. 22

தேசியப்பட்டியல் மூலம் திகாம டுல்ல தேர்தல் மாவட்டத்தின் கல் முனைத் தொகுதிக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கப் பட வேண்டும் என வலியுறுத்தி உண் வுத் தவிர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்படுகின்றது.

இந்தப் பேராட்டம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் நேற்றுமுற்பகல் 10 மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் எம்.ஏகாம்பரம் தலை மையில் ஆரம்பமானது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர் கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். அத் துடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் போராட்டக் காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை மீண்டும் உலக அரங்கில் ஏற்றியுள்ளனர் தன்மானத் தமிழர்கள்

## தேசிய பட்டியல் பங்காளிக் கட்சிகளுக்கும் பகிரப்படவேண்டும் என்கிறார் செல்வம்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக ஆதரவைத் தந்துள்ளதுடன் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்தையும் வழங்கியுள்ளனர். இதனூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் உலக அரங்கில் ஏற்றியுள்ளனர் வடக்கு, கிழக்கு தன்மானத் தமிழர்கள். இந்தவகையில் வாக்களித்த மக்களுக்கும் கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைத்த அனைத்துப் பெரியோர், தாய்மார், இளைஞர்களுக்கு நன்றியைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வன்னி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத் திற்கு மீண்டும் தெரிவாகியுள்ள செல் வம் அடைக்கலநாதன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குக் கிடைத்துள்ள இரு தேசியப் பட்டியல் உறுப்புரிமையும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் பகிரப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக ஆரவை தந்துள்ளதுடன் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அந்தஸ் தையும் வழங்கியுள்ளனர். இந்த வகையில் வாக்களித்த மக்களுக்கும் கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைத்த அனைத்து பெரியோர், தாய்மார், இளைஞர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்து டன் தமிழ் மக்கள் மத்தியில் வெற்றுக்கோஷமிடும் சில கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் இன்று நல்லதொரு பாடத்தைப் புகட்டியுள்ளனர். இதனை உணர்ந்து மழைக்கு முளைக்கும் காளான்களான சில அரசியல் கட்சிகளும், அர சியல்வாதிகளும் தமது நிலைமையை எண்ணிக்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் இரு தேசியப் பட்டியில் ஆசனம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்காக வடக்கு, கிழக்கில் களத்தில் நின்ற கூட்ட மைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் வேட்பாளர்களின் கடும் பிரயத்தனமாக உள்ளது. எனவே, இரு தேசியப்பட்டியலையும் தமிழர சுக்கட்சி தனது அங்கத்தவர்களுக்கு வழங்காது ஏனைய அங்கத்துவக் கட்சிகளாக உள்ள மூன்று கட்சிகளில் எவராவது ஒருவருக்கு ஒரு தேசியப் பட்டியல் உறுப்புரிமையை வழங்க வேண்டும். இதன் மூலமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உட்கட்சி பூசல் நிலவுவதாக தமிழர் களிடம் பொய்ப்பரப்புரை செய்யும் உதிரிக்கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போட்டதாக அமையும் – என்றார்.(த–சி)

# அரச விடுதியில் அடாத்தாக வாழ்ந்த பெண் வெளியேற்றம்

மன்னார், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான அரச விடுதியில் அடாத்தாக வாழ்ந்து வந்த பெண் ஒருவர், மன்னார் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக நேற்று வெள்ளிக்கிழமை குறித்த அரச விடுதியிலி ருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை யில் பணியாற்றிய நபர் ஒருவர் மன்னார் பிரதான வீதியில் கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான அரச விடுதி ஒன்றில் பல வருடங்கள் முதல் வாழ்ந்து வந்துள்ளார். எனினும், குறித்த நபர் அமரத்துவம் அடைந்த நிலையில், அவரது மனைவியும் உறவினர்களும் வாழ்ந்துவந்துள்ளனர். குறிப்பாக, இன்றுவரை 33 வருடங்கள் இவர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர்.

எனினும், அவர்கள் அரச விடுதியில் வாழ்வதற்கான காலம் பல ஆண்டுகளுக்கு முன்பே முடிவுற்ற நிலையில், குறித்த அரச திணைக்களம் விடுதியைத் திணைக்களத்திற்கு மீண்டும் தருமாறு கோரியுள்ளனர். ஆனால், அப்பெண்மணி அங்கிருந்து வெளியேறுவதற்கு மறுப்புத் தெரிவித்து தொடர்ந்து அடாத்தாக அங்கு வாழ்ந்துவந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த திணைக்களம் இது தொடர்பாக மன்னார் நீதிமன்றில் வழக்கைத் தாக்கல் செய்திருந்தது. இதனடிப்படையில் நீதி மன்றம் அந்தப் பெண்மணியை விடுதியைவிட்டு விலகுமாறு கடந்த மாதம் அறிவித்திருந்த நிலையில், அப்பெண்மணி மூன்று மாதகால தவணையைக் கோரி யுள்ளார். அதன்படி மூன்று மாத காலம் ஆகியும் அவர் விடுதியை விட்டு விலகாத நிலையில், மன்னார் நீதிமன்றம் அதிரடியாகக் குறித்த பெண்மணியை விடுதியை விட்டுவெளியேற்றியுள்ளது. அவரது உடைமைகள் அனைத்தையும் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–சி)

# 15 அமைச்சரவை அமைச்சு கோருகிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஓக. 22

தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு, அமைச்சரவை அந்தஸ்துள்ள 15 அமைச்சு பதவிகள் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் பிரதியமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகள் 30 அமைச்சு தமக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவான பலருக்கு அமைச்சு பதவிகள் கிடைக்கும் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதேவேளை, பிரதிப் பிரதமர் பதவி ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. பிரதிப் பிரதமர் பதவியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கே கிடைக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி ஆனந்தன்



உடுவிலைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி ஆனந்தன் நேற்று 21.08.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் நாராயணபிள்ளை - பூரணம் தம்பதியரின் மருமகளும் ஆனந்தனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 23.08.2015 ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சு றோட்,
உடுவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா மனுவல்



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரேசம்மா மனுவல் நேற்று (21.08.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி மனுவலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற றொபேட் மற்றும் அரியநாயகம், புஸ்பராணி, ஜெனோவா, ஜோதினி ஆகியோரின் பாசமிகு தாயும், அற்புதராஜா, தேவிகா, ஞானசேகரம் ஆகியோரின் பாசமிகு மாமியும், நிஷாந்தன், தேனுஷா, வினோராஜ், சுமி, சிறிசரண்யா, ரஞ்சித், சிரோஜன், சிரோமி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (22.08.2015) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கம் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.9, ராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பென்ஜமின் குணநாயகம்



154, கோவில் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பென்ஜமின் குணநாயகம் நேற்று வெள்ளிக் கிழமை 21.08.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பென்ஜமின் - அன்னை மேரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்தியர் பே.பிலிப்ஸ் மற்றும் திரேசம்மா தம்பதிகளின் மருமகனும் பிறேமராணி அவர்களின் அன்புக் கணவரும் பபிற்றா, சூரியா, துஷாறா ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசீலன், கலைவேந்தன், கபிரியேல் யூட் ஆகியோரின் மாமனாரும் இரட்சகன் இவான் கிளாறா, ரிஷான், சிறாண், ஜெலின், ஜேசன், சறோன், பென்சமின் ஆகியோரின் அன்புப் பேரனு ம் இந்திராணி, சவுந்தரா தேவி, றொபின்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கென்றி இருதயராஜா மற்றும் எவிலின், சாந்தி நவாலி வைத்தியமணி லியோன் புஸ்பராணி, குரூஸ் ரூபாராணி, நிஷாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (26.08.2015) அன்று பிரான்சில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

162/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
எவிலின் கென்றி (மைத்துனர்)

## மரண அறிவித்தல்

### திருமதி கிருபாசக்தி தர்மதாசன்



இளவாலையைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி நக்கட்டியோடையை வசிப்பிடமாகவும், தற்போது இணுவிலில் வசித்து வந்தவருமான இளைப்பாறிய ஆசிரியை திருமதி கிருபா சக்தி தர்மதாசன் நேற்று (21.08.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளவாலை மெய்கண்டன் மகா வித்தியாலய ஸ்தாபகர், ஏழூர் இராசரத்தினம் சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற சண்முகம் தர்மதாசனின் (இளைப்பாறிய ஆசிரியர்) பாசமிகு மனைவியும், சுலோஜனா, லீலாவதி, செல்லக்குமாரன், சிவகுமாரன் (சிவம்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், ஜெயதாசன் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் மனோகரி, நிர்மலாதேவி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சிவதாசன் மற்றும் குகதாசன் ஆகியோரின் மைத்துனியும், மீரா- விஜயகுமார், தபோதினி- முகுந்தன், செந்தூரன்-சிவகாமி, செந்தீபன், காலஞ்சென்ற சிவாஜினி மற்றும் லக்சிகா-கணாதீபன் ஆகியோரின் மாமியும், மனோகரன்-மீராதேவி, கௌரி-சிறிதரன், ஜானகி-கிறிஸ்ரியன், காலஞ்சென்ற ஆரணி ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை கருகம்பனையிலுள்ள சகோதரன் சிவகுமாரன் (சிவம்) இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, அஞ்சலிக்காக மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டு, பின்னர் கீரிமலை செம்பொன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருகம்பனை,
காங்கேசன்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் வெற்றி தமிழர்களின் நிலைகளில் மாற்றம் ஏற்படாது

'த ஹிந்து' செய்தி

சென்னை, ஓக. 22

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வெற்றியானது, தமிழ் மக்களின் நிலைகளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை கிடையாது என தமிழக முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றுமொரு தேர்தல் தோல்வியை சந்தித்தமையையிட்டு அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். தமிழகம் இராமநாதபுரம் மண்டபம் முகாமிலுள்ள இலங்கை அகதிகளே இவ்வாறு தெரிவித்துள்ளதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மஹிந்தவின் தேர்தல் தோல்வியை வரவேற்கும் அதேவேளை, ரணில் தமிழ் மக்களின் வாழ்க்கையில் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துவார் என்பதில் நம்பிக்கை கிடையாது என அகதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் மக்கள் நீண்ட நாள்களாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு ரணில் தலைமையிலான அரசு நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை வழங்கும் என எதிர்பார்க்கவில்லை.

புதிய அரசு சிங்களப் பெரும்பான்மையைக் கொண்டது என அவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு யதார்த்தமான தீர்வுத் திட்டங்களை வழங்க அரசு ஆயத்தமில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவில் தனித்து வாழ்ந்தாலும் சுதந்திரத்தை அனுபவித்து வருவதாகவும், இந்த நிலைமை இலங்கையில் கிடைக்குமா என்பது சந்தேகமே எனவும் அகதி பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்து ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் தமிழ் மக்கள் மகிழ்ச்சியாக வாழவில்லை. அதிகாரப் பகிர்வு , இடப்பெயர்வு மக்கள் மீள்குடியேற்றம் மற்றும் இராணுவ மயமாக்களை தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என குறித்த பெண் குறிப்பிட்டுள்ளார்– என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கிடைப்பதைத் தடுக்க ரணில் சதியா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் தேசிய அரசு அமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டதனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கிடையாது என கொழும்பு அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டதனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோர முடியும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூன்றாவது அரசியல் கட்சி என்ற நிலையை தவிர்ப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட திட்டமிட்ட நடவடிக்கை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின்படி இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைத்தால் மூன்றாவது கட்சிக்கு எதிர்க்கட்சி பதவி வழங்கப்பட வேண்டும். இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் தனித்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமையால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தற்போது மூன்றாவது அரசியல் கட்சியாக மாறியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்காவது கட்சியாகவுள்ளது.

எனினும் அரசியல் அமைப்பின் கீழ் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோர முடியுமாயினும் தேசிய அரசு அமைக்கப்பட்டதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை விருப்பங்களுக்கு ஏற்பவே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படும் சாத்தியம் இருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் (த)

# தொகுதி வாரியாக வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்கு

யாழ்ப்பாணம், ஓக. 22

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு ஆசனப் பங்கீட்டுக்குத் தகுதிபெற்ற கட்சிகளின் வேட்பாளர்கள் தொகுதி ரீதியாகப் பெற்ற விருப்பு வாக்குகளின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விவரம் யாழ். தேர்தல்கள் திணைக்களத்தினால் நேற்று கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர் தொகுதி வாரியாக பெற்ற விருப்பு வாக்குகளின் விவரம் வருமாறு:- (த-101)

| வேட்பாளர் பெயர் | ஊர்காவற்றுறை | வட்டுக்கோட்டை | காங்கேசன்துறை | மானிப்பாய் | கோப்பாய் | உடுப்பிட்டி | பருத்தித்துறை | சாவகச்சேரி | நல்லூர் | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தபால் வாக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அருந்தவபாலன் கந்தையா | 777 | 2168 | 2897 | 3075 | 3449 | 1874 | 1957 | 14418 | 4137 | 1885 | 2443 | 3855 | 42925 |
| அனந்தராஜ் நடராஜா | 272 | 770 | 1005 | 1001 | 1322 | 3254 | 3046 | 942 | 1004 | 860 | 947 | 985 | 15408 |
| ஆபிரகாம் சுமந்திரன் மதியபரனன் | 1652 | 3558 | 4517 | 5938 | 5908 | 4903 | 5528 | 5540 | 6393 | 5759 | 5740 | 2607 | 58043 |
| ஆறுமுகம் கந்தையா பிரேமசந்திரன் | 971 | 2385 | 2740 | 2563 | 5709 | 1503 | 1966 | 2338 | 2909 | 1630 | 3357 | 1835 | 29906 |
| ஈஸ்வரபாதம் சரவணபவன் | 1391 | 6602 | 3350 | 5327 | 4294 | 2640 | 3009 | 3450 | 4713 | 3748 | 3367 | 1828 | 43719 |
| கந்தர் நல்லதம்பி சிறிகாந்த | 2488 | 4780 | 1176 | 1917 | 1118 | 1550 | 856 | 746 | 2241 | 2086 | 788 | 938 | 20684 |
| தருமலிங்கம் சித்தார்த்தன் | 1199 | 6263 | 5646 | 11036 | 6963 | 3055 | 2634 | 2781 | 5942 | 2196 | 2725 | 3301 | 53741 |
| மதினி நெல்சன் | 415 | 1198 | 971 | 1216 | 1796 | 1821 | 1528 | 1148 | 1209 | 1019 | 832 | 586 | 13739 |
| மாவை சோமசுந்தரம் சேனாதிராசா | 1939 | 5428 | 6686 | 7594 | 5481 | 3722 | 3168 | 3056 | 7588 | 5941 | 4603 | 3576 | 58782 |
| சிவஞானம் சிறிதரன் | 3474 | 2448 | 3464 | 4429 | 4263 | 2586 | 3738 | 5506 | 5531 | 3484 | 28657 | 4678 | 72258 |
| மொத்தம் | **14578** | **35600** | **32452** | **44096** | **40303** | **26908** | **27430** | **39925** | **41667** | **28608** | **53449** | **24189** | **409205** |

## மஹிந்தவுக்குக்

கைலாகு கொடுத்தார். கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலின் போது, கைகொடுக்கவந்த மஹிந்தவுக்குக் கைலாகு கொடுக்க மறுத்திருந்தார் மைத்திரி. இதன் பின்னர், கடந்த ஏப்ரல் மாதம் மைத்திரி – மஹிந்த சந்திப்பின் போதும் இருவரும் ஒருவருக்கு ஒருவர் கைலாகு கொடுக்கவில்லை. இந்த நிலையில் 9 மாதங்களின் பின்னர் நேற்று இருவரும் கைலாகு கொடுத்துள்ளனர். (த-5)

## பிரதமராக

கையெழுத்திடப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலர் துமிந்த திசநாயக்கவும், ஐ.தே.க பொதுச் செயலர் கபீர் காசிமும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். (த-5)

## தேசிய அரசை

அவர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

தேசிய அரசு அமைப்பதற்கு ஒரு சில உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

பவித்திரா வன்னியாரச்சி, குமார வெல்கம மற்றும் டலஸ் அழகப்பெரும போன்றவர்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே ஆளும் தேசிய அரசு பற்றி கருத்து வெளியிட அனுமதியளிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரியிருந்தனர்.

எனினும், தேசிய அரசுக்கு ஆதரவளிக்காத தரப்பினர் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென சந்திரிகா தெரிவித்துள்ளார். கட்சியின் புதிய பொருளாளரான எஸ்.பி. திஸாநாயக்கவும் இதேவிதமான கருத்தை வெளியிட்டிருந்தார். (த)

## புதிய எம்.பிக்கள்

இதில் இடம்பெறவில்லை.

தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள், தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு ஒரு வாரத்துக்குள் தமது உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஐ.நா. விசாரணை

மாகவுள்ள ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச விருப்பம் கொண்டுள்ளதாகவும் பான் கீ மூன் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாதம் ஐ.நா பொதுச் சபை அமர்வில் பங்கேற்கத் திட்டமிட்டுள்ள மைத்திரிபால சிறிசேன, இலங்கையின் பிந்திய நிலைவரங்கள் குறித்து, இதன்போது பான் கீ மூனுடன் பேச்சு நடத்துவார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (த-ரி4)

## தோல்வியுற்ற

யவர்த்தன,ட்திலங்க சுமதிபால, அங்கஜன் இராமநாதன், எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா, மலித் ஜயதிலக்க, பைசர் முஸ்தபா, ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரே தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 12 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதில் 11 பேர் முன்னாள் அமைச்சர்களாவர்.

ஏற்கனவே தேர்தல் ஆணையாளரிடம் வழங்கப்பட்டிருந்த தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த ஜே.ஸ்ரீரங்கா, ஜீ.எல்.பீரிஸ், டியூ. குணசேகர, திஸ்ஸ விதாரண, திஸ்ஸ அத்தநாயக்க, ரொஜினோல்ட் கூரே, ஜீவன் குமாரதுங்க, டிரான் அலஸ், பிரபா கணேசன், பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, பிரியசிறி விஜேநாயக்க, ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மேலும் பேராசிரியர் மொஹமட் ஹூசைன் ரிஸ்மி செரீப், ஷிரால் லக்திலக்க, பேராசிரியர் கொல்வின் குணரத்ன, பேராசிரியர் கபில குணசேகர, கலாநிதி பீ.ஏ.ரத்னபால, கருப்பையா கணேசமூர்த்தி, லெஸ்லி தேவேந்திர, சோமவீர சந்திரசிறி, எம்.எஸ். உதுமா லெப்பை, ஜயந்த வீரசிங்க, எம்.எப்.எம்.முஸ்ஸாமில், கெவிந்து குமாரதுங்க ஆகியோரது பெயர்களும் தேசியப் பட்டியலில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பரிந்துரையின் பெயரிலேயே அங்கஜன் இராமநாதனுக்கு தேசியப் பட்டியலில் இடம் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த)

## ஐ.தே.க.

மலிக் சமரவிக்கிரம, கரு ஜயசூரிய, அத்துரலிய ரத்ன தேரர், கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ன, திலக் மாரப்பன, பேராசிரியர் சீ.ஏ. மாரசிங்க, அனோமா கமகே, எம்.கே.டி.எஸ். குணவர்த்தன, சிறினால் டி மெல், ஏ.ஆர். ஹபீஸ், எம்.எச்.எம். சல்மான், எம்.எச்.எம். நாவீ, டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். (த-5)

## மக்களின் ஆணையை

பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று பிரதம ராகப் பதவியேற்றுள்ளார். அதே வேளை, தேசிய அரசொன்றை அமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நேற்றுப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி– பிரதமர் தலைமையில் அமையவுள்ள தேசிய அரசு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் சம்பந்தனிடம் நேற்று உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனவரி 8ஆம் திகதி ஆட்சி மாற்றத்திற்காக – நல்லாட்சிக்காக ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு மக்கள் ஆணை வழங்கினர். அதனைத் தொடர்ந்து அந்த மாற்றத்துக்கு ஒப்பான –நல்லாட்சியை மகிமைப்படுத்த கடந்த 17ஆம் திகதியும் பொதுத் தேர்தலில் மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்கேற்ப ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகப் பதவியேற்றுள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம். அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள தேசிய அரசையும் வரவேற்கின்றோம்.

இந்தத் தேசிய அரசு நாட்டிலுள்ள இனப்பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் – என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அதுல் கெசாப், தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் நேரில் நேற்றுக் கையளித்துள்ளார். (த)

# காணாமற்போனோர் ஆணைக்குழுவின் அமர்வு இன்று மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஓக. 22
காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மூன்றாம் கட்ட அமர்வுகள் இன்று சனிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளன.
மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை முதல் 25 ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறவுள்ளன.
இதற்கமைய இன்றும், நாளையும் மண்முனை தென்எருவில்பற்று மற்றும் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் கோரளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலும் ஆணைக்குழுவின் அமர்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (த)

## யாழ்ப்பாணச் சந்தியில் விபத்து; பொலிஸார் ஒருவர் நேற்று சாவு

கொழும்பு, ஓக. 22
அநுராதபுரம் – யாழ்ப்பாணச் சந்தியில் டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்ட விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மதவாச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.
விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு, டிப்பர் வாகனமும், மோட்டார் சைக்கிளொன்றும் மோதி விபத்துக்குள்ளானதுடன், விபத்தில் அநுராதபுரம் உடமலுவ பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த)

## போர்க் குற்றப் பொறியில் சிக்கவைக்க இடமளியோம்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 22
போர்க் குற்றச் செயல்கள் என்ற பொறியில் நாட்டைச் சிக்க வைக்க எவருக்கும் அனுமதியளிக்கப்படமாட்டாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்குவதாகத் தெரிவிக்கவோ அல்லது போர்க் குற்றச் செயல்களில் சிக்க வைக்கவோ இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
நாட்டின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படாது.இந்த விடயம் குறித்து மக்களுக்குப் பொறுப்புக் கூறத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை நாட்டில் ஜனாதிபதி அல்லது பொதுத் தேர்தல்கள் நடைபெறாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த எதிர்க்கட்சி தரப்புக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் ரணவக்க வலியுறுத்தியுள்ளார். (த)

## தேர்தல் தோல்விக்கு மைத்திரியே பொறுப்பு

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் தோல்விக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பு கூற வேண்டுமென ஜே.என்.பி.யின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல வழிகளில் தடைகளை ஏற்படுத்தியதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
தடைகளை ஏற்படுத்தியிருக்காவிட்டால் அதிகளவு ஆசனங்களை வென்று ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்திருக்க முடியும் எனவும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வலுவான ஓர் எதிர்க் கட்சியாக எதிர்காலத்தில் செயற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
இறுதி நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராகக் கடிதம் வெளியிட்டமை தேர்தல் தோல்வியில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
கட்சியினதும் கூட்டணியினதும் பொதுச் செயலாளர்களைப் பணி நீக்கியமை, கடிதம் அனுப்பியமை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியைத் தடுத்து நிறுத்தியதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
கொழும்பு, கண்டி, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்ட தேர்தல் முடிவுகள் ஆச்சரிமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் இது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் விமல் வீரவன்ச கூறியுள்ளார். (த)

## தேர்தல் முடிவால் மத நல்லிணக்கம்

### ஏற்படும் என்கிறது பிரான்ஸ்

கொழும்பு, ஓக. 22
தேர்தல் முடிவுகள் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழியமைக்கும் என பிரான்ஸ் அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
கடந்த 17 ஆம் திகதி நடைபெற்று முடிந்த இலங்கைத் பொதுத் தேர்தல்கள் தொடர்பில் இவ்வாறு கருத்து வெளியிடப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் மனித உரிமை மேம்பாடு மற்றும் இன நல்லிணக்க முனைப்புக்களில் [illegible] படும் என இதன்போது அந்நாட்டு அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
மிகவும் அமைதியானதும் சுமூகமானதுமான முறையில் தேர்தல் நடத்தப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது எனவும் குறிப்பிட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளதாகவும் பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.
இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவும் புதிய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயார் என பிரான்ஸ் அரசு மேலும் தெரிவித்துள்ளது. (த)

## தேர்தலின் பின்னர் 5 சட்ட மீறல்கள்

பொதுத் தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.
இதேவேளை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என அது மேலும் கூறியுள்ளது.
பதிவாகியுள்ள முறைப்பாடுகளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்காக அந்த முறைப்பாடுகளை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த)

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு இடையூறுகள் ஏற்படின் அறிவிக்கவும்

கொழும்பு, ஓக. 22
நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் காலை 9.30 மணிக்கு முன்னரே பரீட்சை நிலையத்துக்கு சமூகமளிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.
இம்முறை 2,907 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சை நடைபெறும் போது ஏதாவது இடையூறுகள் ஏற்படுமாயின் 0112784208, 0112784537 அல்லது 1911 என்ற இலங்கங்களுடன் பரீட்சைகள் திணைக்களத்துக்கும் 0112421111 அல்லது 119 என்ற இலங்கங்களுடன் பொலிஸாருக்கும் அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (த)

## தொண்டாவுக்கு அமைச்சுப் பதவி?



கொழும்பு, ஓக. 22
ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான தேசிய அரசாங்கத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட தாம் தயாராக உள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.
இ.தொ.க.வின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் பொதுத் தேர்தலை தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடி இருந்தனர். இதன்போது தேசிய அரசில் அங்கம் வகிப்பதற்கு அவர்கள் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இந்நிலையில், உருவாகவுள்ள தேசிய அரசில் ஆறுமுகன் தொண்டமானுக்கு அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.
அந்தவகையில், ஆறுமுகன் தொண்டமான் மற்றும் முன்னாள் பொருளாதாரப் பிரதி அமைச்சரும், இ.தொ.க.வின் தலைவருமான முத்து சிவலிங்கமும் வெற்றியீட்டி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸை வீழ்த்தியது யாழ்.மத்தி

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 15வயதுப்பிரிவு அணியினருக்கான துடுப்பாட்டத்தொடரின் இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது யாழ் மத்திய கல்லூரி அணி.



நேற்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக இயலரசன் 30 ஓட்டங்களையும், டிலோசியன் 28 ஓட்டங்களையும், மதுசன் 26 ஓட்டங்களையும் கிளிங்ரன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் கஜதீபன் 3 இலக்குகளையும் செந்தூரன் 2 இலக்குகளையும் அபினாஸ், ஜெகூரன் இருவரும் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

203 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 50 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களை மட்டும் பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சௌமியன் 43 ஓட்டங்களையும், பிரசாந் 26 ஓட்டங்களையும், அபினாஸ் 28 ஓட்டங்களையும், டனுசன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் நிதுசன் அதிகபட்சமாக 2 இலக்குகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் விருதை யாழ். மத்தியகல்லூரி அணியின் இயலரசனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் அணியின் சௌமியனும் சிறந்த பந்துவீச்சாளராக யாழ். மத்திய கல்லூரி அணியின் கலக்சனும் சிறந்த களத்தடுப்பாளராக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் அபினாஸும் தெரிவானார்கள்.

(ம-23)

# சென்.சேவியர் - சென்.மேரிஸ் இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 22

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்களில் சக்கோட்டை சென்.சேவியர் அணி, கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி ஆகியவை வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் அணியை எதிர்த்து கொற்றவத்தை றேஞ்சஸ் அணி மோதிக் கொண்டது. இதில் சக்கோட்டை சென்.சேவியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி மோதிக்கொண்டது. இதில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

(ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 22

**ஏ.எல். வி.கழகத்தொடர்**

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி சில்வேஸ்ரார் அணியை எதிர்த்து காரைநகர் கலாநிதி அணி மோதவுள்ளது.

**மறுமலர்ச்சி வி.கழகத்தொடர்**

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணியை எதிர்த்து புதுமட வைகறை அணி மோதவுள்ளது.

**உடற்கல்வி ஆசிரியர் சங்கத்தொடர்**

வடமாகாண உடற்கல்வி டிப்பிளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரில் இன்றையதினம் நடைபெறும் ஆட்டங்களாக மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் அணியை ஏதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

(ம-23)

**கழுகுகள் வி.கழகத்தொடர்**

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும்

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-108)

# சென்.அன்ரனிஸ், கலைமகள் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 22

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை கலையொளி அணியை எதிர்த்து ஈவினை கலைமகள் அணி மோதிக்கொண்டது. இதில் ஈவினை கலைமகள் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## உதைபந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 22

வடமாகாண உடற்கல்வி டிப்பிளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. குறித்த தொடரில் 30 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-23)

# துடுப்பாட்டத்தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 22

மாதனை விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. குறித்த தொடரில் 50 அணிகள் பங்குபற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-23)

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைத்தவர்களுக்கான செய்முறைப் பரீட்சை இன்று சனி மற்றும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. எனவே எழுத்து பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ம-23)

# பேச்சைக் குறைங்க தம்பிங்களா



தேவையில்லாமல் பேசுவதை நிறுத்திவிட்டு சிறப்பாக விளையாடி வெற்றிபெறப் பாருங்கள் என்று இந்திய வீரர்களுக்கு அணியின் முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டிய நிலையில், அடுத்தடுத்து இலக்குகளை இழந்து அதிர்ச்சி தோல்வியடைந்தது. எளிதாக வெற்றி பெறவேண்டிய இந்த ஆட்டத்தில் சொதப்பி கோட்டை விட்டதால் அணித்தலைவர் கோஹ்லி மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் இந்திய அணியின் மோசமான ஆட்டம் பற்றி கவாஸ்கர் தெரிவிக்கையில் 'தேவையில்லாமல் ஆக்ரோஷம், அதிரடியாக விளையாடுகிறேன் என்று வெட்டியாக பேசிக்கொண்டு இருப்பதை விட்டுவிட்டு சரியாக விளையாடி வெற்றிபெற வேண்டும். இந்த மோசமான தோல்வி அணியின் தன்னம்பிக்கையை குலைக்க கூடியது. முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்று விட்டு தோல்வியைத் தழுவியது இந்திய அணிக்கு மிகப்பெரிய பாடமாக இருக்கும்' -என்றார். (ம)

## பண்டாரவன்னியன் கிண்ணத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 22

வவுனியா லீக்கின் முதல்தர அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பமாக்வுள்ளது.

குறித்த தொடரில் யங்ஸ்ரார் அணி, மருதநிலா அணி, அல்ஹிஜிரா அணி, வடதாரகை அணி, ஈஸ்வரன் அணி, கோல்டன் பிரதர்ஸ் அணி, ஈக்கிள்ஸ் அணி ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-23)

# றொனால்டாவின் விநோத ரசிகர்!



நட்சத்திரக் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள். ஆனால் 17 வயது சாண்டாவைப் போல் ஒரு ரசிகரை பார்த்திருக்க முடியாது. தனது தீவிர ரசிகர்களில் சாண்டோவும் ஒருவர் என்று றொனால்டோவே தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கைச் சேர்ந்தவர் சாண்டா. பல லட்சம் ரூபாய்களைச் செலவு செய்து தன்னை ஒரு றொனால்டோவாக மாற்றிக்கொண்டிருக்கிறார். தலை முடி, உடைகள், நடப்பது, பேசுவது என்று ஒவ்வொரு விதத்திலும் றொனால்டோவை அப்படியே செய்து காட்டுகிறார். தன்னுடைய பெயரையும் சாண்டா றொனால்டோவாக மாற்றிக் கொண்டு விட்டார். ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட் அணிக்காக ஆடிவரும் றொனால்டோவை இந்த ஆண்டு மட்டும் 5 முறை சந்தித்துவிட்டார் சாண்டா. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காவைப் பின்தள்ளிய மத்தியூஸ்



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள புதிய துடுப்பாட்டத் தரவரிசைப் பட்டியலில் சங்காவைப் பின்தள்ளி ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளார் அணித் தலைவர் மத்தியூஸ்.

சர்வதேச கிரிக்கெட் வாரியம் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் 860 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்தை பிடித்துள்ளார். அதேசமயம் இலங்கை அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்காரா 851 புள்ளிகளுடன் 6ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இலக்குக் காப்பாளர் சந்திமால் 646 புள்ளிகளுடன் 23ஆவது இடத்திலும், திரிமன்னே 4 இடங்கள் முன்னேறி 78ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

குறித்த தரவரிசையில் முதலிடத்தில் ரூட்டும், இரண்டாவது இடத்தில் வில்லியர்ஸும் மூன்றாவது இடத்தில் சிமித்தும் உள்ளனர். (ம)

# சங்கா விடைபெறும் ஆட்டம் ஆரம்பம்
# இலங்கை நிதான ஆட்டம்




இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் இரண்டாம் நாளில் இந்தியா 393 ஓட்டங்களைக் குவித்ததுடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை 140–3 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் கோஹ்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ராகுலின் சதம் மற்றும் ரோகித் சர்மா, கோஹ்லி இருவரினதும் அரைச்சதம் கைகொடுக்க முதலாம்நாளின் முடிவில் இந்தியா 6 இலக்குகள் இழப்புக்கு 316 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சகா 19 ஓட்டங்களுடனும் அஸ்வின் ஓட்டம் எதனையும் பெறாத நிலையிலும் இரண்டாம் நாளுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கினர். இரண்டே ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது அஸ்வினின் ஆட்டம். சகாவுடன் இணைந்தார் மிர்ஷஜு. சொல்லிக்கொள்ளும் படியான இணைப்பாட்டம். அரைச்சதம் கடந்தார் சகா. 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மிர்ஷஜு. சில பந்துப் பரிமாற்றங்களிலேயே சகாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இசாந்த சர்மா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் இந்தியா 393.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் ஹேரத் 4 இலக்குகளையும் சமீர, மத்தியூஸ், பிரசாத் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

394 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. ஒரேயொரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. தற்பொழுது இலங்கை 1:1. சில்வாவுடன் இணைந்தார் சங்கக்காரா. நிதானமான பாணியில் சில்வா, ஆமைவேகத்தில் சங்கா. இணைப்பாட்டம் மெல்ல மெல்ல நகர்ந்து இலங்கையின் சரிவை சமன்செய்தது. அணியின் ஓட்டம் 75ஆக இருந்த பொழுது அஸ்வினிடம் வீழ்ந்தார் சங்கா. சங்காவுக்கான கரகோசங்கள் வானைப் பிளந்தன. இந்திய வீரர்கள் வெற்றிக்கொண்டாட்டத்தை விடுத்து சங்காவுக்கு உரிய மரியாதையை உரிய முறையில் வழங்கினார்கள். பவிலியனில் சங்காவின் நண்பரான மஹேலவும் சங்காவுக்கான மரியாதையை தவறாமல் செய்துகொண்டிருந்தார். இடத்தை நிரப்பினார் திரிமன்னே. திரிமன்னே நிதானிக்க மறுமுனையில் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் சில்வா. மத்தியூஸ் நிதானிக்க இரண்டாம் நாள் முடிவில் இலங்கை 140–3. திரிமன்னே 28 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 19 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## கிளார்க் விடைபெறும் ஆட்டம் ஆரம்பம்
## ஆஸி. ஆமைவேக ஆரம்பம்



இங்கிலாந்து–ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்று முன்தின முடிவில் ஆஸ்திரேலியா 287–3 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க களத்தில் ஆரம்ப வீரர்களாக றோயேர்ஸ் மற்றும் வோர்ணர். பந்துப் பரிமாற்றத்துக்கு ஓரிரு ஓட்டம் என்ற சராசரியிலேயே முதல் 7 பந்துப் பரிமாற்றமும் ஓடி மறைந்தது. நிதானத்துக்கேற்ப இலக்குச்சரிவும் ஏற்படவில்லை. களத்தில் வோர்ணர் நின்றும் ஆஸ்திரேலியா இவ்வாறு ஆமைவேகம் காட்டுவது இதுவே முதல்முறை. பத்துப் பந்துப் பரிமாற்றங்கள் கடந்ததும் படிப்படியாக ஆரம்பித்தது வோர்ணரின் மிரட்டல். காட்டிய நிதானத்தை தொடர்ச்சியான பவுண்டரிகள் மூலம் ஈடுசெய்தார். அரைச்சதமும் கடந்தார். சராசரி 65இனை எட்டியது. இணைப்பாட்டமாக 110 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்த வேளையில் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் றொயேர்ஸ்.

களத்தில் ஆஸியின் எதிர்கால தலைவர் சிமித். டெஸ்ட் ஆட்டத்துக்கே உரிய பாணியில் சுமாரான சராசரியில் விளையாடிக்கொண்டிருந்தார். மறுமுனையில் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். இறுதி டெஸ்டில் துடுப்பெடுத்தாட கிளார்க். 15 ஓட்டங்களுக்கு அப்பால் முடியவில்லை அவரால். சிமித்துடன் இணைந்தார் வோக்ஸ். அரைச்சதம் கடந்தார் சிமித். ஆட்டநேர முடிவுவரை இணைப்பாட்டத்தை பிரிக்க இங்கிலாந்தின் பந்து வீச்சாளர்களால் முடியவில்லை. இதுவரை இணைப்பாட்டமாக 101 ஓட்டங்கள் பகிரப்பட்டுள்ளது. சிமித் 78 ஓட்டங்களுடனும் வோக்ஸ் 47 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## சங்காவுக்கு கோஹ்லி புகழாரம்




சங்கக்காரா தனது இறுதி ஆட்டத்தை இந்தியாவுக்கு எதிராக விளையாடுவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள்ளார் இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்காரா தற்பொழுது கொழும்பில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

சங்காவின் ஓய்வு தொடர்பாக இந்திய டெஸ்ட் அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்ததாவது, சங்கக்காரா மிகச்சிறந்த அன்பான மனிதர். மைதானத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அவருடன் நான் பேசி பழகியிருக்கிறேன். சிறந்த ஆட்டநுணுக்கம் மற்றும் அவரது வழியில் உலக முழுவதும் சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்துள்ளார். அவருடைய ஓட்டங்களே அவரைப்பற்றி பேசவைக்கும். எங்களுக்கு எதிரான அவரது கடைசி ஆட்டம் அமைந்ததால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது எங்களுக்கு ஒரு சிறப்பான நிகழ்வு. மேலும், இந்தியாவுக்கு எதிராக அவர் மிகச் சிறப்பான வகையில் ஓட்டங்கள் குவிக்கவில்லை. இருப்பினும் கிரிக்கெட்டுக்குப் பிறகு அவரது வாழ்க்கை சிறப்பாக அமைய நான் வாழ்த்துகிறேன்– என்றார். சங்கா மைதானத்துக்கு வரும்பொழுது துடுப்பு மட்டைகளை இருபுறமும் ஏந்தி நின்று வீரர்கள் கௌரவம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பாகிஸ்தான் வீரர்களின் தடை நீங்கியது



கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த டெஸ்ட் தொடரின்போது சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களான சல்மான் பட், வேகப்பந்து வீச்சாளர்களான முகமது ஆமிர், முகமது ஆசிப் ஆகியோர்மீது விதிக்கப்பட்ட தடை செப்ரெம்பர் மாதத்தில் நிறைவடைவதாகவும், பின்னர் அவர்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச ஆட்டங்களில் விளையாடலாம் என்றும் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

குறித்த வீரர்கள் தொடர்பாக ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில் பாகிஸ்தான் வீரர்கள் மீது சுமத்தப்பட்ட தடை செப்ரெம்பர் முதலாம் திகதியுடன் நிறைவடைகிறது. இரண்டாம் திகதியில் இருந்து அவர்கள் பாகிஸ்தான் சீருடை அணியலாம். இருப்பினும் அவர்கள் தொடர்ந்து கண்காணிப்பு வலையத்தில் இருப்பார்கள் – என்றுள்ளது. (ம)



*ஐ.பி.எல். தொடரின் பின்னர் தொடர்ச்சியாக ஓய்வில் இருந்து வரும் இந்திய அணித்தலைவர் டோனி, இந்திய இராணுவத்தில் இணைந்து பல்வேறுபட்ட பயிற்சிகளைப் பெற்றுவந்தார். இவற்றில் பரசூட்டில் இருந்து குதித்தலும் ஒன்றாகும். இந்த பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார் டோனி. (ம)*

## பதுங்குவதைவிடப் பாயுங்கள்




தற்பொழுது அணியில் உள்ள இந்திய வீரர்கள் சுழற்பந்துவீச்சை எதிர்கொள்ளும் போது திணறுகின்றனர். சேவாக்கைப் போல அடித்து விளையாடினால் அல்லது லக்ஷ்மனைப் போல கால்களை துல்லியமாக நகர்த்தி விளையாடினால் சுழற்பந்துவீச்சை எதிர்த்து சாதிக்க முடியும். இவ்வாறு தெரிவித்தார் இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளரான ராகுல் ராவிட்.

இந்திய வீரர்கள் சுழற்பந்து வீச்சில் திணறுவது தொடர்பாக ராவிட் தெரிவித்ததாவது தற்போது சர்வதேச அணியில் இருக்கும் வீரர்கள் நிறைய சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில்லை. சுழற்பந்து வீச்சை சமாளிக்க கால்களை சுறுசுறுப்பாக பயன்படுத்துவது உதவும். நான் விளையாடிய காலத்தை எடுத்துக் கொண்டால் கூட லக்ஷ்மன் கால்களை பயன்படுத்துவார். மேலும் கிரீஸை நன்றாக பயன்படுத்தி பின்னால் வந்தும் ஆடக்கூடிய திறனுடையவர். எங்கள் அனைவரையும் விட சேவாக் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக அதிகமாக கால்களை நகர்த்தி எகிறி வந்து ஆடுவார். இவர்களை அப்படியே பின்பற்ற வேண்டும் தற்பொழுது உள்ள வீரர்கள் –என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெடரருக்கு வெற்றி



அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் காலிறுதிக்கு முன்னய சுற்றான மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இரண்டாவது சுற்றில் பெடரரை எதிர்த்து ஸ்பெயினின் ராபர்ட்டோ பவுஸ்திடா மோதினார். இந்த ஆட்டத்தில் 6-4, 6-4 என்ற நேர் செட்களில் பெடரர் மிக இலகுவான வெற்றியைப் பதிவு செய்தார். (ம)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
aat [ Sri Lanka]
Foundation, Intermediate, Final
AA1, AA2, AA3
Qualification- GCE O/L 6 PASSES
MEDIUM - TAMIL & ENGLISH
ஆரம்பம் :- -22-08-2015 சனிக்கிழமை.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Further Details
JAFFNA COLLEGE
Undergraduate Dept
Contact Tel number - 0212223382 , 0212229149

# பென்சிச் தொடர்ந்தும் அசத்தல்



அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் பென்சிச் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் பெலின்டா பென்சிச் 7-5, 6-3 என்ற நேர் செட்களில் முன்னணி வீராங்கனையான ஜெர்மனியின் ஏஞ்ஜெலிக் கெர்பரைத் தோற்கடித்தார். கடந்த வாரம் நடைபெற்ற ரோஜர் கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்ற பென்சிச், அடுத்ததாக இத்தாலியின் பிளேவியா பென்னட்டாவை சந்திக்கிறார். இந்தத் தொடரிலிருந்து காயம் காரணமாக வீனஸ் வில்லியம், செரபோவா இருவரும் பாதியிலேயே வெளியேறியுள்ளனர். (ம)

# வீரர்கள் மீது நம்பிக்கையுண்டு



பஞ்சாப் அணி வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை இவ்வாறு தெரிவித்தார் அந்த அணியின் உரிமையாளரான பிரீத்தி ஜிந்தா.

ஐ.பி.எல். சூதாட்ட வழக்கில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து 'பஞ்சாப் வீரர்கள் சிலரின் நடவடிக்கைகள் சந்தேகப்படும் படியாக இருந்தாக்வும், அவர்களுக்கும் சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாகவும் ஜிந்தா தெரிவித்துள்ளார்' என்று ஒருசில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த நிலையில் செய்திகள் முழுவதுமாக பொய்யானவை என்று மறுத்துள்ள ஜிந்தா பஞ்சாப் வீரர்கள் மீது முழுவதுமான நம்பிக்கை உள்ளது என்றும் முழு நட்புறவோடு வீரர்களுடன் பழகுவதனால் எனக்கோ அல்லது அணிக்கோ எவரும் துரோகம் செய்யமாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

hotel
MANAGEMENT
SINGAPORE
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L.
~பாடநெறிக்கட்டணம் 350,000/= 1 வருடம்
~மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/=
100% Guaranteed Visa
Hotline 077 5015060
iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
021- 4926222

அறுபதாம் நாள் நினைவஞ்சலி



அமரர்
வல்லிபுரநாதன் தீபராஜ்
25.06.2015 இங்கிலாந்தில் இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் வல்லிபுரநாதன் தீபராஜ் அவர்களது ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் அவரின் சொந்த இடமான புளியங்கூடல் இல்லத்தில் நாளை (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும். அந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
ஐக்கிய வீதி,
புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.
வல்லிபுரநாதன்
குடும்பத்தினர்.
0779057455

# சங்காவின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது

இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையிலே தற்பொழுது நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துடன் முன்னணி வீரரான சங்கா சர்வதேச ஆட்டங்களுக்கு விடைகொடுக்கிறார். இந்த நிலையில் சங்காவின் இழப்பு இலங்கைக் கிரிக்கெட்டால் ஈடுசெய்ய முடியாதது என்று தெரிவித்துள்ளார் இந்திய ஏ அணியின் பயிற்சியாளர் ராவிட்.

சங்கா தொடர்பாக ராவிட் தெரிவித்ததாவது 'உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர் சங்ககார. டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் 5ஆவது இடத்திலும், அதிக சதம் அடித்தவர்களில் 4ஆவது இடத்திலும், அதிக இரட்டை சதம் [illegible] இடத்திலும் உள்ளார். [illegible] அணிக்கு மிகப் பெரிய இழப்பு. எந்த ஒரு வீரராலும் அவரது இடத்தை நிரப்ப முடியாது. அதற்கு இன்னமும் பல வருடங்கள் காத்திருக்க வேண்டும்.' என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org